விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

Dishtv
பழைய Dishtv
ரிஸீவர்க்கு பதிலாக
புதிய ரிஸீவர்
700/= மட்டுமே
SATS-TECH
Phone: 021 222 8812, Mob:- 076 886 1160
(C-5012)

சங்கு 20 வள்ளுவர் ஆண்டு 2049 மார்கழி 23 திங்கட்கிழமை (07.01.2019) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 019

## சு.கவுடன் மகிந்த கூட்டணி மோசமான விளைவை ஏற்படுத்தும்

### குமார வெல்கம எச்சரிக்கை

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி இன்று பாரிய நெருக்கடிகளுக்குள் தள்ளப்பட்டுள்ளது. முறையான தலைமைத்துவம் ஒன்று காணப்படாமையின் காரணமாகவே இந் நிலை இன்று தோற்றம் பெற்றுள்ளது எனத் தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம,

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு 2015 ஆம் ஆண்டு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இழைத்த துரோகமே இன்று பொதுஜன பெரமுன முன்னணி என்ற 23

## குடும்ப உறவுகளின் தொடர் இழப்பு

### விடுதலையை வலியுறுத்தி 3வது நாளாக போராட்டம்

(யாழ்ப்பாணம்)

அநுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதியொருவர் தனது விடுதலையை வலியுறுத்தி மூன்றாவது நாளாக நேற்றும் உணவு தவிர்ப்பு போராட்டத்தை தொடர்ந்துள்ளார். 10 வருடங்களாக சிறையில் இருக்கும் குறித்த 23

## வடக்கின் புதிய ஆளுநராக தமிழர் ஒருவரை நியமியுங்கள்!

### சீ.வீ.கே.சிவஞானம் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

வடக்கின் ஆளுநராக தமிழர் ஒருவரை நியமிப்பது சிறந்தது. இது தொடர்பில் ஜனாதிபதி கருத்தில் கொள்ள வேண்டும் என்று வடக்கு மாகாண முன்னாள் அவைத் தலைவரும் இலங்கை தமிழரசுக் கட்சியின் துணைத் தலைவருமான சீ.வீ.கே.சிவஞானம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அத்துடன் மூவின மக்களும் வாழும் கிழக்கு மாகாணத்தில் இனக்குரோதமுடையவன் என தன்னை அடையாளப்படுத்திய ஒருவரை ஆளுநராக நியமித்திருப்பது ஐக்கியத்திற்கு வித்திடாது. 23

# சமஷ்டியை அறியாதவர்களே பிரிவினையை தூண்டுகின்றனர்!

## ஒற்றையாட்சிக்குள்ளேயே அதிகாரம் பகிரப்படும் என்கிறார் ராஜித



**(கொழும்பு) சமஷ்டி என்றால் என்னவென்று தெரியாதவர்களே பிரிவினைவாதத்தை தூண்டி வருகின்றனர். இருந்தும் ஒற்றையாட்சிக்குள்ளே அதிகார பகிர்வு இடம்பெறும் என அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.**

அரசாங்கம் சமஷ்டி ஆட்சியை ஏற்படுத்தப் போவதாக மேற்கொள்ளப்படும் பிரசாரம் தொடர்பில் கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அத்துடன் எதிர்க்கட்சிகள் தேர்தலுக்கு செல்லவேண்டும் என தெரிவித்து வருகின்றனர். தற்போதைய நிலையில் தேர்தலுக்கு செல்லவேண்டும் என்றால் பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை உறுப்பினர்களின் ஆதரவு தேவை. அவ்வாறில்லாமல் இவர்களுக்கு தேர்தல் தேவை என்பதற்காக தேர்தலை நடத்த முடியாது எனவும் இதன்போது தெரிவித்தார்.

(விரிவான செய்தி 3-ம் பக்கத்தில்...)

## வரலாற்றுச் சின்னமாக யாழ்ப்பாணம் மாற வேண்டும்

### ஒஸ்லோ பிரதி மேயர்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வரலாற்றுச் சின்னமாக மாற வேண்டுமென்பதுடன், தமிழர்கள் இந்த மண்ணில் தமது இருப்பை நிலைநிறுத்த வேண்டுமென்றும் ஒஸ்லோ பிரதி முதல்வர் கம்சாயினி 23

## அமைச்சரவை கூட்டம் இன்று

(கொழும்பு)

இந்த வாரத்துக்கான அமைச்சரவைக் கூட்டம் இன்று காலை 9 மணிக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நடைபெறவுள்ளதாக அரசாங்கத் தகவல்கள் தெரிவிக்கின்றது.

அமைச்சரவைக் கூட்டம் ஒவ்வொரு வாரமும் செவ்வாய்க்கிழமைகளில் இடம்பெற்று வரும் நிலையில், நாளை செவ்வாய்க் கிழமை ஜனாதிபதித் 23

## வவுனியா புதூர் ஆயுத மீட்பு; சந்தேகத்தில் ஒருவர் கைது

(பனிக்கன்குளம்)

வவுனியா, புதூர் பகுதியில் பிஸ்ரல் மற்றும் கைக்குண்டுகள் உள்ளிட்ட ஆயுதங்களை வீசிவிட்டு தப்பியோடிய நபர் தொடர்பில் சந்தேகத்தில் நபரொருவரை புளியங்குளம் பொலிஸார் கைது செய்து பொலிஸ் தடுப்புகாவலில் வைத்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

கடந்த 2 ஆம் திகதி புளியங்குளம், புதூர் பகுதியில் சந்தேகத்திற்கிடமான நடமாட்டம் காணப்படுவதாக புளியங்குளம் பொலி 23

## கேரள கஞ்சாவுடன் கைதானவரை விடுவிக்க உத்தரவிட்டாராம் சுமந்திரன்!

### பொய்யான தகவல் என கூட்டமைப்பு விளக்கம்

(யாழ்ப்பாணம்)

கேரள கஞ்சாவுடன் கைது செய்யப்பட்ட ஒருவரை, தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் முக்கிய பிரமுகர் ஒருவரின் தலையீட்டால் பொலிஸார் விடுதலை செய்ய வேண்டிய நெருக்கடி எற்பட்டதெனவும்,

இந்த சம்பவத்தால் பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தர கடுமையான அதிருப்தியடைந்துள்ளதுடன், போதைப்பொருளுக்கு எதிரான நடவடிக்கையை பாதுகாப்பு அமைச்சுடன் இணைந்து மேற்கொள்வது குறித்து ஆலோசித்து வருவதாகவும் நேற்று சண்டே ரைம்ஸ் ஆங்கில இதழ் செய்தி செய்தி வெளியிட்டிருந்தது.

மேலும், கஞ்சா கடத்தியமை, பொலிஸாரின் கடமைக்கு இடையூறு விளைவித்தமை உள்ளிட்ட குற்றச்சாட்டுக்களை அவர்கள் மீது சுமத்தும் குற்றப்பத்திரம் தயாரிக்கப்பட்டு கொண்டிருந்தபோது, தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் 23

Techno World
வெலிங்டன் சந்தி, பெருமாள் கோவில் வீதி, யாழ்ப்பாணம்.
A/L தொழில்நுட்ப பிரிவு
A/L 2021 - திங்கட்கிழமை - வெள்ளிக்கிழமை
பகல் வகுப்புக்கள் 8.00 - 11.00am
A/L 2019 Day Class
திங்கட்கிழமை - வெள்ளிக்கிழமை
பகல் வகுப்புக்கள் 8.00 - 01.30pm
E.Tec/ B.Tec, SFT, ICT
பகல் வகுப்புக்கள் நடைபெறும் ஒரே ஒரு கல்வி நிறுவனம்.
புதிதாக அமைக்கப்பட்ட நவீன ஆய்வுகூட வசதிகளுடன்
தொடர்புகளுக்கு : 077 017 5346
(C-4039)

## ஆளுநர்களின் நியமனங்களை ஏற்க முடியாது!

### ஜே.வி.பி எதிர்ப்பு

(கொழும்பு)

ஜனாதிபதியால் வழங்கப்பட்ட ஆளுநர் நியமனங்களை ஏற்றுக் கொள்ள முடியாது. பொருத்தமில்லாத ஆளுநர்களை நியமித்து ஜனாதிபதி, ஆளுநர் பதவியையே சொச்சைப்படுத்தியுள்ளார் என மக்கள் விடுதலை முன்னணி 23

## புதிய அரசியலமைப்பை கடுமையாக எதிர்ப்போம்

### மகிந்த அணி விடாப்பிடி

(கொழும்பு)

புதிய அரசியலமைப்பின்வரைபை மட்டுமல்ல அதன் யோசனைகளையும் கடுமையாக எதிர்ப்போம் எனத் தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் சேஹான் சேமசிங்க, நாட்டுக்கு அவசியமற்ற அரசியலமைப்பினை உருவாக்க முயற்சிக்கும் பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன், இன்று வடக்கு மக்களால் வெறுக்கப்பட்டவராக சித்திரிக்கப்படுகின்றார். எனவே அவரின் கனவு ஒருபோதும் பலிக்காது எனவும் அவர் தெரிவித்தார்.

மேலும் புதிய அரசியலமைப்பினை கோரும் கூட்டமை 24

# புல் வெட்டிய குடும்பஸ்தர் மயங்கி வீழ்ந்து மரணம்

புல் வெட்டிக்கொண்டிருந்த இளம் குடும்பஸ்தர் ஒருவர் திடீரென மயங்கி விழுந்து பரிதாபமாக உயிரிழந்த சம்பவம் ஒன்று நேற்று ஊரெழு பகுதியில் இடம்பெற்றுள்ளது.

பருத்தித்துறை வீதி நல்லூரை சேர்ந்த 3 பிள்ளைகளின் தந்தையான சின்னத்துரை சசிகரன் (வயது 46) என்பவரே மேற்படி உயிரிழந்தவராவார்.

இவர் நேற்றுக் காலை ஊரெழு பகுதிக்கு சென்று புல் வெட்டியுள்ளார். ஒரு மணியளவில் குறித்த நபர் தரையில் மயங்கி விழுந்துள்ளார்.

உடனடியாக அவரை அங்கிருந்தவர்கள் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு கொண்டு சென்றனர். ஆனால் அவரை பரிசோதித்த வைத்தியர்கள் அவர் ஏற்கெனவே உயிரிழந்துவிட்டதாக தெரிவித்தனர்.

இந்த மரண விசாரணையை யாழ் போதனா வைத்தியசாலை மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டிருந்தார்.

சடலம் பிரேத பரிசோதனைக்காக யாழ் போதனா வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. (மு-9)

# பால் மா இறக்குமதியை நிறுத்த நேரிடும் என எச்சரிக்கை

பால் மாவின் விலையை அதிகரிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவில்லையாயின், எதிர்காலத்தில் பால் மா இறக்குமதியை நிறுத்த நேரிடும் என இறக்குமதியாளர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

பால் மா இறக்குமதி செய்கின்ற போது, மாதம் 30 தொடக்கம் 40 மில்லியன் ரூபா நட்டம் ஏற்படுவதாக, பால் மா நிறுவனங்கள் குறிப்பிட்டுள்ளன.

டொலருக்கு நிகரான இலங்கை ரூபாயின் பெறுமதி வேகமாக வீழ்ச்சியடைந்து செல்கின்றமை மற்றும் அதிக வரி அறவீடு காரணங்களினாலேயே பால் மாவின் விலையை அதிகரிக்க வேண்டிய கட்டாய தேவை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது (மு-3)


# லப்டொப் கணினிகள் தேவை

நல்லநிலையில் உள்ள பாவித்த லப்டொப்கள் கணினிகள் தேவை

**GUNA BEST PC** 0779086737

உங்கள் வீடுகள் அலுவலகங்களுக்கே வந்து கணினிகள் திருத்தி தருகிறோம். கணினி லப்டொப் சிசிரிவி கமரா திருத்தம் விற்றல் வாங்குதல் பொருத்துதல்

522 மானிப்பாய் வீதி ஓட்டுமடம் சந்தி யாழ்ப்பாணம்.
43 பாங்சால் வீதி சந்தை மேல்மாடி சின்னக்கடை யாழ்ப்பாணம்.

யாழ்ப்பாணம் கிளிநொச்சி முல்லைத்தீவு வவுனியா மன்னார்

# காசாளர் தேவை

## Jaffna Tex Colombo Fashion

யாழ்.நகரில் பிரசித்தி பெற்ற புடவை விற்பனை நிலையத்துக்கு 25 வயது தொடக்கம் 35 வயது வரை உள்ள ஆண்கள் மட்டும் காசாளராக கடமையாற்றக் கூடியவர்கள் தேவை. கீழ்க்கண்ட கையடக்க தொலைபேசியில் தொடர்பு கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:

**077 523 5266**

## King Palace Holiday INN

# உடனடி வேலைவாய்ப்பு

01. வரவேற்பாளர்
02. அறை பராமரிப்பாளர்

01. வரவேற்பாளர் ((Receptionist) பெண் தேவை)
(ஆங்கிலம், கணனி அறிவு விரும்பத்தக்கது)

02. அறை பராமரிப்பாளர் (Room boy)
(ஆண், பெண் தேவை)

முன் அனுபவம் விரும்பத்தக்கது. உணவு, தங்குமிட வசதி செய்து கொடுக்கப்படும்.

தங்கி நின்று வேலைசெய்யும் பெண் ஒருவர் தேவை
வயது எல்லை: 25 - 50 (உணவு, தங்குமிட வசதி செய்து தரப்படும்)

தொடர்பு:
தொ.பே:-077 523 5266




வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா?
நாம் மீட்டுத் தருகின்றோம்

# றாஜ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.

தொடர்பு: **றாஜ் - 077 679 6623** (6967)

1985ம் ஆண்டிலிருந்து இன்று வரையானதொரு தனித்துவமிக்க பயிற்சி நிலையம்

# யாழ். கலாலயா பயிற்சியகம்



இலங்கையின் மூன்றாம் நிலைக் கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணையத்தால் பதிவு செய்யப்பட்ட பயிற்சி நிலையம்

விக்ரோறியா வீதி, யாழ்ப்பாணம். (யாழ். போதனா வைத்தியசாலை பின் புற வீதி)

## மகளிருக்கான பயன்மிகு பயிற்சிகள் ஆரம்பமாகின்றன!

- FACIALS (முக அழகுக்கலை) Pedicure, Manicure, Nail Art, கண் புருவம் சீராக்குதல் (Eye Brow Threading), தேவையற்ற முடிகளைஅகற்றுதல் (Waxing)
- கூந்தல் வடிவமைப்புகளும் முடி சீராக்குதலும் 40 வகையான கொண்டைகள் போடுதல், முடி அயன் செய்தல், முடி சுருட்டுதல், Hair Colouring, முடி வெட்டுதல், Hair Perming.
- BRIDAL DRESSINGS (மணப்பெண் அலங்காரங்கள்) இந்து, கிறிஸ்தவ இஸ்லாம் மணப் பெண் அலங்காரமும் Modern, கூர்க்காஸ், சிங்கப்பூர் குஜராத்தி, மடிசார், சிங்கள முறையிலான சேலை அணியும் முறைகள். முறைகளும் பயிற்றுவிக்கப்படும்.
- கேக் ஐசிங் - றோயல், Parchment, Frosting, Fondant, Whipping Cream, Piping Icing, மாச்சீனி மலர்கள். (Sugar Flowers).
- உணவு தயாரித்தல் - உணவு வகைகள், 6 வகையான Cakes, Cup Cake மற்றும் பீஸா, சிற்றுண்டிகள் குளிர்பானங் கள், ஐஸ் கிறீம், புடிங் தயாரித்தல்.



**பயிற்சிகளின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.**


- அத்துடன் பிளவ்ஸ், சாறி பிளவ்ஸ், சுரிதார், மற்றும் ஆடைகள் தைக்கும் சான்றிதழ் அற்ற கிழமை நாள் தையல் பயிற்சிகளும் ஆரம்பமாகின்றன.

**சனி, ஞாயிறு புதிய பிரிவுகள் ஆரம்பம்**
**19.01.2019 சனி காலை 10.00மணி**
**கிழமை நாள் புதிய பிரிவுகள் ஆரம்பம்**
**21.01.2019 திங்கள் காலை 10.00 மணி**

மேலும் விபரங்களை பி.ப 5.30 வரை நேரில் அறிந்து கொள்ளலாம்.

(சி-5025) -இயக்குநர்


# அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு



தோற்றம் 08 - 02 - 1927

மறைவு 09 - 12 - 2018

## அமரர் வேலுப்பிள்ளை கார்த்திகேசு

கடந்த 09.12.2018 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர் அமரர் வேலுப்பிள்ளை கார்த்திகேசு அவர்களின் சிவப்பேறு குறித்த அந்தியேட்டிக் கிரியைகள் இன்றைய தினம் 07.01.2019 திங்கட்கிழமை காலை 7.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெறும். அந்நிகழ்விலும் நாளைய தினம் 08.01.2019 செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் மு.ப 11.00 மணியளவில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் கலந்து கொண்டு அன்னாரது ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திப்பதோடு தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு: தயவுகூர்ந்து இவ் அழைப்பினையே தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தருமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

குடத்தனை கிழக்கு,
குடத்தனை

தகவல்: திருமதி புவனேந்திரம் சாந்தினி
உப அதிபர்
யா/அம்பன் அமெரிக்கன் மிசன் தமிழ்க் கலவன் பாடசாலை

# அதிகாரப் பரவலாக்கலை அறியாதவர்களே புதிய அரசியலமைப்பை எதிர்க்கின்றனர்

## மகிந்த அணி மீது அமைச்சர் ராஜித சாடல்



(களுத்துறை)

அதிகாரப் பரவலாக்கல் என்றால் என்னவென்றே தெரியாதவர்கள் தான் புதிய அரசியலமைப்புக்கு எதிர்ப்பைத் தெரிவித்து வருகின்றனர் என அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார்.

களுத்துறையில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றையடுத்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், "புதிய அரசமைப்பு வரையை தயாரிப்பதற்காக நியமிக்கப்பட்டுள்ள தெரிவுக்குழுவின் ஊடாக, அரசியலமைப்பு வரைபைத் தயாரிக்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதனை நாம் வெகுவிரைவில் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கத் தீர்மானித்துள்ளோம்.

இதனையடுத்து, இது தொடர்பில் விவாதங்களை நடத்தி, கட்சி மற்றும் அனைத்து உறுப்பினர்களின் யோசனைகளையும் உள்வாங்கத் தீர்மானித்துள்ளோம். இந்த யோசனைகளைப் பெற்ற பின்னரே, இந்த வரைபை நாம் இறுதி செய்வோம்.

இந்தநிலையில், மகிந்த தலைமையிலான எதிரணியினர் தேவையில்லாமல் இந்த விவகாரம் தொடர்பில் பொய்யான குற்றச்சாட்டுக்களை சுமத்திக் கொண்டிருக்கின்றனர்.

அவர்களுக்கு எப்படியாவது அதிகாரத்துக்கு வந்து விட வேண்டும். இந்த அதிகார ஆசை 50 களிலேயே ஆரம்பித்துவிட்டது.

இதன் விளைவாகத் தான் நாட்டில் யுத்தம் கூட இடம்பெற்றது. ஒருமித்த நாட்டில் அதிகாரத்தை பகிர்வதானது எவ்வாறு சமஷ்டியாகும் என்பதுதான் எமது கேள்வியாக இருக்கிறது.

இதற்கு எதிர்ப்பைத் தெரிவிக்கும் பலருக்கு, சமஷ்டியென்றாலோ, ஒருமித்த நாடு என்றாலோ, அதிகாரப் பரவலாக்கல் என்றாலோ என்னவென்றே தெரியாது.

இப்போது தேர்தல் வேண்டும் என்கிறார்கள். ஆனால், யாரும் நினைப்பதுபோல தேர்தல் ஒன்றை நாட்டில் நடத்திவிட முடியாது.

உரிய காலத்துக்கு முன்னர் நாடாளுமன்றைக் கலைத்து பொதுத்தேர்தலுக்கு செல்வதாயின், நாடாளுமன்றின் மூன்றில் இரண்டு பெரும்பான்மை அவசியமாகும். ஜனாதிபதிக்குக்கூட இந்த அதிகாரம் இல்லை என்பதை நிரூபித்துள்ளோம்.

எவ்வாறாயினும், ஜனாதிபதித் தேர்தல் தான் முதலாவதாக இடம்பெறவுள்ளது. இதற்கு நாம் தயாராகவே இருக்கின்றோம்" என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# பௌத்த மதத்துக்குரிய முன்னுரிமையை உயிரைக் கொடுத்தேனும் பாதுகாப்போம்

## ஐ.தே.க. திட்டவட்டம்



(கேகாலை)

சிங்கள பௌத்த மக்களின் கோரிக்கைகளுக்கு ஐக்கிய தேசியக் கட்சி இதனை விடவும் கூடிய அவதானம் செலுத்த வேண்டும் என அமைச்சர் கபீர் ஹாஷிம் தெரிவித்துள்ளார்.

கேகாலையில் நேற்று நடைபெற்ற பொதுக் கூட்டமொன்றில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

"நான் ஒரு முஸ்லிம். இருந்தாலும், பௌத்த மதத்துக்குரிய முன்னுரிமையை நாம் உயிரைக் கொடுத்தேனும் பாதுகாப் போம்".

இந்த நாட்டின் ஒருமைப்பாட்டை அழிப்பதற்கு நாம் ஒருபோதும் இடமளிக்க மாட்டோம். எம்மில் குறைபாடுகள் இருக்கலாம். எம்மிடம் தவறுகள் அதிகம் உள்ளன. இந்த நாட்டிலுள்ள சிங்கள பௌத்த மக்களின் கோரிக்கைகள் தொடர்பில் நாம் ஐக்கிய தேசிய கட்சி என்ற வகையில் இதனை விடவும் நெகிழ்ந்து கொடுத்திருக்க வேண்டும் எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## மூன்று மாதங்களுக்கு ஒருமுறை திருத்தம்

(கொழும்பு)

வாக்காளர் பெயர்ப்பட்டியலில் ஒவ்வொரு மூன்று மாதங்களுக்கு ஒருமுறை திருத்தங்களை மேற்கொள்ள நடவடிக்கை எடுப்பதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அதற்கான சட்ட திருத்தங்களைக் கொண்டு வருவதற்கான கலந்துரையாடல்கள் இடம்பெற்று வருவதாக தேர்தல்கள் பணிப்பாளர் நாயகம் எம்.எம். மொஹமட் தெரிவித்தார். (இ-7)

## விரைவில் தக்க பாடம் புகட்டுவேன்

# மைத்திரியை ஒருபோதும் நான் மன்னிக்கமாட்டேன்!

## சந்திரிகா ஆவேசம்



(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் சர்வாதிகாரம் அரசியல் அரங்கில் மட்டுமல்ல ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குள்ளும் தொடர்கின்றது என முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

அத்துடன், மைத்திரியின் நடவடிக்கைகளுக்கு விரைவில் தக்க பாடம் புகட்டுவேன். ஒருபோதும் அவருக்கு மன்னிப்பு வழங்கமாட்டேன் எனவும் அவர் தெரிவித்தார்.

வெளிநாட்டு செய்தி நிறுவனத்தின் இலங்கை செய்தியாளருக்கு வழங்கிய பிரத்தியேக செவ்வியிலேயே சந்திரிகா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை எனது தந்தையும் தாயும் நானும் பாடுபட்டு வளர்த்தோம். இந்தக் கட்சியைத் தலைநிமிரச் செய்தோம். நாட்டின் ஆட்சியைத் தீர்மானிக்கும் கட்சியாக இதனை வைத்திருந்தோம்.

ஆனால், இந்தக் கட்சியை இன்று நாசமாக்கி விட்டார் மைத்திரி. முதலாவது நிலைக்கு நின்ற எனது தாய்க்கட்சி மைத்திரியின் சர்வாதிகார நடவடிக்கைகளால் மூன்றாம் நிலைக்குத்தள்ளப்பட்டுள்ளது.

கட்சியில் எனக்கு ஆதரவானவர்கள் வகித்த பதவிகளைப் பறித்தெடுத்து விட்டு தனக்குப் பிடித்தமான - பொருத்தமில்லாத நபர்களுக்குப் பதவிகளை வழங்கியுள்ளார் மைத்திரி.


வெளிநாடு செல்லும் போது கட்சியின் தலைமையகத்தை அவர் பூட்டிவிட்டுச் சென்றுள்ளார். இது அவரின் சர்வாதிகாரத்தின் உச்சநிலையைத் தொட்டுக் காட்டுகின்றது.

மைத்திரியின் இந்த நடவடிக்கைகளுக்கு விரைவில் உரிய பாடம் புகட்டுவேன். ஒன்றில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை மீட்டெடுப்பேன்.

அல்லது கட்சியில் உள்ள எனது ஆதரவாளர்களை மீட்டெடுத்து அடுத்த கட்ட நடவடிக்கை தொடர்பில் தீர்மானம் எடுப்பேன்" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# இவ்வருடத்துக்குள் உயர் தர வகுப்பு மாணவர்கள், ஆசிரியர்களுக்கு 'ரப்'

## கல்வியமைச்சர் காரியவசம் தெரிவிப்பு



(கொழும்பு)

இவ்வருடத்தில் உயர் தர வகுப்பில் பிரவேசிக்கும் மாணவர்களுக்கும் உயர் தர வகுப்புக்கு கற்பிக்கும் ஆசிரியர்களுக்கும் "ரப்" கணனிகளை வழங்குவதற்கு கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

இது தொடர்பான பிரேரணை முன்வைக்கப்பட்டுள்ள வரவுழுசெலவுத் திட்டத்திலும் உள்வாங்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.

கடந்த 2016 ஆம் ஆண்டு இந்த திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும், நடைமுறைப்படுத்த முடியாமல் போனது. இதனால், குறித்த நிதி மீண்டும் திறைசேறிக்கு திருப்பி அனுப்பப்பட்டுள்ளது. இதனை இவ்வருடத்தில் செயற்படுத்த எதிர்பார்த்துள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

உயர்தரத்தில் கல்வி கற்கும் மாணவர்களும், ஆசிரியர்களும் சுமார் 2 லட்சம் பேர் உள்ளனர். இவர்கள் அனைவருக்கும் "ரப்" கணனிகளைப் பெற்றுக் கொடுப்பது தனது இலக்கு என்வும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# பொலநறுவை அமைப்பாளராக மைத்திரியின் மகள் சத்துரிகா



(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொலநறுவை தொகுதியின் அமைப்பாளராக சத்துரிகா சிறிசேன வையும் மெதிரிகிரிய தொகுதியின் அமைப்பாளராக டட்லி சிறிசேனவையும் நியமிக்க அந்தக் கட்சியின் தலைவரான ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தீர்மானித்துள்ளதாக தெரியவருகிறது.

இவர்கள் இருவரும் அடுத்த பொதுத் தேர்தலில் போட்டியிடவுள்ளதாக தெரியவருகிறது.

இருந்த போதிலும் தன்னைத் தவிர தனது குடும்பத்தை சேர்ந்த எவரும் அரசியலில் ஈடுபட மாட்டார்கள் எனவும் ஈடுபடுத்த போவதில்லை எனவும் ஜனாதிபதி இதற்கு முன்னர் கூறியிருந்தார்.

குடும்ப அரசியலை நிராகரிப்பதாக கூறியிருந்த ஜனாதிபதி, தனது பிள்ளைகளை அரசியலில் ஈடுபடுத்த போவதில்லை எனவும் தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிட்டத்தக்கது. (இ-7)

# சிட்னியில் புது சரித்திரம் வரும் நாளோ இந்தியாவுக்கு சந்தோசம் தரும் நாளோ

## தொடர் வெற்றி உறுதியானது

சிட்னியில் இந்திய அணிக்கு இன்று சந்தோசம் தரும் நாளாக அமையவிருக்கிறது. அவுஸ்திரேலிய மண்ணில் முதல் முறையாக டெஸ்ட் தொடரை கைப்பற்றி சரித்திர சாதனை படைக்க, இந்திய அணி காத்திருக்கிறது.

அவுஸ்திரேலியா சென்றுள்ள இந்திய அணி, நான்கு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்கிறது. முதல் மூன்று போட்டிகளின் முடிவில் இந்திய அணி 2-1 என, முன்னிலையில் உள்ளது. நான்காவது மற்றும் கடைசி டெஸ்ட் சிட்னியில் நடக்கிறது. முதல் இன்னிங்சில் இந்தியா 622/7 ('டிக்ளேர்') ஓட்டங்கள் எடுத்தது. மூன்றாம் நாள் முடிவில், முதல் இன்னிங்சில் அவுஸ்திரேலிய அணி 6 விக்கெட்டுக்களை இழந்து 236 ஓட்டங்கள் எடுத்திருந்தது.



**மழையால் தாமதம்**

நேற்றைய நான்காம் நாள் ஆட்டம் மழை மற்றும் வெளிச்சமின்மையால் மூன்று மணி நேரம், 50நிமிடம்தாமதமாகஆரம்பித்தது. அவுஸ்திரேலியாவின் கம்மின்ஸ் (25), மொஹமட் ஷமி 'வேகத்தில்' போல்டானார். ஹேண்ட்ஸ்கோம்ப் (37), பும்ரா பந்தில் போல்டானார்.

பின் இணைந்த மிட்சல் ஸ்டார்க், ஹேசல்வுட் ஜோடி இந்திய பந்துவீச்சை எளிதாக சமாளித்து ஓட்டங்கள் சேர்த்தது. பத்தாவது விக்கெட்டுக்கு 42 ஓட்டங்கள் சேர்த்தபோது குல்தீப் பந்தில் ஹேசல்வுட் (21) சரணடைந்தார். முதல் இன்னிங்சில் அவுஸ்திரேலிய அணி 300 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. ஸ்டார்க் (29) ஆட்டமிழக்காமல் இருந்தார். இந்தியா சார்பில் குல்தீப் 5, ஷமி, ஜடேஜா தலா 2, பும்ரா ஒரு விக்கெட் கைப்பற்றினர்.

**மீண்டும் மழை**

பின், 322 ஓட்டங்கள் பின்தங்கி இருந்த அவுஸ்திரேலிய அணிக்கு 'பொலோ-ஒன்' வழங்கப்பட்டது. இரண்டாவது இன்னிங்சை ஆரம்பித்த அவுஸ்திரேலிய அணி விக்கெட் இழப்பின்றி 6 ஓட்டங்கள் எடுத்து. 316 ஓட்டங்களால் பின் தங்கி இருந்தபோது போதிய வெளிச்சமின்மையால் ஆட்டம் நிறுத்தி வைக்கப்பட்டது. கவாஜா (4), மார்கஸ் ஹரிஸ் (2) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

சிறிது நேரத்தில் மீண்டும் மழை பெய்ததால், ஆட்டத்தை தொடர முடியாத நிலை ஏற்பட்டது. இதனையடுத்து நான்காம் நாள் ஆட்டத்தை பாதியில் இரத்து செய்வதாக நடுவர்கள் தெரிவித்தனர்.

இன்றைய ஐந்தாவது மற்றும் கடைசி நாள் ஆட்டம் அரை மணி நேரம் முன்னதாக ஆரம்பிக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.



5விக்கெட்டுக்களை கொய்து அவுஸ்திரேலியாவை அச்சுறுத்திய குல்தீப்

**வாய்ப்பு எப்படி?**

சிட்னி டெஸ்டின் 4ஆம் நாள் ஆட்டம் மழை, போதிய வெளிச்சமின்மையால் பாதிப்படைந்தது. இன்றைய கடைசி நாள் ஆட்டத்தில் இந்திய பந்துவீச்சாளர்கள், அவுஸ்திரேலியாவின் 10 விக்கெட்டுகளை சாய்த்து, வெற்றி பெறும் பட்சத்தில் தொடரை 3-1 எனக் கைப்பற்றலாம். ஒருவேளை மீண்டும் மழை குறுக்கிடும் பட்சத்தில் போட்டி 'சமனிலையில் முடியும். இருப்பினும் இந்திய அணி 2-1 என தொடரை வெல்லும். எப்படி பார்த்தாலும் அவுஸ்திரேலிய மண்ணில் முதன் முறையாக டெஸ்ட் தொடரை கைப்பற்றி இந்தியா வரலாறு படைக்கும்.

**நழுவிய 'பிடி'**

இந்தியாவின் குல்தீப் யாதவ் வீசிய 93ஆவது ஓவரின் 4ஆவது பந்தை அவுஸ்திரேலியாவின் ஹேசல்வுட் தூக்கி அடித்தார். அதனை பிடிக்க முயன்ற ஹனுமா விஹாரி, பந்தை நழுவவிட்டார். அப்போது ஒரு ஓட்டம் எடுத்திருந்த ஹேசல்வுட் ஆட்டமிழப்பில் இருந்து தப்பினார். தவிர அவுஸ்திரேலிய அணி 264/9 ஓட்., (92.4 ஓவர்) மட்டுமே எடுத்திருந்தது.

**பும்ராவுக்கு தேவை '1'**

இந்திய வேகப்பந்து வீச்சாளர் பும்ரா இன்னும் ஒரு விக்கெட் வீழ்த்தும் பட்சத்தில், டெஸ்ட் அரங்கில் தனது 50வது விக்கெட்டை பதிவு செய்யலாம். இதுவரை இவர், 10 டெஸ்டில், 49 விக்கெட்டுக்களைச் சாய்த்துள்ளார். மூன்று முறை, 5 அல்லது அதற்கு மேல் விக்கெட் வீழ்த்தியுள்ளார்.

இரண்டாவது இன்னிங்சில், பும்ரா, ஒரு விக்கெட் கைப்பற்றும் பட்சத்தில், டெஸ்ட் அரங்கில் அதிவேகமாக 50 விக்கெட் வீழ்த்திய இந்தியபந்துவீச்சாளர்கள் பட்டி யலில் சுழற்பந்து வீச்சாளர் அஷ்வினுக்கு (9 டெஸ்ட்) பின், 2வது இடம் பிடிக்கலாம்.

**மழை வருமா**

சிட்னியில் இன்று வெப்பநிலை அதிகபட்சம் 23, குறைந்தபட்சம் 20 டிகிரி செல்சியசாக இருக்கும். வானம்மேகமூட்டத்துடன் காணப் படும். மழை வர 20 சதவீதம் வாய்ப்பு இருப்பதாக கூறப்படுகிறது. ஆட்டம் பாதிக்கப்படலாம்.

## கேப்டவுனில் கோட்டைவிட்டது பாக்., டெஸ்ட் தொடரை தென்னாபிரிக்காவிடம்

வெற்றிக்கான 4 ஓட்டத்தை அடித்த எல்கர் ஆர்ப்பரிக்கும் காட்சி

தென்னாபிரிக்காவுக்கு எதிராக கேப்டவுனில் நடந்த 2வது டெஸ்டில் ஏமாற்றிய பாகிஸ்தான் அணி 9 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது.

தென்னாபிரிக்கா, பாகிஸ்தான் அணிகள் மோதிய 2ஆவது டெஸ்ட் கேப்டவுனில் நடந்தது. முதல் இன்னிங்சில் பாகிஸ்தான்177, தென்னாபிரிக்கா 431 ஓட்டங்கள் எடுத்தன. மூன்றாம் நாள் முடிவில், 2வது இன்னிங்சில் பாகிஸ்தான் அணி 294 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.


நான்காம் நாள் ஆட்டத்தில் வெறும் 41 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற சுலப இலக்குடன் 2வது இன்னிங்சை ஆரம்பித்த தென்னா பிரிக்க அணிக்கு டி புருய்ன் (4) ஏமாற்றினார். மொஹமட் அமிர் வீசிய பந்து தாக்கியதில் கையில் காயமடைந்த அம்லா (2) 'ரிட்டயர்ட் ஹேர்ட்' ஆனார். அசார் அலி பந்தில் தொடர்ச்சியாக 2 பவுண்டரி அடித்த டீன் எல்கர், அணியை வெற்றிக்கு அழைத்துச் சென்றார்.

இரண்டாவது இன்னிங்சில் தென்னாபிரிக்க அணி ஒரு விக்கெட்டை மாத்திரம் இழந்து 43 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது. எல்கர் (24), அணித் தலைவர் டுபிளசி (3) ஆட்டமிழக்காமல் இருந்தனர். பாகிஸ்தான் சார்பில் மொஹமட் அபாஸ், ஒரு விக்கெட் வீழ்த்தினார்.

ஏற்கெனவே செஞ்சுரியனில் நடந்த முதல் டெஸ்டில் வென்ற தென்னாபிரிக்க அணி, 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரை 2-0 எனக் கைப்பற்றி முன்னிலை பெற்றது.

## மரண அறிவித்தல்

### மாதர் மாணிக்கம்



கொக்குவில் மேற்கு முதலி கோவில் வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மாதர் மாணிக்கம் அவர்கள் கடந்த 04.01.2019 வெள்ளிக்கிழமை அன்று சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற மாதர் - வள்ளி தம்பதிகளின் இளைய மகனும் காலஞ்சென்ற சின்னையா - சற்குணம் தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற புஷ்பத்தின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான பாக்கியம், தருமு, சின்னையா, சின்னத்தம்பிஆகியோரின் அன்புச் சகோதரனும் சிவநேசன் (ஆசிரியர் - அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாசாலை), சிவதாசன் (லண்டன்), சிவகுமார் (கட்டார்), சிவசற்குணம் (முன்னாள் நியாப் உத்தியோகத்தர்) ஆகியோரின் அன்புத் தந்தையும் கனிந்திரவதி (ஆசிரியர்), மேரி மல்லிகா (லண்டன்), இந்துமதி, கிறிஸ்ரின் பத்மினி ஆகியோரின் அன்பு மாமனாரும் திஷோக்குமார் (மாணவன் - பல்கலைக்கழகம், லண்டன்), கவாஸ்கர் (மாணவன் - பல்கலைக்கழகம் - சப்பிரகமுவ), யாழமுதன் (BPP நிறுவனம்), ஜெறோமி (மாணவி - வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை), அமிர்தசாகரன் (மாணவன் - கொக்குவில் இந்துக் கல்லூரி), அபிஷேக் (மாணவன் - கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்), நிவேதா, மாதேஸ் (மாணவர்கள் - நீர்கொழும்பு விஜயரட்ண இந்து மத்திய கல்லூரி) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று திங்கட்கிழமை மு.ப 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.


முதலி கோவில் வீதி,
கொக்குவில் மேற்கு.

தகவல்:
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

### சொக்கலிங்கம் சிவநாயகம்

(உரிமையாளர்-
இரும்புப் பெட்டி தொழிலகம்)
(இல.13, பிறவுண் வீதி யாழ்ப்பாணம்)



யாழ்ப்பாணம் கந்தர்மடம் மணல்தறை வீதியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சொக்கலிங்கம் சிவநாயகம் (உரிமையாளர்- இரும்புப் பெட்டி தொழிலகம், இல.13, பிறவுண் வீதி யாழ்ப்பாணம்) நேற்று (06.01.2019) ஞாயிற்றுக்கிழமை காலை சிவபதமடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சொக்கலிங்கம் - நாகரெத்தினம் தம்பதிகளின் மூத்த மகனும் அருந்தவநாயகம் (ஓய்வுநிலை விவசாய உத்தியோகத்தர்), காலஞ்சென்ற செல்வநாயகம் (முன்னாள் பிறிமா ஆலை உத்தியோகத்தர்), இராஜராஜேஸ்வரி, புவனேஸ்வரி, பேரின்பநாயகம் (டென்மார்க்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் கமலலோஜினி (விவசாய இலாகா உத்தியோகத்தர்), தனேஸ்வரி (ஓய்வுநிலை ஆசிரியை), இராஜகோபால் (புதிய சாயி கல்வி நிலையம்), இராஜகுலேந்திரவதி (டென்மார்க்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் சுஜாந்தினி, சுஜேந்திரா, மதுரா (டென்மார்க்) ஆகியோரின் அன்பு பெரியப்பாவும் விஜிதன், லோஜினி ஆகியோரின் பெரிய மாமனாரும் ஜிதிஷ்பவன், தக்ஷணன், சாருக்ஷணன் ஆகியோரின் பெரிய தாத்தாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (08.01.2019) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று காலை 10 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

43, மணல்தறை லேன்,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்

# புதிய அரசியலமைப்பைக் கொண்டுவர முடியாவிட்டால் 20 ஆவது திருத்தத்தை அரசாங்கம் கொண்டு வரும்

## தேசிய சுதந்திர முன்னணி தெரிவிப்பு



(கொழும்பு)

புதிய அரசியல் அமைப்பைக் கொண்டுவர முடியாவிட்டால் 20ஆவது திருத்தத்தையேனும் நடைமுறைப்படுத்த அரசாங்கம் எதிர்பார்த்துள்ளதாக தேசிய சுதந்திர முன்னணி தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகச் சந்திப்பில் தேசிய சுதந்திர முன்னணியின் ஊடகப் பேச்சாளர் மொஹமட் முசம்மில் இதனை தெரிவித்தார்.

மத்திய அரசாங்கத்தில் இருந்து வேறுபட்ட வடக்கு கிழக்கு மாகாணத்திற்கான அதிகாரத்தையே எம்.ஏ. சுமந்திரன் போன்றவர்கள் அரசியல் அமைப்பின் மூலம் கோரி நிற்கின்றனர்.

அரசாங்கத்தின் மூலமும் நாடாளுமன்றத்தின் மூலம் பிரிவினைவாத செயற்பாட்டை நிறைவேற்றிக்கொள்வதே கூட்டமைப்பின் இலக்காகும்.

இதனை நிறைவேற்றுவதற்கான முயற்சியை அமைச்சரவையில் ஜனாதிபதி நிறுத்தும் சந்தர்ப்பம் ஏற்பட்டால், அதற்கு பதிலாக 20ஆவது திருத்தத்தை நாடாளுமன்றத்தில் நிறைவேற்ற முயற்சிப்பார்கள்.

20ஆவது திருத்தத்தில் பொதுத் தேர்தல் முறைமையில் மாற்றங்களை மேற்கொண்டு தேர்தலை நடத்தும் திட்டத்தை அரசாங்கம் கொண்டிருப்பதாக முசம்மில் மேலும் தெரிவித்தார். (இ-7)

# சகல சந்தர்ப்பத்திலும் ஐ.தே.கவே ஜனநாயகத்தை உறுதிப்படுத்தியது

## அமைச்சர் சம்பிக்க நினைவுபடுத்தல்



(கொழும்பு)

வடக்கில் விடுதலைப் புலிகளின் தலைவரான பிரபாகரன் முதற்கொண்டு, மகிந்த ராஜபக்ஷ மற்றும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உள்ளிட்டோர் ஜனநாயக உரிமைகளுக்கு எதிராகச் செயற்பட்ட போது அதனைத் தோற்கடித்து அனைத்துச் சந்தர்ப்பத்திலும் ஐக்கிய தேசிய கட்சியே நாட்டில் ஜனநாயகத்தை உறுதிப்படுத்தியது என பாரிய நகரம் மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

# பாடசாலை மாணவர்களுக்கு யோகாசனப் பயிற்சி கட்டாயம்

## கல்வி அமைச்சின் செயலாளர் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். வலயப் பாடசாலைகள் தோறும் எதிர்வரும் 19 ஆம் திகதிக்கு பின்னர் மாணவர்களுக்கு வாரத்தில் இரு பாடசாலை நாட்களில் காலை உடற்பயிற்சிக்காக யோகாசனப் பயிற்சியை கட்டாயமாக வழங்குமாறு வடமாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் எஸ். சத்தியசீலன் அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், இவ் யோகா செய்முறை பாடசாலைச் சீருடையுடன் பயிற்சி செய்யக் கூடியவாறு மூன்று அப்பியாசங்கள் தெரிவு செய்யப்பட்டு வீடியோக் காணொலிகள் யாழ். வலயப் பாடசாலைக்கு அனுப்பி வைக்கப்படும்.

இச் செயற்பாட்டை பாடசாலை அதிபர்கள், குறித்த துறைசார் ஆசிரியர்கள் அல்லது மாணவர்களின் உதவியுடன் ஏனைய மாணவர்களுக்கும் படிக்கக் கூடிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமெனவும் எதிர்வரும் மாதங்களில் ஏனைய வலயங்களுக்கும் இச் செயற்பாடு விரிவுபடுத்தப்படுமெனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-10)

# அமைச்சரவை திருத்தம் இந்த வாரத்தில்-அஜித்



(கொழும்பு)

இந்த வாரத்தில் அமைச்சரவையில் திருத்தம் மேற்கொள்ளப்படுமென மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் பிரதியமைச்சர் அஜித் மன்னப்பெரும தெரிவித்துள்ளார்.

அமைச்சர்களின் எண்ணிக்கையை 30ஐ விட அதிகரிக்க முடியுமா என்பது குறித்து சட்டமா அதிபரின் கருத்துக்களைக் கோரியுள்ளதாகவும், சட்டமா அதிபரின் கருத்துக்கள் கிடைத்தவுடன் அமைச்சரவையில் திருத்தங்கள் செய்யப்படுமெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான ஸ்ரீகொத்தாவில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அத்துடன் அமைச்சரவையில் திருத்தம் மேற்கொள்ளப்பட வேண்டுமென்பது தனது தனிப்பட்ட கருத்து என்றும் அவர் தெரிவித்துள்ளார். (இ-7)

# 'இனவாத கருத்தை விடுத்து புதிய அரசியலமைப்புக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும்'



(கொழும்பு)

புதிய அரசியலமைப்பு விவகாரத்தில் இரண்டு தரப்பினரும் இனவாதக் கருத்துக்களை குறிப்பிடுவதையும் ஒருவருக்கொருவர் தூற்றித் கொள்வதையும் தவிர்த்து விட்டு நாட்டுக்கு நலன் பயக்கும் ஒரு அரசியலமைப்பு உருவாக்கத்திற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் தாரக பாலசூரிய தெரிவித்தார்.

புதிய அரசியலமைப்பு ஒன்று நிச்சயம் உருவாக்கப்பட வேண்டும். மக்களின் அரசியல் எதிர்பார்ப்புக்களை ஒன்றிணைத்து பிரச்சினைகள் ஏற்படுத்தாவண்ணம் புதிய அரசியலமைப்பு உருவாக்கப்பட வேண்டும். சமஷ்டி ஆட்சியின் தன்மைகள் அரசியலமைப்பு தயார்படுத்தலில் காணப்படுமாயின் அதனை முழுமையாக இரத்துச் செய்ய வேண்டும்.

அப்போதே ஆதரவு வழங்க முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)


## வேலையாள் தேவை

### தங்கம்மா முதியோர் இல்லம்

இல.01, புதுக்குளம் வீதி, புதுக்குளம், கனகராயன்குளம்.

தோட்ட வேலை, சமையல் வேலை, வயது முதிர்ந்தவர்களை பராமரிக்கக் கூடிய தீய பழக்கங்கள் அற்ற 45 வயதுக்கு மேற்பட்ட நற்பண்புள்ள ஆண் வேலையாள் தேவை.
உடன் நேரில் வரவும்.
(முதியோர் இல்லத்தில் தங்கி நின்று பணியாற்றக் கூடியவராக இருத்தல் வேண்டும்)

### ஆங்கில ஆசிரியர் தேவை

- ஆங்கில மொழி பாடசாலையில் கற்பித்தவராக இருத்தல் வேண்டும்.
- தரம்-06 முதல் O/Lவரை கற்பிக்கக் கூடியவராக இருத்தல் வேண்டும்.
- புதன், வியாழன், வெள்ளி மதியம் 2 மணி தொடக்கம் 5 மணிவரை சனி, ஞாயிறு காலை 8 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
- தங்குமிடம், உணவு வழங்கப்படும்.
- வேதனம் பேசித் தீர்மானிக்கலாம்.
- நேரில் வரவும்

இ

55 வயதிற்கு மேற்பட்ட முதியவர்கள் ஆண், பெண் இருபாலாரும் தங்கம்மா முதியோர் இல்லத்தில் இலவசமாக தங்கியிருக்க முடியும். நேரில் வந்து அனுமதி பெறவும்.

தங்கம்மா முதியோர் இல்லம்
இல.01, புதுக்குளம் வீதி, புதுக்குளம், கனகராயன்குளம்.

**076 248 2766**


## இராசி பலன்

07.01.2019
மார்கழி 23, திங்கட்கிழமை
சூரிய உதயம் காலை 6.25 மணிக்கு
பிரதமை முற்பகல் 9.25 மணிவரை
உத்தராடம் முன்னிரவு 8.42 மணிவரை
சுபநேரம் 12.32-2.02 மணிவரை
இராகுகாலம் 8.02-9.32 மணிவரை
வளவன்

கிரகநிலை: செவ் · ராகு · கேது சந் · சூரி. புத. சனி · குரு. சுக்

சந்திராஷ்டமம்: திருவாதிரை, புனர்பூசம்.

**மீனம்** — பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள், தொலைபேசி வழியில் சுபதகவல்கள் வந்து சேரலாம், குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும்.

**மேடம்** — தொழில் முன்னேற்றம் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம்.

**இடபம்** — சுணங்கிய காரியங்கள் சுறுசுறுப்பாக நடைபெறும், ஆரோக்கியத்தில் முன்னேற்றமுண்டு, அலைச்சல்கள் குறைந்து ஆதாயம் கிடைக்கும்.

**மிதுனம்** — சில பிரச்சினைகளைக் கண்டும் காணாமலும் இருப்பது நல்லது, ஆரோக்கியத்தில் கவனம் தேவை, திடீர்ச் செலவுகள் ஏற்படலாம்.

**கும்பம்** — சிறிய வேலையொன்றுக்காக பலமுறை அலைய நேரிடலாம், தொழிலில் சில மாற்றங்களைச் செய்ய முற்படுவீர்கள், இறைவழிபாட்டில் நாட்டம் செல்லும்.

**கடகம்** — வராத உறவினர்கள் திடீரென உங்கள் வீடுகளுக்கு வரலாம், ஆதாயம் தரும் வேலையொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள், சுப தகவல்கள் வந்து சேரலாம்.

**மகரம்** — தொழில் ரீதியான பயணமொன்று இடம்பெறலாம், கொடுக்கல்-வாங்கல்களில் ஏற்பட்ட மனஸ்தாபம் விலகும், ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள்.

**சிம்மம்** — இனத்தார் பகை மாற எடுத்த முயற்சிகள் கைகூடும், போட்டிகளுக்கு மத்தியில் முன்னேற்றம் காண்பீர்கள், உடல் நலன் சீராகும், கௌரவமான நாள்.

**தனுசு** — நீண்ட நாளைய விருப்பமொன்று கைகூடும், தொலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம், தேகாரோக்கியத்தில் தெளிவுபிறக்கும் நாள்.

**விருச்சிகம்** — வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், உடன்பிறப்புக்கள் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், பயணங்களால் பலனுண்டு, வெற்றி தரும் செய்திகள் வந்து சேரலாம்.

**துலாம்** — பெற்றோர் வழியில் பிரியம் கூடும், பிரச்சினைகளிலிருந்து விடுபடுவீர்கள், உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர்.

**கன்னி** — வியாபாரத்தை விரிவுபடுத்தும் எண்ணம் மேலோங்கும், சேமிப்பை அதிகரிக்க முற்படுவீர்கள், உறவினர் வழி ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், தாழ்ந்த சுபாவமுண்டு.



தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைமைச் செயலகத்தில் மாமனிதர் குமார் பொன்னம்பலத்தின் 19வது ஆண்டு நினைவு தினம் அனுஷ்டிக்கப்பட்டது. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் மாமனிதர் குமார் பொன்னம்பலத்தின் மகனுமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையில் குறித்த நினைவேந்தல் நிகழ்வு நேற்று முன்தினம் இடம்பெற்றது.

# அரசியல் தீர்வு முடிந்த கதை என்று மூடிவைக்கத் தயாரில்லை-சுமந்திரன்

(கரணவாய்)

அரசியல் தீர்வு தொடர்பில் முடிந்த கதை என எதையும் மூடி வைக்க தயார் இல்லை. இறுதி வரைக்கும் நாங்கள் முயற்சி செய் வோம் என தெரிவித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினரும் அக்கட்சியின் ஊடகப் பேச்சாளருமான எம். ஏ.சுமந்திரன், எமது மக்களின் ஜனநாயகப் பலம் தொடர்ச்சியாக எங்களோடு இருக்க வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

கட்டைக்காட்டு றோ.க.த.க.பாடசாலையில் அமைக்கப்பட்ட புதிய கட்டடத் திறப்பு விழா நேற்று முன்தினம் சனிக்கிழமை முற்பகல் பாடசாலை அதிபர் த.யோகலிங்கம் தலைமையில் இடம்பெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

எங்கள் மக்களின் பங்களிப்பினாலேயே தேசிய அரசாங்கம் ஒன்று அமைக்கப்பட்டது. எமது நீண்டகால தமிழ்த் தேசியப் பிரச்சினைக்கு தீர்வு ஏற்படும் என அவர்களோடு பயணிப்பது, போரிலே அழிவடைந்த எமது பிரதேசத்தை கட்டி எழுப்புதல் என்பவற்றில் இந்த அரசாங்கத்தோடு சேர்ந்து வேலை செய்வது என்பது மக்கள் அறிந்த விடயம்தான்.

ஆனால் அந்த பயணத்திலே பல குறைகள் இருந்தன. நீண்ட இடைவெளிகள் இருந்தன 100 நாட்களில் செய்யப்பட்டதாக சொல்லப்பட்ட விடயத்தை மூன்று வருடங்களாகி இன்னும் முடியவில்லை.

எதுவுமே நடக்கவில்லை என்று சொல்கிற பிரசாரம் பொய்ப்பிரசாரமாக இருந்தாலும் கூட நடந்தவை எல்லாம் அரை குறையாகவே நடந்துள்ளது.

ஒன்றும் இன்னமும் முழுமை பெறவில்லை. அப்படியான ஒரு சூழ் நிலையில்தான் இன்னுமொரு மாற்றம் கடந்த சில கடந்த சில மாதங்களில் ஏற்பட்டது. அந்த மாற்றம் அப்படியே நீடித்திருந்தால் அது எங்களுக்கு பாரிய பின்னடைவை ஏற்படுத்திக்கொடுத்திருக்கும். நாங்கள் எடுத்த முயற்சிகள் எல்லாம் பயனற்று போயிருக்கும்.

ஆனால் அதனை தடுப்பதற்கு தமிழ் மக்களின் பிரதிநிதிகள் செயற்பட்டார்கள். மூன்று வருட காலத்திலே சுயாதீனமாக இயங்க விடப்பட்ட நீதித்துறையும் சரியான முறையில் செயற்பட்டு அது ஓரளவு தடுக்கப்பட்டது. முழுமையாக தடுக்கப்படவில்லை.

கடந்த 4 ஆம் திகதி செய்யப்பட்ட ஆளுநர் நியம



னங்கள் எங்களுக்கு வருத்தத்தை கொடுக்கிறது. வருகின்ற வருடத்தில் அல்லது இரண்டு வருடத்தில் இந்த சூழ்நிலையை சரி செய்ய வேண்டும், மாற்றி அமைக்க வேண்டும். அதே வேளை எங்களது பிரதேசத்தை அபிவிருத்தியை மும்முரமாக செய்ய வேண்டும்.

அரசியல் தீர்வு தொடர்பில் இறுதி வரைக்கும் நாங்கள் முயற்சி செய்வோம். முடிந்த கதை என எதையும் மூடி வைக்க தயார் இல்லை. இறுதி வரைக்கும் இந்த ஆட்சிக் காலத்திலே நிறைவேற்றுவதாக பொறுப்பெடுத்த விடயங்களை நிறைவேற்றுவதற்கு இயன்ற அனைத்தையும் செய்வோம்.

காலச் சூழல் இல்லாவிட்டாலும் காலச் சூழ்நிலைகளை மாற்றி அமைக்கிற செயற்பாடுகளில் ஈடுபடுவோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9-60)

# வீதிகள் புனரமைப்பு

(குருநகர்)

குருநகர்ப் பகுதியில் நீண்ட காலமாக புனரமைக்கப்படாமலிருந்த வீதிகளை புனரமைக்கும் பணிகள் யாழ். மாநகர சபையால் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

நீண்ட காலமாக குண்டும் குழியுமாக இருந்த புதிய பூங்கா வீதி - குறுக்கு வீதிகள், தண்ணீர்த்தாங்கி 3 ஆம் குறுக்குத்தெரு, 3 ஆம் குறுக்குத்தெரு வீதிகள் ஆகியன வட்டார ரீதியில் புனரமைப்புச் செய்யப்படுகின்றன.

தொடர்ச்சியாக மேலும் சில வீதிகள் இப்பகுதியில் புனரமைக்கப்படவுள்ளதாக மாநகரசபையால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-9-106)

# தைப்பூச இலட்சார்ச்சனை

(யாழ்ப்பாணம்)

மாவிட்டபுரம் ஸ்ரீகந்தசுவாமி கோவில் தைப்பூசம் இலட்சார்ச்சனை விஞ்ஞாபனம் எதிர்வரும் 12 ஆம் திகதி சனிக்கிழமை தொடக்கம் 21 ஆம் திகதி திங்கட்கிழமை வரை நடைபெறவுள்ளது. தைப்பூசத்தினமான 21 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9.30 மணியளவில் இலட்சார்ச்சனை ஆரம்பமாகும். அதைத் தொடர்ந்து இரவு 7.30 மணியளவில் திருமஞ்சத் தேர்ப்பவனியும் இடம்பெறவுள்ளது. (இ-5)

# மஹோற்சவத்தை முன்னிட்டு சிறப்புச் சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் மயிலணி அருள்மிகு முத்துமாரி அம்பாள் (வடலியம்மன்) ஆலய வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு நடத்தப்படும் சிறப்புச்சொற்பொழிவு 2019 நிகழ்வு ஆலய பிரதான மண்டபத்தில் எதிர்வரும் 12 ஆம் திகதி சனிக்கிழமை தொடக்கம் 20ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை காலை 11 மணிக்கு சமயஜோதி க.நிஜலிங்கம் ஒழுங்கமைப்பில் இடம்பெறவுள்ளது.

12ஆம் திகதி சனிக்கிழமை சைவப்புலவர் ச.முகுந்தன் விடயம்: "ஆதியில் காப்பும் அந்தாதியில் நூல் பயனும் கொண்ட அபிராமி அந்தாதி", 13 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை சைவப் புலவர் ஏ.அனுசாந்தன் விடயம்: "நம்மை வளர்த்தெடுத்த பெய்வளை" 14ஆம் திகதி திங்கட்கிழமை சைவப் புல வர் கா.கமலநாதன் விடயம், "சக்தி பீடங்கள்" 15ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இளஞ் சைவப்புலவர் ச.நவநீதன் விடயம்: "வரம் பல நல் கிடும் பராசக்தி" 16ஆம் திகதி புதன்கிழமை சிவநெறிச் செம்மல் திருமதி மா.அனந்தலச்சுமி விடயம்: "அம்பிகை வழிபாட்டில் காளி அம்பாள்" 17ஆம் திகதி வியாழக்கிழமை சைவப்புலவர் பொன் சந்திரவேல் விடயம்: "முக்கண்ணியைத் தொழுவார்க்கு ஒரு தீங்கும் இல்லையே" 18ஆம் திகதிவெள்ளிக்கிழமை சிவநெறிச்செம்மல் நித்தியபாபுதரன் விடயம்: "தேர் உற்சவம் உணர்த்தும் வாழ்வியல்" 19ஆம் திகதி சனிக்கிழமை சைவப்புலவர் கந்த சத்தியதாசன் விடயம் : "ஆலய வழிபாட்டு முறைகள்" 20ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை சைவப்புலவர்செ.த.குமரன் விடயம்: "ஐந்தொழில் தத்துவம்" ஆகிய விடயங்களில் சொற்பொழிவு இடம் பெறவுள்ளது. (இ-7)

# இரு பிரதேச சபைக்குட்பட்ட வீதி இன்னும் திருத்தப்படவில்லை

## பயணிப்பதில் சிரமம்; மக்கள் கவலை

(புன்னாலைக்கட்டுவன்)

புத்தூர் வீதியிலிருந்து அச்செழு நீர்வேலி வீதியை இணைக்கும் நரசிங்க வைரவர் வீதிக்கும் மூன்று சந்திக்குமிடைப்பட்ட வீதி நீண்ட காலமாக திருத்தப்படாமல் குண்டும் குழியுமாக இருப்பதனால் அவ் வீதியை பாவிக்க முடியாது சிரமப்படுவதாக அப்பகுதி மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

இவ்வீதி வலி.தெற்கு மற்றும் வலி.கிழக்கு ஆகிய இரண்டு பிரதேச சபைக்குட்பட்ட பகுதியில் இருப்பதனால் இரண்டு பிரதேச சபையினரும் இவ் வீதியைச் சென்று பார்வையிட்டுதிருத்துவதாகக்கூறியும் இதுவரை வீதி திருத்தப்படாமல் இருப்பதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கிராமங்களிலுள்ள சிறிய குறுக்கு வீதிகள் திருத்தப்பட்டு வரும் நிலையிலும் இவ்வாறான முக்கியமான வீதி திருத்தப்படாமல் இருப்பதனால் அப்பகுதியிலுள்ள மக்கள் இந்த வீதியை பயன்படுத்த முடியாமல் பெரும் சிரமப்பட்டு வருகின்றனர்.

எனவே நாள்தோறும் நூற்றுக்கு மேற்பட்ட மக்கள் பாவிக்கின்ற குறித்த வீதியை உரிய அதிகாரிகள் கவனமெடுத்து விரைவில்புனரமைக்கவேண்டுமென மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.(இ-78)

# க.பொ.த (உ/த) பெறுபேறுகள் 2018

**யாழ்.இந்து மகளிர் கல்லூரி**

**கலைப்பிரிவு**

ச.றோகினி-2ஏபி,சி.நிருசா-2ஏசி, செ.தாரணி-2ஏஎஸ், வி.கார்த்திகா-ஏ2பி, கி.கௌதமி-ஏ2பி,சூ.அபிராமி-ஏ2பி, ர.டினோசா-ஏபிசி, ச.யதுர்சனா-ஏபிசி, ஜெ.கம்சாயினி-ஏபிசி, த.மகாலட்சுமி-ஏபிசி, தி.நிருத்திகா-ஏபிசி, யோ.அபிராமி-ஏபிசி, செ.டட்சாயிணி-ஏபிசி, சி.ஜென்சி-ஏபிசி, பு.கஜப்பிரியா-ஏபிசி, ப.தரணிகா-ஏ2சி,நே.நிருசா-ஏ2சி, அ.சுவேதா-ஏ2சி,ப.தர்மிகா-ஏ2சி, அ.வினுசா-ஏபிஎஸ், யோ.பவீனா-ஏசிஎஸ், ஜீ.சரணியா-ஏசிஎஸ், ர.லாவணியா-ஏ2பி, கி.சிந்துஜா-ஏபிசி.

**வர்த்தகப் பிரிவு**

ஜெ.சாம்பவி-3ஏ,பா.பரணிதா-3ஏ, பா.ஆர்த்தனா-3ஏ,த.இலக்கியா-3ஏ,திவைஸ்ணவி-3ஏ, வி.கௌசிகா-3ஏ, சோ.சாருகேசினி-3ஏ, உ.புவிநிலா-2ஏபி, ந.கம்சாயினி-2ஏபி, க.டொபிக்கா-2ஏபி, யோ.தர்சிகா-2ஏபி, நஸார்பாத்திமாநஸ்மா-2ஏபி, ஆ.சுரேணுகா-2ஏபி, து.துளக்ஷி-2ஏபி,இ.கன்ஸ்ரூபினி-2ஏபி, அ.யான்சலின்-2ஏசி, பு.நிவேதிகா-ஏ2பி, யோ.மதுரிக்கா-ஏ2பி, லோ.கஜேந்தினி-2ஏபி.

**விஞ்ஞான பிரிவு**

ஞாதர்ஷி-2ஏபி,சி.ஞானுகா-2ஏபி, ஞா.கஜவாணி- ஏ2பி, ந.ஷாலிகா-ஏ2பி, ர.பவதாரணி-ஏபிசி, ஸ்ரீ.அபிநயா-ஏ2பி,பஹாபாஸா-3பி,பெறின் தர்சனா-3பி, ச.ஜெதுஷா-2பிசி, க.தாட்சாயினி-பி2சி, பி.தமிழினி-பி2சி, அ.அருண்ஜா-2பிஎஸ்.

**கணிதப்பிரிவு**

த.கஜீந்தா-ஏ2பி, பு.கிருஷாந்தி-ஏ2பி, து.சதுஷனா-2ஏசி, சி.துஷந்திகா-ஏபிசி, ர.யனுசா-ஏபிசி,ப.தாரகா-ஏபிசி, த.வித்தியா-ஏபிசி,பா.பேளினி-ஏ2சி,த.தமிழினி-ஏ2சி.

**உயிர் முறையியல் தொழில்நுட்பம்**

க.ரக்சிகா-ஏபிசி

**பொறியியல் தொழில் நுட்பம்**

ரா.சுமித்தா-ஏபிசி.

**யாழ். பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை**

**கலைப்பிரிவு**

மு.தர்சிகா-3ஏ, லோ.அபிராமி-3ஏ, ஜெ.ஜனுசியா-2ஏசி, ம.வித்தியா-ஏபிசி, இ.நந்திகா-ஏபிசி, சு.யதுர்சிகா-ஏ2சி, வே.நிதர்சினி-2பிசி, கு.தனுஜிகா-2பிசி, அ.சுபிக்சனா-பி2சி.

**விஞ்ஞான பிரிவு**

ஜெமேரிஜெறோனா-2பிஎஸ்




# குடிநீர்க் கிணற்றினுள் ஒயில் ஊற்றிய விசமிகள்

## சாட்டி பகுதியில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

வேலணை பிரதேச சபைக்குட்பட்ட சாட்டி குடிநீர் கிணற்றினுள் நேற்று முன்தினம் காலை விசமிகளால் ஒயில் ஊற்றப்பட்டுள்ளதாக வேலணை பிரதேச சபைத் தவிசாளர் கருணாகரகுருமூர்த்தி தெரிவித்துள்ளார்.

கடந்த சில நாட்களுக்கு முன்னர் பிரதேச சபையின் அனுமதி பெறப்படாமல் தனியார் ஒருவருக்கு சொந்தமான நீர்த்தாங்கியை எடுத்து வந்த சிலர் குறித்த 'கிணற்றில் இருந்து நீரை எடுத்துச் செல்ல முற்பட்டுள்ளனர்.

அப்போது அதை தடுக்க முற்பட்ட சாட்டி மண்கும்பான் நீர்வளத்துறை சங்க உறுப்பினர்களுடன் குறித்த நபர்கள் முரண்பட்டுவிட்டு சென்றுள்ளனர்.

பின்னர் நேற்று பிரதேச சபையினர் குடிநீரை எடுப்பதற்கு குறித்த கிணற்றுக்கு சென்ற போது அங்கு ஒயில் ஊற்றப்பட்டிருப்பதை அவதானித்துள்ளார்.

குறித்த விடயம் தொடர்பாக எனக்கு தெரிவிக்கப்பட்டதையடுத்து உடனடியாக பொதுச் சுகாதாரப் பரிசோதகருக்கு அறிவித்திருந்தேன். கிணற்றை முழுமையாக சுத்தம் செய்த பின்னர் நீரை பெறுவதற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. மேலும் குறித்த சம்பவம் தொடர்பில் பொலிஸில் முறைப்பாடு செய்யப்படவுள்ளதாகவும் தவிசாளர் மேலும் தெரிவித்தார். (இ-9-10)

# ஒஸ்லோ மாநகர பிரதி மேயர் கம்சாயினி வட மாகாண பெண்களுடன் நேற்றுச் சந்திப்பு





(யாழ்ப்பாணம்)

ஈழத்தமிழரான நோர்வே - ஒஸ்லோ மாநகர பிரதி மேயர் கம்சாயினி குணரட்னத்துக்கும் வடக்கு மாகாணத்திலுள்ள மகளிர் அமைப்புக்களுக்கும் இடையிலான கலந்துரையாடல் நிகழ்வு நேற்று 6 ஆம் திகதி யாழ்ப்பாணம் கிறீன் கிறாஸ் விருந்தினர் விடுதியில் இடம்பெற்றது.

இலங்கை கொள்கைகளுக்கான பேரவையின் (Centre for Public Policies) ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் வட மாகாணத்தைச் சேர்ந்த மகளிர் அமைப்புக்களின் பிரதிநிதிகள், உள்ளூராட்சி அமைப்புக்களின் பெண் பிரதிநிதிகள், மனித உரிமை செயற்பாட்டாளர்கள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

பெண் தலைமைத்துவம், பெண்களின் அரசியல் பிரவேசம், ஈழத் தமிழர்களின் போருக்குப் பின்னரான நிலைப்பாடு போன்ற பல விடயங்கள் இதன் போது கலந்துரையாடப்பட்டன.

ஒஸ்லோ மாநகர பிரதி மேயர் கம்சாயினி குணரட்னம் இலங்கையில் பிறந்து, தனது மூன்றாவது வயதில் நோர்வே நாட்டுக்குப் புலம்பெயர்ந்தவராவார். தமிழ் இளைஞர் அமைப்பில் இணைந்து புலம்பெயர் தமிழர்கள் மத்தியில் தமிழர்களின் கலை, கலாசார, பண்பாட்டு வளர்ச்சிக்கான நிகழ்வுகளை நடத்தியதோடு, இன அடக்கு முறைக்கெதிரான இளையோர் அமைப்பின் உப தலைவராகவும் செயற்பட்டு வந்தார்.

2015 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் ஒஸ்லோவில் நடைபெற்ற மாநகராட்சித் தேர்தலின் மூலம் தெரிவு செய்யப்பட்டு, நோர்வேயின் மிக வயது குறைந்த பிரதி மேயராகத் தெரிவு செய்யப்பட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-9)

# வனப்பகுதிக்கு தீ வைப்பு



(அக்கரப்பத்தனை)

அக்கரப்பத்தனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வனப்பகுதிக்கு இனந்தெரியாதோர் தீ வைத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இச் சம்பவம் நேற்றுக் காலை இடம்பெற்றுள்ளது.

குறித்த தீயினால் அக்கரப்பத்தனை வன பகுதியின் ஒரு தொகுதி தீக்கிரையாகியுள்ளதாகவும், தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர பொலிஸார் மற்றும் பொது மக்கள் இணைந்து நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (இ-7)

# சாரதி அனுமதிப்பத்திரம் பெற இன்னுமொரு தொழில்நுட்ப பரீட்சை

(கொழும்பு)

ஒருவர் வாகனம் செலுத்துவதற்கான சாரதி அனுமதிப்பத்திரம் பெறுவதற்கு முன்னர்இன்னுமொருதொழில்நுட்ப பரீட்சையொன்றுக்கு உட்படுத்துவதற்கு நடவடிக்கை முன்னெடுக்கப் படவுள்ளதாக வீதிப் பாதுகாப்பு தொடர்பான தேசிய சபை அறிவித்துள்ளது.

அச்சபையின் தலைவர் டாக்டர் சிசிர கோதாகொட இதனைத் தெரிவித்துள்ளார்.

தொழில்நுட்ப உபகரணங்கள் மூலம் சாரதி அனுமதிப்பத்திரம் பெறும் பயிற்சியின் போது புள்ளிகள் வழங்கப் படவுள்ளன.

ஏ.பி.சி என்றவாறு புள்ளிகள் வழங்கப்படும். இந்தப் பரீட்சைக்கு முகம்கொடுக்கும் ஒருவர் குறைந்தது பீ. புள்ளியைப் பெற்றிருக்க வேண்டும் எனவும் அவர் சாரதி அனுமதிப்பத்திரம் பெறுபவருக்கு தேவையான அடிப்படை அறிவையும் உளப் பலத்தையும் வழங்குவது இந்தப் பரீட்சையின் நோக்கமாகும்.

இதற்கான தொழில்நுட்ப உபகரணங்களை இவ்வருடத்தில் முதலாவதாக இலங்கை போக்குவரத்துச் சபை சாரதி பயிற்சி நிலையங்களுக்கு வழங்கவுள்ளோம். பின்னர் நாடு முழுவதும் வழங்கப்பட்டு பரீட்சிக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# குழந்தையின் ஆடைக்குள் ஹெரோயின் குடும்பஸ்தர் பொலிஸாரால் கைது!

## யாழ்ப்பாணத்தில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

குழந்தையின் ஆடைக்குள் ஹெரோயினை மறைத்து வைத்திருந்த குடும்பஸ்தர் ஒருவர் நேற்று முன்தினம் இரவு யாழ்ப்பாண பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

அரியாலை பூம்புகாரை சேர்ந்த 27 வயது குடும்பஸ்தரே இவ்வாறு கைது செய்யப்பட்டவராவார்.

குறித்த நபர் நேற்று முன்தினம் வவுனியாவில் இருந்து 2 இலட்சம் ரூபாய் பெறுமதியான 15 கிராம் ஹெரோயினை கொள்வனவு செய்து கொண்டு தனது மனைவி, பிள்ளையுடன் யாழ்ப்பாணத்துக்கு வந்துள்ளார். பின்னர் பேருந்து நிலையத்திலிருந்து அரியாலை பூம்புகாரில் உள்ள தனது வீட்டுக்குச் சென்றுள்ளார்.

இந்நிலையில் பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் குறித்த நபரை வழிமறித்து சோதனையிட்டுள்ளனர்.

அப்போது குழந்தையின் ஆடையினுள் 15 கிராம் ஹெரோயின் மறைத்து வைக்கப்பட்டிருப்பதை அவதானித்துள்ளனர். உடனடியாக ஹெரோயினை மீட்டதுடன் குறித்த நபரைக் கைது செய்து மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (இ-9)

# வரவு-செலவுத்திட்டத்திற்கு முன் அரசியல் தீர்மானத்தை எடுக்க போகும் சுதந்திரக் கட்சியின் 17 எம்.பிக்கள்

(கொழும்பு)

அரசாங்கம் எதிர்வரும் பெப்ரவரி 5ஆம் திகதி வரவு-செலவுத் திட்டத்தை தாக்கல் செய்யும் முன் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் இருக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை சேர்ந்த 17 நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமது அரசியல் எதிர்காலம் தொடர்பில் தெளிவான தீர்மானம் ஒன்றை எடுக்க உள்ளதாக தெரிவித்துள்ளனர்.

இந்த 17 நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தில் இணைவது தொடர்பாக தீர்மானிக்க கலந்துரையாடல்களை நடத்தி வருவதாகவும் தெரியவருகிறது.

இந்த அணியில் இருக்கும் மகிந்த அமரவீர, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் செயலாளராக கடமையாற்றிவருவதுடன்நிமால் சிறிபால டி சில்வா, அந்த முன்னணியின் உப தலைவராக கடமையாற்றி வருகிறார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தலைவரான ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, அரசாங்கத்தில் இணையும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அமைச்சு பதவிகளை வழங்கப் போவதில்லை என்று உறுதியாக தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களை அரசாங்கத்தில் இணையுமாறு அழைப்பு விடுத்துள்ளதாக ஐக்கிய தேசியக்கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நடத்தும் இந்தப் பேச்சுவார்த்தையில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவும் நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த திஸாநாயக்கவும் கலந்து கொண்டதாகவும் தெரியவருகிறது.

இதனிடையே ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தேசிய அரசாங்கத்திலிருந்து விலகிய போது, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியுடன் இணைவதாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவில் இணைந்து கொண்ட சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் வழங்கிய வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டும் என மகிந்த அமரவீர தெரி வித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை சேர்ந்த 17 பேர் அணியினர், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுடன் இணைய விரும்பவில்லை என்பதால், அவர்கள் அரசாங்கத்தில் இணைந்து தமது அரசியல் எதிர்காலத்தை உறுதிப்படுத்தி கொள்ள வேண்டும் என முன்னாள் அமைச்சர் பியசேன கமகே தெரிவித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்: பூசம் 2
உயரம்: 6'
தகைமை/தொழில்:A/L,Automobil Engin,மதிப்பீட்டாளர்
எதிர்பார்ப்பு:அரசதொழில்,பட்டதாரி
தொ.இ: B/9056

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: அத்தம் 3
உயரம்: 6'
தகைமை/தொழில்:B.sc ,Marineacademy,Ship,தனியார்
எதிர்பார்ப்பு: படித்தபெண்
தொ.இ: B/9057

பிறப்பு: 1984 இந்து
நட்சத்திரம்: உத்தராடம் 4
கி.பா: 60செவ் 8 இல்
உயரம்: 158 CM
தகைமை/தொழில்:வர்ணம் பூசும் ஒப்பந்தக்காரர்,சொந்தம்
எதிர்பார்ப்பு: வெளிநாடு
தொ.இ: B/9058

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: பூராடம்
கி.பா: 14
உயரம்: 5' 6"
தகைமை/தொழில்:A/L, முகாமையாளர்,தனியார், சுவிஸ் P.R
தொ.இ: B/9060

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1974 இந்து
நட்சத்திரம்: பூரட்டாதி 3
கி.பா: 35 சூரி செவ் 2 இல்
உயரம்: 5' 6"
தகைமை/தொழில்:B.A,M.A, ஆசிரியை, அரச தொழில்
எதிர்பார்ப்பு: பட்டதாரி, வெளிநாடு
தொ.இ: G/1799

பிறப்பு: 1977 இந்து
நட்சத்திரம்: பூரட்டாதி 2
கி.பா: 71செவ் 7 இல்
உயரம்: 5' 4"
தகைமை/தொழில்:A/L,Dip in Cake decorating, Cakemaking,தனியார்
எதிர்பார்ப்பு: அரச, தனியார் தொழில், வெளிநாடு
தொ.இ: G/1808

பிறப்பு: 1972றோமன் கத்தோலிக்கம்
நட்சத்திரம்: கேட்டை 2
கி.பா: 27 செவ் 2 இல்
உயரம்: 5' 4"
தகைமை/தொழில்:O/L,மருந்தக் கலவையாளர், அரசதொழில்
தொ.இ: G/1814

பிறப்பு: 1976 இந்து
நட்சத்திரம்: பூரட்டாதி 4
கி.பா: 18
உயரம்: 5' 2"
தகைமை/தொழில்: B.A(Econ.Spc), நிகழ்ச்சித் திட்ட உதவியாளர், அரசதொழில்
எதிர்பார்ப்பு: பட்டதாரி,உத்தியோகம் விரும்பத்தக்கது
தொ.இ: G/1824

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

# சாவகச்சேரி பிரதேசசபை எல்லைக்குள் 571 வீதிகள் புனரமைக்கப்பட வேண்டும்

## தவிசாளர் வாமதேவன் தகவல்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பிரதேச சபை எல்லைக்குள் 571 வீதிகள் சேறும் சகதியுமாக புனரமைக்கப்பட வேண்டிய கட்டாயத்தில் காணப்படுவதாக சாவகச்சேரி பிரதேச சபைத்தவிசாளர் க.வாமதேவன் தெரிவித்துள்ளார்.

சாவகச்சேரி பிரதேச சபையின் வரவு-செலவுத் திட்டம் தொடர்பாக கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், நாம் முகம் கொடுக்கும் முக்கிய பிரச்சினையாக வீதிப் பிரச்சினை காணப்படுகிறது.

வீதிகள் புனரமைப்பு தொடர்பாக மக்கள் பிரதேச சபையிடம் தொடர் கோரிக்கைகளை விடுத்து வருகின்றனர்.

சாவகச்சேரி பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பல வீதிகள் மக்கள் பயணிக்க முடியாத நிலையில் காணப்படுகின்றன. எமது வருமானத்தை வைத்து மக்களின் வீதிப் பிரச்சினைகளைத் தீர்க்க முடியாது . எமது நாட்டில் அரசியல் ஸ்திரத்தன்மை தொடர்ந்து நிலவுமானால் இவ் வருடம் ஆகக் குறைந்தது 200வீதிகளையாவது புனரமைக்க முடியும்.

எமது பிரதேசத்திற்கு சபை உறுப்பினர்கள் ஒவ்வொருவரினதும் உழைப்பும் முக்கியம். சாவகச்சேரி பிரதேச சபையின் ஒவ்வொரு உப அலுவலகங்களிலும் 25வீதிகளை முதற்கட்டமாக புனரமைக்க திட்டமிட்டுள்ளோம். இம் மாதம் வீதிகளுக்கான மதிப்பீட்டுத் திட்டமிடலை மேற்கொள்ளவுள்ளோம்.


வீதிப் புனரமைப்பு மற்றும் பிரதேச அபிவிருத்தி தொடர்பாக வடக்கு ஆளுநருடனும் கலந்துரையாடி இருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-30)

# ஜனாதிபதியின் நடவடிக்கைக்கு பிரதமர் ரணில் வரவேற்பு!

(கொழும்பு)

அரச பங்குகளை கொண்ட நிறுவனங்கள், கூட்டுத்தாபனங்கள் மற்றும் சபைகளுக்கான தலைவர்களை நியமிக்கும் போது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வெளியிட்டுள்ள சுற்றுநிருபத்திற்கு அமைய நியமிக்குமாறும் ஜனாதிபதியின் இந்த நடவடிக்கை சிறந்த நடவடிக்கை எனவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பு அலரி மாளிகையில் நேற்று இடம்பெற்ற அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களுடனான கூட்டத்தில் பிரதமர் இதனைத் தெரிவித்தார்.



ஐக்கிய தேசிய முன்னணியின் ஐக்கிய கூட்டணி அரசாங்கத்தின் அரச நிறுவனங்களுக்கான தலைவர்களை நியமிக்க குழுவொன்றை நியமித்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, சுற்று நிருபம் ஒன்றை வெளியிட்டார்.

ஜனாதிபதியின் இரண்டு பிரதிநிதிகள், பிரதமரின் இரண்டு பிரதிநிதிகள் மற்றும் நிதியமைச்சின் ஒரு பிரதிநிதி ஆகியோர் இந்த குழுவில் அங்கம் வகிக்கின்றனர்.

அரச நிறுவனங்களுக்கான நியமனங்களை வழங்குவது தொடர்பில் குழு ஒன்றை நியமித்து, சுற்றுநிருபத்தை வெளியிட்டமையானது ஜனாதிபதி எடுத்த சிறந்த தீர்மானம் என பிரதமர், தெரிவித்தார்.

சகல அமைச்சர்களும் இதற்கு அமைய செயற்பட வேண்டும் எனவும் பிரதமர் உத்தரவிட்டுள்ளார். (இ-7)

# 4 ஏக்கர் கஞ்சாப் பண்ணையை சுற்றிவளைத்த அதிரடிப்படையினர்

(புத்தளம்)

புத்தளம் கொஸ்லந்த - அலுத்வெல பிரதேசத்தில் மிகவும் பாதுகாப்பாகவும், இரகசியமாகவும் நடத்திச் சென்ற 4 ஏக்கர் கஞ்சா பண்ணையை புத்தளம் விசேட அதிரடிப்படையினர் சுற்றிவளைத்துள்ளனர்.

50 இலட்சம் ரூபா பெறுமதியான கஞ்சா அப்பகுதியில் பயிரிடப்பட்டிருந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த சுற்றிவளைப்பின் போது சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதற்கிடையில், கடந்த மாதம் 25 ஏக்கர் நிலத்தில் பயிரிடப்பட்டிருந்த 3 கோடி ரூபா பெறுமதியான கஞ்சா பண்ணையை புத்தளம் பொலிஸ்விசேட அதிரடிப்படை சுற்றிவளைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# யானை தாக்கி இளைஞன் மரணம்



வெஹெரகல, நீர்த் தேக்கம் அருகே இளைஞன் ஒருவர் யானைத் தாக்குதலுக்கு இலக்காகி உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்தவர் கதிர்காமத்தைச் சேர்ந்தவர் எனவும், காட்டு யானையிடம் சென்று தனது வீரத்தைக்காட்ட முனைந்த போதே, எதிர்பாராத விதமாக இவர் யானைத் தாக்குதலுக்கு இலக்காகி உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# சம்பளத்தை அதிகரித்தால் அரசிற்கு ரூ.150 பில்லியன் மேலதிக செலவு

(கொழும்பு)

அரச நிர்வாக சேவையிலுள்ள அதிகாரிகளின் சம்பளத்தை 'அதிகரிக்க வேண்டும் என முன்வைக்கப்பட்டுள்ள பிரேரணையால் அரசாங்கத்துக்கு 159 பில்லியன் ரூபா வருடாந்த செலவு ஏற்படுவதாக அரசாங்கத்தின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இவ்வாறு அதிகாரிகளின் சம்பள அதிகரிப்பு பிரேரணையை நிறைவேற்றினால், அதற்காக வருடத்துக்கான சம்பளமாக 147 பில்லியன் ரூபாவையும், ஓய்வூதிய சம்பள கொடுப்பனவுக்காக ஒருவருடத்துக்கு 12 பில்லியன் ரூபாவையும் அரசாங்கம் செலவு செய்ய வேண்டியுள்ளதாகவும் இதனால், பாரிய சம்பள முரண்பாடொன்றுக்கு முகம்கொடுக்க வேண்டி வரும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

சம்பள முரண்பாடு தொடர்பில் கண்டறிய நியமிக்கப்பட்ட குழுவால் இந்தப் பிரேரணை முன்வைக்கப்பட்டுள்ளதாகவும் மார்ச் மாதம் 5 ஆம் திகதி இவ் வருடத்திற்கான வரவு- செலவுத் திட்டம் முன் வைக்கப்படவுள்ளது. இதில் அரச ஊழியர்களின் சம்பள அதிகரிப்பு ஒரு பெரும் பேசுபொருளாக மாறும் என்பது ஊடகங்களில் நீண்ட நாட்களாக வெளியிடப்பட்டு வரும் கருத்து என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# உள்ளூராட்சி மன்றங்களில் ஆரோக்கியமான எதிர்க்கட்சியாக செயற்படுங்கள்- டக்ளஸ்

(யாழ்ப்பாணம்)

நாம் உள்ளூராட்சி மன்றங்களில் ஆட்சி அமைக்க இதர தரப்பினருக்கு ஆதரவு வழங்கியிருந்தாலும் அவர்கள் மக்களின் நலன்களை முன்னிறுத்தாது செயற்பாடுகளை முன்னெடுக்கும் நிலை காணப்படுவதால் நாம் உள்ளூராட்சிசபைகளில் மக்களின் நலன்களை மையமாகக் கொண்டு ஆரோக்கியமான எதிர்க்கட்சியாக செயற்பட வேண்டும் என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.



சுன்னாகம் எம்.எம். மண்டபத்தில் வலிகாமம் பிரதேசத்தின் வலி.தெற்கு, வலி வடக்கு, வலி.மேற்கு, வலி.கிழக்கு, வலி.தென்மேற்கு ஆகிய பிரதேசங்களுக்கு உட்பட்ட கட்சியின் செயற்பாட்டாளர்கள், உள்ளூராட்சி உறுப்பினர்கள், பொறுப்பாளர்களுடனான சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஒவ்வொரு பிரதேச சபையிலும் வெவ்வேறான பிரச்சினைகள் காணப்படுகின்றன. ஆனாலும் அச்சபைகளில் முன்னெடுக்கப்படவுள்ள செயற்பாடுகள் தொடர்பில் எமது கட்சியின் ஒவ்வொரு பிரதேச சபை உறுப்பினர்களும் தாம் முன்னெடுக்கவுள்ள செயற்பாடுகள் தொடர்பில் கலந்துரையாடி ஆரோக்கியமான செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும்.

அவ்வாறான ஒரு செயற்பாடுகளை முன்னெடுப்பதன் ஊடாகவே எமது மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைக்கான தீர்வுகளை பெற்றுக் கொடுக்கக்கூடியதாக இருக்கும். அந்த வகையில் உள்ளூராட்சி மன்றங்களுக்கு நாம் ஆட்சி அமைக்க ஆதரவுகள் தெரிவித்திருந்தாலும் மக்களின் நலன்களை முன்னிறுத்தியதாக எமது செயற்பாடுகள் அமைவதற்கு நாம் ஆரோக்கியமான எதிர்க்கட்சியாக இருந்து செயற்படவேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## 'பணப்பட்டுவாடா பற்றி ஒருபோதும் பேசவில்லை'

# இப்போது இந்த இரகசிய தொடர்பு வேண்டாமே! மைத்திரி-மகிந்த தரப்புக்கு மனோ கணேசன் பதில்

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரி, நிழலாட்சி பிரதமர் மகிந்த (மற்றும் பசில், கோத்தபாய ஆகியோரின் தூதர்கள்), என்னிடம் "பணப்பட்டு வாடா" பற்றி ஒருபோதும் பேசவில்லை என அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

தனது உத்தியோகபூர்வ பேஸ்புக் பக்கத்தில் விடுத்துள்ள பதிவில் அவர் இதனை குறிப்பிட்டுள்ளார். அந்த பதிவில் தொடர்ந்தும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

ஜனநாயக இளைஞர் இணைய தம்பிமார் வெளியிட்ட "65 கோடி ரூபா பேரப் பேச்சு ஒலிநாடாவை" செவிமடுத்த பல நண்பர்கள் என்னிடம், "மைத்திரியும், மகிந்தவும் உங்களிடம் என்ன பேரம் பேசினார்கள்" என்று ஆவலுடன் கேட்கிறார்கள்.

ஒக்டோபர் முதல் டிசெம்பர் வரை பெருங்கோடிக் கணக்கான பணம் புரண்டது உண்மைதான். ஆனால், எம்முடன் பணப்பட்டுவாடா பற்றி பேசியது எம்மை



கொண்டு போய் அங்கே சேர்த்து விட்டு அதில் "கமிஷன்" பெற துடித்தது "புரோக்கர்கள்" தான்.

ஜனாதிபதி மைத்திரி, நிழலாட்சி பிரதமர் மகிந்த (மற்றும் பசில், கோத்தபாய ஆகியோரின் தூதர்கள்), என்னிடம் "பணப்பட்டு வாடா" பற்றி ஒருபோதும் பேசவில்லை. என்னையும், எமது கட்சியையும், எமது கூட்டணியையும் வந்து தமது "அரசுடன்" இணைந்துக் கொள்ளுமாறுதான் அழைத்தார்கள்.

அதிலும் ஒருவர் மிகத் தெளிவாக ஒன்றை சொன்னார். "மனோ, உங்களை அழைப்பது நாடாளுமன்றத்தில் 113 எம்.பிக்கள், என்ற பெரும்பான்மையை ஏற்படுத்திக்கொள்ள அல்ல.

அதை நாம் ஏற்படுத்துவோம். நீங்கள் வந்து எமது அரசை வர்ணமயப்படுத்த ("வர்ணவத்" என்ற சிங்கள வார்த்தையை பயன்படுத்தினார்!) வேண்டும்.

இதை ஒரு "தேசிய" அரசாங்கமாக ஆக்க வேண்டும். "சிங்கள-பௌத்த" அரசு ஒன்றை அமைக்க நாம் இப்போது விரும்பவில்லை. அது யுத்த காலம். இது யுத்தமில்லா காலம்." என்று சொன்னார்.

அமைதியாக கேட்டு விட்டு நான் சொன்னேன்.

"அழைப்புக்கு நன்றி. இந்த அரசு உருவாக்கப்பட்ட, "பின்கதவு முறைமை" எமக்கு ஏற்புடையதல்ல. ஆட்சி மாற்றம் தேர்தல் மூலமாகவே வரவேண்டும். உங்களுடன் எமக்கு தனிப்பட்ட விரோதம் கிடையாது.

உங்களை எதிரியாகக் கருதும் அளவுக்கு நான் ஒரு முதிர்ச்சியற்ற அரசியல் வாதியும் அல்ல! எதிர்கால தேர்தலில் வெற்றி பெற்று ஆட்சி அமையுங்கள்." தொடர்ந்தும் சொன்னேன்.

"அப்போதும் எமது ஆதரவு தேவைப்பட்டால் அழையுங்கள். அரசியலில் நீண்ட காலம் நான் இருக்க போவதில்லை. அப்போதும் நான் இருந்தால், ஒரு ஜனநாயக கட்சி தலைவன் என்ற முறையில் பரிசீலிக்கிறேன்.

இப்போது இந்த இரகசிய தொடர்பு வேண்டாமே." என்று கூறி சந்தோஷமாக விடை பெற்றேன் என அமைச்சர் மனோ கணேசன் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# இரட்டைப் பிரஜாவுரிமையுள்ள த.தே.கூ. எம்.பிக்களுக்கு எதிராக விரைவில் வழக்கு

## சிசிர ஜெயகொடி தெரிவிப்பு

(கொழும்பு)

இரட்டைப் பிரஜாவுரிமையுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் களுக்கு எதிராக அடுத்த. வாரம் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப் போவதாக பாராளுமன்ற உறுப்பினர் சிசிர ஜயகொடி தெரிவித்துள்ளார்.

தற்பொழுது இரட்டைப் பிரஜாவுரிமை பெற்றுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் பலருடைய தகவல்



கள் கிடைக்கப் பெற்றுள்ளதாகவும், இவர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்வது தொடர்பில் சட்ட ஆலோசனை பெற்றுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# கிழக்கின் ஆளுநர் ஹிஸ்புல்லா ஒருதலைப்பட்சமாக செயற்பாட்டால் கூட்டமைப்பு மௌனம் காக்காது



(கிரான்)

கிழக்கில் புதிதாக நியமிக்கப்பட்டுள்ள ஆளுநர் ஹிஸ்புல்லாஹ் பல்லின சமூகத்துக்குரிய தலைமைத்துவம் இல்லாமல், ஓரின சமூகத்துக்குரியவராக செயற்படும் பட்சத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மௌனம் காக்காது என அக்கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஞானமுத்து சிறிநேசன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு கிரான் பிள்ளையார் ஆலய முன்றலில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"ஜனாதிபதி தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி ஆளுநர்களை நியமித்துள்ளார். ஆளுநர்களாக நியமிக்கப்படுபவர்கள் பல்லின சமூகத்தினுடைய தலைவர்களாக செயற்பட்டு சகலருக்கும் அபிவிருத்தி செய்ய வேண்டியவர்களாக இருக்க வேண்டும்.

கிழக்கு மாகாணத்திலும் அதனடிப்படையிலேயே ஆளுநர் நியமனம் நடைபெற்றுள்ளது. இதற்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மீது குற்றம் சுமத்துவது தவறான விடயமாகும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, நாடு எதிர்நோக்கவிருந்த பாரிய ஆபத்தினை தடுத்துள்ளது. ஒக்டோபர் 26 ஆம் திகதி இடம்பெற்ற ஆட்சி மாற்றத்தின் போது சில ஊடகங்கள் ஒருதலைப்பட்சமாகச் செயற்பட்டன. எதிர்க்கட்சி தொடர்பான எந்த செய்திகளும் வெளியிடப்படவில்லை.

அதேநேரம் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கு ஆதரவு வழங்கக்கூடாது, நடுநிலை வகிக்கக்கூடாது, எமது உறவுகள் காணாமல் போனமைக்கு காரணமானவர்கள் மீண்டும் ஆட்சிக்கு வரக்கூடாது என்றும் தெரிவித்து காணாமல் போன வர்களின் உறவினர்கள் எமக்கு பல கடிதங்களை அனுப்பினார்கள்.

எதிர்வரும் தேர்தல்களில் எமது மக்கள் கவனமாக செயற்பட வேண்டும். தமது அரசியல் இலாபத்திற்காக பிழையான வதந்திகளை மக்கள் மத்தியில் பரப்புவதற்கு மாற்று அணியினர் தயாராகவுள்ளனர்.

மக்களின் ஆணையை விற்று சுயநல அரசியல் செய்வதற்கு நாங்கள் தயாராக இல்லை" எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# குறை 'களை' பதிகம் 03



## வாகனச் சாரதி நித்திரையாகதி


நிறுத்தி வைக்கப்படும் வாகனம் மீது
நித்திரை தூக்கத்தில் மோதும் நிலவரம்
உறுத்துது நெஞ்சை ஏ-9 வீதியில்
ஒவ்வொரு நாளும் விபத்து விதியதா

உழைப்பு ஊக்கம் ஓய்விலா பயணமும்
உருப்படி வாழ்வுக்கு உதவுமா நிம்மதி
அழைப்பு யமனுக்கு ஆர்கொடுத்தாலும்
அகால மரணம் தான் இருப்பவர்க்கவலமே

இரு வழிப்பாதை கொழும்பு யாழ். என
இரவு நித்திரை இல்லாப் பயணத்தால்
தெருவழி நிறுத்தி திடுக்கிடும் நித்திரை
தீர்வு தருமா கண்களுக்கு ஓய்வினை
கணப் பொழுதே தான் கண் வெட்டும்
கடுகதி வாகனம் காளையாய் முட்டும்
உணர்வினை எப்போ உச்சிக்கு எடுப்பீர்
ஓர் உயிர்தானும் அவலத்தில் அகப்பட வேணாம்

வைகை வளவன்
கொக்குவில்.

# எதிர்ப்பால் மாத்தறையிலிருந்து கொழும்புக்குத் திரும்பினார் அமைச்சர் அர்ஜுன ரணதுங்க



(மாத்தறை)

மாத்தறையிலிருந்து பெலியத்த வரை அமைக்கப்பட்டுள்ள புதிய புகையிரதப் பாதையில் நேற்று முதன்முதலாக சென்ற புகையிரதத்தில் கண்காணிப்பு விஜயத்தை மேற்கொண்டிருந்த போக்குவரத்து அமைச்சர் அர்ஜுன ரணதுங்கவுக்கு எதிர்ப்புகள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

பெலியத்த புகையிரத நிலையத்துக்குச் சென்ற அமைச்சரிடம் இது மகிந்த ராஜபக்ஷவால் அமைக்கப் பட்ட புகையிரத பாதை எனத் தெரிவித்து மகிந்தவின் ஆதரவாளர்கள் எதிர்ப்பை தெரிவித்துள்ளனர். இதனையடுத்து ஊடகங்களுக்கும் எவ்வித கருத்தையும் தெரிவிக்காமல் அமைச்சர் அர்ஜுன ரணதுங்க அங்கிருந்து சென்றுள்ளார்.

அத்துடன் குறித்த கண்காணிப்பு புகையிரதத்தில் மகிந்தவின் ஆதரவாளர்கள் மகிந்தவுக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் சுவரொட்டிகள், பதாகைகளையும் காட்சிப்படுத்தியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# கூட்டமைப்பு ஒத்துழைக்காவிட்டாலும் தமிழர்கள் எமக்கு ஒத்துழைப்பார்கள்

## பசில் ராஜபக்ஷ நம்பிக்கை



(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒத்துழைப்பு வழங்காவிட்டாலும், தமிழர்கள் தமக்கான ஒத்துழைப்புக்களை வழங்குவார்களென ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் பசில் ராஜபக்ஷ நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் சனிக்கிழமை ஊடகவியலாளர்களைச் சந்தித்தபோதே பசில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"கிளிநொச்சியில் ஏற்பட்ட மழை வெள்ளத்திற்கு நிவாரணங்கள் வழங்க பல்வேறு தரப்பினரும் முன்வந்துள்ளனர். நாமும் பொதுஜன பெரமுன சார்பில் உட்கட்டமைப்பு வசதிகளை மேற்கொள்ள முன்வந்துள்ளோம். மக்களுக்குப் பயனுள்ள ஏதேனும் செயற்பாட்டை மேற்கொள்ளவேண்டும் என்றே நாம் இந்நடவடிக்கையை மேற்கொண்டுள்ளோம்.

நாம்தான் மீள்குடியேற்றத்தை அதிகமாக மேற்கொண்டுள்ளோம். 6 மாதங்களிலேயே மிதிவெடிகளை அகற்றி, மக்களைக் குடியேற்றினோம். மிதிவெடிகளை அகற்றி, அந்தக் காணிகளை விவசாய நிலங்களாக மாற்றினோம். விவசாயம், மீன்பிடித்துறை என்பனவற்றை ஒரு வருடத்திலேயே அபிவிருத்தி செய்தோம்.

மேலும், யாழ்தேவியை மீண்டும் ஆரம்பித்தோம். மின்சாரம், வீதி, குளங்கள் உள்ளிட்ட வசதிகளையும் நாம் வடக்கின் வசந்தம் செயற்றிட்டத்தின் ஊடாக மேற்கொண்டோம். இதில் எஞ்சியுள்ளவற்றை கூட செய்ய தற்போதுள்ளவர்களால் முடியாதுள்ளது.

எல்லாவற்றையும் உடனடியாகச் செய்து முடிக்க முடியாது. இந்தக் குறையை நாம் அடுத்த முறை வரும்போது இல்லாது நிவர்த்தி செய்வோம். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒத்துழைக்காவிட்டால் கூட, தமிழர்கள் எமக்கான ஒத்துழைப்புக்களை வழங்குவார்கள் என நாம் உறுதியாக நம்புகிறோம்.

எமது குறைகளை நாம் எதிர்காலத்தில் இல்லாது செய்வோம். இதற்கு எமது கட்சி தயாராகவே இருக்கிறது. பொதுஜன பெரமுன என்பது புதிய கட்சியாகும். நாம் அனைவரும் குறைகளை நிவர்த்தி செய்து முன்னோக்கிச் செல்ல வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)



புதுவருடத்தை முன்னிட்டு வடமாகாண இலங்கை வங்கி ஓய்வூதியர் சங்கத்தினால் கொழும்புத்துறையில் அமைந்துள்ள புனித யோசப் வயோதிபர் இல்லத்திற்கு ஒரு தொகுதி ஆடைகள் மற்றும் பால்மா வகைகள் என்பன தலைவர் உலகநாதன் தலைமையில் வழங்க[illegible]ன.

# எதிர்க்கட்சி ஆசனத்தில் நாளை மகிந்த அமர்வார்

## தினேஷ் தெரிவிப்பு



(கொழும்பு)

சபாநாயகர் கரு ஜெயசூரியவின் அறிவிப்பிற்கு இணங்க நாளை செவ்வாய்க்கிழமை பாராளுமன்ற அமர்வின்போது மகிந்த ராஜபக்ஷ எதிர்க்கட்சி தலைவர் ஆசனத்திலும், ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு உறுப்பினர்கள் எதிர்க்கட்சி ஆசனத்திலும் அமர்வார்கள் என ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார்.

மேலும் எதிர்க்கட்சி காரியாலயம் மற்றும் எதிர்க்கட்சி தலைவரின் உத்தியோகபூர்வ இல்லம் ஆகியவற்றையும் ஒப்படைக்குமாறும் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

நாளைய தினத்திலிருந்து எதிர்க்கட்சி தலைவர் மகிந்த ராஜபக்ஷவின் தலைமைத்துவத்தின் கீழ் எதிர்க்கட்சியாக எமது நடவடிக்கைகளை ஆரம்பிக்கவுள்ளோம். இதன்போது நடைபெறவேண்டிய தேர்தல்களை உரிய காலப்பகுதிக்குள் நடத்துவதற்கு தொடர்ச்சியாக அழுத்தங்களை பிரயோகிப்போம் என மேலும் தெரிவித்தார். (7)

# மூடப்பட்டிருந்த புகையிரதக் கடவையை உடைத்து உள்நுழைந்தது இ.போ.ச.பேருந்து

## பாரிய விபத்து தடுக்கப்பட்டது; பயணிகள் மயிரிழையில் உயிர் தப்பினர்




(குருமன்காடு)

மன்னாரில் இருந்து வவுனியா நோக்கிப் பயணிகளை ஏற்றிக் கொண்டு பயணித்துக் கொண்டிருந்த இ.போ.ச. பேருந்து ஒன்று வவுனியா- மன்னார் வீதியில் காமினி வித்தியாலயத்திற்கு அருகில் உள்ள மூடப்பட்டிருந்த புகையிரதக் கடவையை உடைத்துக் கொண்டு உள்நுழைந்த நிலையில் புகையிரதம் மற்றும் பேருந்து சாரதிகளின் விரைவான செயற்பாட்டால் பாரிய விபத்து தடுக்கப்பட்டதுடன் சுமார் 50 வரையிலான பயணிகள் உயிர் தப்பிய சம்பவம் இடம்பெற்றுள்ளது.

நேற்று முற்பகல் 10.30 மணியளவில் இடம்பெற்ற இச் சம்பவம் குறித்து மேலும் தெரிய வருவதாவது,

மன்னாரில் இருந்து வவுனியா நோக்கி இலங்கை போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான பயணிகள் பேருந்து ஒன்று வவுனியா - மன்னார் வீதியில் உள்ள காமினி வித்தியாலத்திற்கு அண்மையில் பயணித்த போது யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு நோக்கி பயணித்த புகையிரதத்திற்காக அப்பகுதியில் இருந்த புகையிரதக் கடவை மூடப்பட்டுள்ளது. எனினும் மூடப்பட்டதை அவதானிக்காத இ.போ. சபை பேருந்தின் சாரதி மூடப்பட்டிருந்த பாதுகாப்பு கடவையை உடைத்துக் கொண்டு புகையிரதப் பாதைக்குள் நுழைந்தார். இதனை அவதானித்த புகையிரத சாரதி புகையிரதத்தின் வேகத்தை கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்த அதேவேளை, சுதாகரித்த இ.போ.சபை பேருந்து சாரதி உடனடியாக பேருந்தை பின்பக்கமாக செலுத்தி விபத்தில் இருந்து காப்பாற்றினார். இதன் போது பேருந்தில் இருந்த சுமார் 50 வரையிலான பயணிகளும் கூச்சலிட்டு பதறியடித்து பேருந்தில் இருந்து இறங்கி ஓடினர். இதன்பின் குறித்த புகையிரதம் பயணத்தைத் தொடர்ந்தது.

குறித்த குழப்ப நிலை தணிவதற்குள், மற்றொரு புகையிரதம் கொழும்பில் இருந்து யாழ்.நோக்கி அதே வழித்தடத்தில் வந்துள்ளது. இதன்போது புகையிரத கடவைக் காப்பாளர் புகையிரதக் கடவையை மூடாது அசமந்தமாக இருந்துள்ளார். அதேவேளை பயணிகள் புகையிரத கடவையை கடந்து சென்று கொண்டிருந்ததுடன், வாகனங்களும் பயணித்துள்ளன. இந்நிலையில் அந்த வழித் தடத்தில் வந்த புகையிரம் ஒலிச் சமிக்ஞை ஒலித்தபடி வேகத்தை கட்டுப்படுத்தி புகையிரதத்தை நிறுத்தியமையால் மீண்டும் ஏற்பட இருந்த விபத்து தவிர்க்கப்பட்டது.

இச் சம்பவங்கள் தொடர்பில் சம்பவ இடத்திற்கு விரைந்த வவுனியா பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளதுடன் இ.போ. சபை பேருந்தை பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு சென்று தடுத்து வைத்தனர்.(2-250)

## பூநகரி பிரதேச செயலகம் மூன்றாமிடம்

(பூநகரி)

தேசிய உற்பத்தி திறன் போட்டியில் பூநகரி பிரதேச செயலகம் மூன்றாம் இடத்தைப் பெற்றுள்ளது. (2-84)




## இராணுவத்தால் சுட்டு படுகொலை செய்யப்பட்ட

# மேரி பஸ்ரியன் அடிகளார்,10 பொதுமக்களின் நினைவேந்தல் வங்காலையில் அனுஷ்டிப்பு





மன்னார் வங்காலையில் 1985ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 06 ஆம் திகதி வங்காலை தூய ஆனாள் பங்குத் தந்தையாக பணியாற்றிய அருட் தந்தை மேரி பஸ்ரியன் அடிகளாரும், அவருடன் தங்கியிருந்த சிறுவர்களும், உதவியாளர்களும் பொது மக்களுமென 10 பேர் இலங்கை இராணுவத்தால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

சுட்டுக் கொல்லப்பட்ட அருட்தந்தை மேரி பஸ்ரியனின் அடிகளார் மற்றும் மக்களின் 34 ஆவது ஆண்டு நினைவு நிகழ்வு நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணியளவில் வங்காலை பங்குத்தந்தை அருட்தந்தை மார்க்கஸ் அடிகளார் தலைமையில் வங்காலை தூய ஆனாள் ஆலய முன்றலில் இடம் பெற்றது.

இதன் போது மன்னார் மறைமாவட்ட குரு முதல்வர் அருட்தந்தை விக்டர் சோசை அடிகளார் ஈகச் சுடர் ஏற்றி அருட்தந்தை மேரி பஸ்ரியன் அடிகளாருடைய சிலைக்கு மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினார்.

அதனைத் தொடர்ந்து படுகொலை செய்யப்பட்ட 10 பொது மக்களுக்கும் வங்காலை பங்குத்தந்தை அருட்தந்தை மார்க்கஸ் அடிகளார் தலைமையில் சுடர் ஏற்றப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டது.இதன் போது வங்கரலை பங்கினைச் சேர்ந்த மக்கள் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர்.

இதன் போது மன்னார் மறைமாவட்டத்தைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான மக்களுக்கும் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தினர்.

அதனைத் தொடர்ந்து 34ஆவது ஆண்டு நினைவையொட்டி வங்காலை தூய ஆனாள் ஆலயத்தில் இரத்ததான நிகழ்வும் இடம் பெற்றது.

இதில் பலர் கலந்து கொண்டு இரத்ததானம் செய்தமை குறிப்பிடத்தக்கது. (2-285)

# நந்திக்கடல்,சிறுகடல் பகுதிகளில் கூட்டு வலைத் தொழிலுக்குத் தடை

(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்டத்தில் நந்திக்கடல் உள்ளிட்ட சிறுகடல் பகுதிகளில் கூட்டு வலைத்தொழில் தடை செய்யப்பட்டுள்ளதாக மாவட்ட கடற்றொழில் நீரியல்வளத் திணைக்களத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிறுகடல் பகுதிகளான கொக்கிளாய், கொக்குத் தொடுவாய் ஆகிய கடல்பகுதிகளில் வெளிமாவட்ட மீனவர்களின் அனுமதியற்ற தொழில் நடவடிக்கைகளால் தமது தொழில்கள் பாதிக்கப்பட்டிருப்பதாகவும் பெருமளவான கடற்றொழில் உபகரணங்கள் சேதமாக்கப்படுவதாகவும் பிரதேச கடற்றொழிலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

ஆரம்பத்தில் இவ்வாறான சட்டவிரோதத் தொழில் அதிகரித்துக் காணப்பட்டாலும் குறிப்பிட்டகாலத்திற்கு முன்னர் இந்த தொழில் நடவடிக்கைகள் தடுக்கப்பட்டிருந்தன.

தற்போது வெளிமாவட்ட மீனவர்களின் வருகையும் அனுமதியற்ற கூட்டு வலைத் தொழில்களாலும் தமது தொழில்கள் பாதிக்கப்படுவதுடன், தமது வலைகளும் அறுத்துச் சேதமாக்கப்படுவதாகவும் இதனால் தமது வாழ்வாதாரம் கீழ் நோக்கிச் செல்வதாகவும் பாதிக்கப்பட்ட கடற்றொழிலாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இதேவேளை நந்திக் கடல் போன்ற சிறுகடல் பகுதியிலும் இந்த சட்டத்திற்கு முரணான தொழில்கள் மேற்கொள்ளப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பில மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களத்திடம் வினவியபோது, சிறுகடல் பகுதிகளில் இந்த கூட்டு வலை தொழில் முற்றாக தடை செய்யப்பட்டுள்ளது.

சட்டத்திற்கு முரணாக இவ்வாறு தொழில்களில் ஈடுபவர்கள் கைது செய்யப்பட்டு அவர்களுக்கு எதி ராக சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக அவர்கள் தெரிவித்துள்ளனர். (2-315)

## பத்தரமுல்ல சீலரத்தின தேரர்

# முல்லைத்தீவு மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கல்




(பனிக்கன்குளம்)

பத்தரமுல்ல சீலரத்தின தேரர் நேற்று முன்தினம் முல்லைத்தீவில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்களை வழங்கி வைத்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் கொக்கிளாய் முகத்துவாரம் கொக்கிளாய் மற்றும் நாயாறு பகுதிகளில் வறுமைக்கோட்டுக்கு உட்பட்ட வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு பத்தரமுல்ல சீலரத்ன தேரர் உள்ளிட்டவர்களால் ஒரு தொகுதி பாடசாலை உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன. (2-281)

# ஒரு அரசின் ஆளுகைக்குள் கல்வி நடவடிக்கை இருக்கவேண்டும்

## சிறிதரன் எம்.பி. தெரிவிப்பு



(கண்டாவளை)

கல்வி நடவடிக்கை என்பது ஒரு அரசின் ஆளு கைக் குட்பட்ட நடவடிக் கையாக இருக்கவேண்டும். அது ஒரு இராணுவ நடவ டிக்கை யாகவோ அல்லது துணைப் படை பயிற்சி பெற்ற ஒரு வருக்குக்கீழ் இருக்கக் கூடாது என பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் சிவில் பாதுகாப்பு திணைக்களத்தின் கீழ் நிர்வகிக்கப்படுகின்ற முன்பள்ளிகளை கல்வித்திணைக்களத்தின் கீழ் கொண்டுவருமாறு தொடர்ச்சியாக கோரிக்கை விடுக்கப்பட்டு வருகின்றது.

அதாவது முல்லைத்தீவு மாவட்டத்தில் 90 முன்பள்ளிகளும், கிளிநொச்சி மாவட்டத்தில் 248 முன்பள்ளிகளும் இராணுவக்கட்டமைப்பின் கீழ் உள்ள சிவில் பாதுகாப்பு திணைக்களத்தினால் நிர்வகிக்கப்பட்டு வருவதுடன், இந்த முன்பள்ளிகளில் பணியாற்றுகின்ற 550 வரையான ஆசிரியர்களும் சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தின் கீழ் சிவில் பாதுகாப்பு படையாளிகளுக்கான பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளதுடன். இந்த முன்பள்ளிகள் தொடர்ந்து இராணுவ கட்டமைப் பிற்குட்பட்ட சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தினால் நிர்வகிக்கப்பட்டு வருகின்றன.

இது தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் கருத்துத் தெரிவிக்கையில், இறுதியாக நடைபெற்ற ஜனாதிபதி செயலணிக்கூட்டத்தில் வடக்கு, கிழக்கிலே உள்ள முன்பள்ளிகளை இராணுவ சிவில்திணைக்களத்தின் கீழ் வைத்திருக்க முடியாது என்ற கோரிக்கையை நான் முன்வைத்திருந்தேன். முன்பள்ளி ஆசிரியர்கள் கல்வித் திணைக்களத்தின் கீழ் விடுவித்து அவர்களுக்கான சம்பளங்கள், அரச ஊழியர் என்ற அடிப்படையில் மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற கோரிக்கையை நான் முன்வைத்திருந்தேன்.

இராணுவப் புலனாய்வாளர்கள், சிவில் திணைக்கள அதிகாரிகள், அவர்களுக்கு தவறான கருத்துக்களை விதைத்து அவர்களை வேறு திசைக்கு கொண்டு செல்வதை எங்களால் அவதானிக்க முடிகின்றது.

குறிப்பாக, இராணுவச் செயற்பாடுகள், இராணுவப் பிரசன்னங்கள், இராணுவ விஸ்தீரணங்கள் இந்த மண்ணிலே விதைக்கப்பட்டுள்ளன.

இந்தச் சூழலில் சர்வதேச அழுத்தம் இலங்கைக்கு அதிகரித்துள்ளது. இதனை மறைப்பதற்காக இராணுவ சிவில் திணைக்களங்களின் மூலம் எமது மக்களை இழுத்து அரசாங்கம் மறைமுறைமாக தனது நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

இருந்தாலும் நாங்கள் இந்த விடயத்தில் உறுதியாக இருக்கின்றோம். கல்வி நடவடிக்கை என்பது ஒரு அரசிற்கு கீழ் சிவில் நடவடிக்கையாக இருக்க வேண்டும்.

மாறாக அதுஒரு இராணுவ நடவடிக்கையா கவோ அல்லது இராணுவத் துணைப்படைப்பயிற்சியைப் பெற்ற ஒருவருக்குக்கீழ் இருக்கக்கூடாது என்பதில் மிகத்தெளிவாக நாங்கள் இருக்கின்றோம் என்று அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (2-315)

கிளிநொச்சி விசேட பொருளாதார மத்திய நிலையத்தை

# மீள்கேள்வி கோரல் மூலம் உள்ளூர் வர்த்தகர்களுக்கு வழங்க நடவடிக்கை

## அமைச்சர் ஹரிசன் தெரிவிப்பு



(கண்டாவளை)

கிளிநொச்சியில் அமைந்துள்ள விசேட பொருளாதார மத்திய நிலையத்தை மீள்கேள்வி கோரல் மூலம் உள்ளூர் வர்த்தகர்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று விவசாயம், கிராமப்புற பொருளாதார அலுவல்கள், கால் நடைகள் மேம்பாடு, நீர்ப்பாசனம் மற்றும் மீன்பிடி மற்றும் நீரியல் வள அமைச்சர் பி.ஹரிசன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி கனகபுரம் வீதியில் கடந்த 2011 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 20 ஆம் திகதி கிளிநொச்சி விசேட மத்திய பொருளாதார நிலையத்திற்கான கட்டுமானப்பணிகள் ஆரம்பிக்கப்பட்டு 2017 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 14 ஆம்திகதி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு பல மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்ட இப்பொருளாதார மத்திய நிலையம் பயன்பாடற்ற நிலையம் ஐந்து வரையான வர்த்தகர்கள் மட்டுமே வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

நாற்பதிற்கு மேற்பட்ட வர்த்தக நிலையங்களில் குறிப்பிட்ட ஒரு சில கடைகள் தவிர ஏனைய கடைகள் நீண்டகாலமாக பூட்டிய நிலையில் காணப்படுகின்றன.

இதுவரை காலமும் இதற்கான கேள்விகோரல்கள் சம்பந்தப்பட்ட அமைச்சினாலே கோரப்பட்டு கடைகள் வழங்கப்பட்டன. குறித்த பொருளாதார மத்திய நிலையத்தை உள்ளூர் வர்த்தகர்களிடம் வழங்க நடவடிக்கை எடுக்குமாறு கரைச்சிப் பிரதேச சபை மற்றும் மாவட்ட செயலகம் என்பவற்றால் கோரிக்கைகள் முன் வைக்கப்பட்டுள்ள போதும், இதுவரை உள்ளூர் வர்த்தகர்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

நேற்று முன்தினம் கிளிநொச்சிக்கு விஜயம் செய்த விவசாயம், கிராமப்புற பொருளாதார அலுவல்கள், கால்நடைகள் மேம்பாடு, நீர்ப்பாசனம் மற்றும் மீன்பிடி மற்றும் நீரியல் வள அமைச்சர் பி.ஹரிஸனிடம் இது தொடர்பில் வினவியபோது,

கிளிநொச்சி விசேட பொருளாதார மத்திய நிலையத்திற்கான மீள்கேள்வி கோரல் விடப்பட்டு உள்ளூர் வர்த்தகர்களுக்கு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-315)

# குருத்துவ அர்ப்பணத்தின் 46 வது ஆண்டில் தடம்பதிப்பு

(மன்னார்)

மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இம்மானுவேல்பெர்னாண்டோ ஆண்டகை நேற்றைய தினம் தனது குருத்துவ அர்ப்பணத்தின் 46 வது ஆண்டில் தடம் பதித்துள்ளார்.

மன்னார் மறை மாவட்ட ஆயர் மேதகு இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை 1973 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 6 ஆம் திகதி மறைந்த திருத்தந்தை 6 ஆம் பவுலினால் உரோம் வத்திக்கான் நகரில் அருட்பணியாளராகத் திருப்பொழிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (2-285)

# க.பொ.த.உயர்தர பரீட்சைப் பெறுபேறு-2018

**மு/உடையார்கட்டு மகா வித்தியாலயம்**

விஞ்ஞானப்பிரிவு

சி.தர்சிகன்-2ஏபி, இ.தர்ணிசன்-2பிசி, ஸ்.சஜிதா-பி2சி, கு.விதுசன்-பி2சி, ம.நிதர்சன்-பிசிஎஸ், சி.தனுசா-2சிஎஸ், ஜெ.அபிசா-3சி.

கணிதப்பிரிவு

வீ.வினோஜன்-2பிசி, ம.நிதர்சன்-2சிஎஸ், தே.யுடிற்ரன் லொசன்- சி2எஸ்

வர்த்தகப்பிரிவு

யோ.சுதர்சினி- 2ஏபி, சி.செந்துரன் -2ஏபி, இ.ரமணதாஸ் -ஏபிசி, ஜெ.பிறேவோறேமிஜன்-ஏபிசி, க.அபியுத்-ஏபிசி.

கலைப்பிரிவு

த.ஜமுனப்பிரியதர்சினி-3ஏ, ச.நிதர்சனா-3ஏ, க.தனுசியா-3ஏ, ஜெ.தர்சிகா-2ஏபி, சி.தர்சிகா-2ஏபி, அ.கிந்துஜா-ஏபிசி, இ. பமீளா-ஏபிசி, தெ.கிருசாந்தி-ஏபிசி, அ.ஜென்சி-ஏபிசி, மு.கீர்த்திகன்-பி2சி.

# வெள்ளத்தால் சேதமடைந்த தற்காலிக வீடுகள் சீரமைப்பு



(கண்டாவளை)

இலங்கை பொதுஜன பொறியியல் முன்னணியினரால் கிளிநொச்சியில் வெள்ளத்தால் சேதமடைந்த வீடுகளை சீர் செய்யும் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

கிளிநாச்சி மருதநகர் பகுதியில் வெள்ளத்தால் இவ்வாறு சேதமடைந்த தற்காலிக வீடுகளை புனர மைக்கும் பணியில் குறித்த குழுவினர் அண்மையில் ஈடுபட்டிருந்தனர்.

பொறியியலாளர்கள் உள்ளிட்ட குழுவினரே இவ்வாறு குறித்த பணியில் ஈடுபட்டனர். இதன்போது சேதமடைந்த வீடுகள் புனரமைக்கப்பட்டதுடன், மின்சாரவசதிகளையும் மீளவும் ஏற்படுத்தி கொடுக்கப்பட்டது, இதேவேளை நேற்றைய தினம் குறித்த பணிகள் கண்டாவளைபிரதேச செயலர் பிரிவில் இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது. (2-315)

# 300 மாணவர்களுக்கு பணவவுச்சர்கள்



(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட 300 மாணவர்களுக்கு தலா இரண்டாயிரம் ரூபா பெறுமதியான பணவவுச்சர்களை புலம்பெயர் வாழ் உறவுகளான செல்வரட்ணம் குடும்பம் மற்றும் முத்துப்பிள்ளையார் புடைவை வாணிப உரிமையாளர் ஆகியோர் வழங்கி வைத்துள்ளனர்.

கண்டாவளைப் பிரதேசத்தில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட 200 மாணவர்களுக்கு தலா இரண்டாயிரம் ரூபா பெறுமதியான வவுச்சர்களும் கரைச்சிப் பிரதேசத்தில் பாதிக்கப்பட்ட 100 மாணவர்களுக்கு தலா இரண்டாயிரம்ரூபா பெறுமதியான வவுச்சர்களும் இவ்வாறு வழங்கப்பட்டுள்ளன.

இதேவேளை கண்டாவளைப்பிரதேசத்தில் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கான வவுச்சர்கள் வழங்கும் நிகழ்வு கண்டாவளைப் பிரதேசத்தில் பிற்பகல் கண்டாவளைப்பிரதேச செயலாளர் த.பிருந்தாகரன் தலைமையில் நடைபெற்றுள்ளது.

இதில் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன், உதவிப்பிரதேச செயலர் மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், முன்னாள் மாகாண சபை உறுப்பினர் சு.பசுபதிப்பிள்ளை, கரைச்சிப்பிரதேச சபை உறுப்பினர் ராமலிங்கம் உள்ளிட்டோர் கலந்து கொண்டிருந்தனர். (2 -315)

# புதூர் ஆயுதம் மீட்பு தொடர்பில் பொலிஸார் தீவிர விசாரணை

(குருமன்காடு)

வவுனியா, புதூர் பகுதியில் கைத்துப்பாக்கி மற்றும் கைக்குண்டுகள் உள்ளிட்ட ஆயுதங்களை வீசி விட்டு தப்பியோடிய நபர் தொடர்பில் பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

கடந்த 2 ஆம் திகதி புளியங்குளம், புதூர் பகுதியில் சந்தேகத்திற்கிடமான நடமாட்டம் காணப்படுவதாக புளியங்குளம் பொலிஸாருக்கு இரகசியத் தகவல் கிடைத்துள்ளது. இதனையடுத்து அப்பகுதிக்கு சிவில் உடையில் நான்கு பொலிஸார் மோட்டார் சைக்கிளில் சென்றுள்ளனர். இதன் போது அவ்வீதியில் சென்ற இனந்தெரியாத நபர் ஒருவர் தனது கையில் வைத்திருந்த மர்மப் பொதியை தூக்கி எறிந்துவிட்டு அங்கிருந்து தப்பியோடிச் சென்றுள்ளார். தாம் அவரைத் துரத்திச் சென்றபோதும் அவர் தலைமறைவாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்திருந்தனர். மறுநாள் காலையில் இருந்து மதியம் வரை இராணுவம், பொலிஸார் இணைந்து அப்பகுதியில் சுற்றிவளைப்பு மேற்கொண்டு தேடுதல் நடத்திய போதும் எவரும் கைது செய்யப்படவில்லை.

இந்நிலையில் குறித்த பொதியை பொலிஸார் பார்வையிட்டபோது அதனுள் கைத்துப்பாக்கி அதற்குரிய ரவைகள், கைக்குண்டுகள் நான்கு, ஸ்மாட்கைத்தொலைபேசிகள் 2, அதற்குரிய மின்கலத்துடனான மின் வழங்கி என்பன கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இதனை அடிப்படையாகக் கொண்டு விசாரணைகளை முன்னெடுத்து வரும் பொலிஸார் குறித்த தொலைபேசி முன்னாள் போராளி ஒருவரினுடையது எனவும், அவர் வவுனியாவில் வசித்து வருவதாகவும் தெரிவித்து தீவிர விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (2-250)

# மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள்



(குருமன்காடு)

வவுனியா கோதண்ட நொச்சிகுளத்தில் வசிக்கும் 60 மாணவர்களுக்கு சர்வதேச இந்து இளைஞர் பேரவையால் கற்றல் உபகரணங்கள் அண் மையில் வழங்கி வைக்கப்பட்டன. கோதண்ட நொச்சிக்குளத்தில் கல்விகற்கும் தரம் ஒன்று தொடக்கம் தரம் 11 வரையிலான மாணவர்களுக்கு இக்கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன

டென்மார்க்கில் வசிக்கும் வ.கௌசல்யாவின் பிறந்த தினத்தை முன்னிட்டு அவரது குடும்பத்தாரின் அனுசரணையுடன் இக்கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன. (2-250)

பாரதம்

# அமெரிக்காவில் கோர விபத்து 5 குழந்தைகள் உட்பட 7 பேர் பலி

## —8 பேர் படுகாயம்—



(புளோரிடா)

அமெரிக்காவின் புளோரிடாவில் இரண்டு லொறிகள் வான் மீது மோதி ஏற்பட்ட விபத்தில் 5 குழந்தைகள் உட்பட 7 பேர் பலியானார்கள்.

நேற்றைய தினம் அமெரிக்காவின் புளோரிடா மாநிலம் லூசியானாவில் உள்ள கிறிஸ்தவ தேவாலயத்தில் இருந்து 'டிஸ்னி வேர்ல்டு' பகுதிக்கு குழந்தைகளை ஒரு வானில் சுற்றுலா அழைத்துச் சென்றனர்.

அந்த வான் கென்ஸ்வில்லே என்ற இடத்தில் சென்றபோது அதிவேகமாக வந்த இரண்டு லொறிகள் பயங்கரமாக மோதிக் கொண்டன. மோதிய வேகத்தில் அவை குழந்தைகள் சென்ற வானில் மோதின. இதனால் நொறுங்கிய வான் வீதியில் கவிழ்ந்தது. அதன் மீது மேலும் 2 வாகனங்கள் மோதின. இதனால் வான் தீப்பிடித்து எரிந்தது.

அதில் வானில் இருந்த 5 குழந்தைகள் தீயில் கருகி பலியாகினர். அவர்கள் 9 முதல் 14 வயதினர் ஆவர். மேலும் 8 பேர் படுகாயம் அடைந்தனர். அவர்கள் மீட்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். இதற்கிடையே வான் மீது மோதிய லொறிகளின் சாரதி 2 பேரும் பலியாகினர். (7)

# கர்ப்பிணிக்கு எச்.ஐ.வி.இரத்தம் ஏற்றியதைக் கண்டித்து ஆர்ப்பாட்டம்



(சென்னை)

சாத்தூரை சேர்ந்த கர்ப்பிணிப் பெண்ணுக்கு எச்.ஐ.வி. ரத்தம் ஏற்றியதை கண்டித்து தி.மு.க. மருத்துவ அணி சார்பில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

சிவகாசி அரசு மருத்துவமனையில் ஏழைக் கர்ப்பிணிப் பெண்ணுக்கு எச்.ஐ.வி. இரத்தம் செலுத்தப்பட்டதை கண்டித்து சென்னை ஆட்சியாளர் அலுவலகம் அருகில் தி.மு.க. மருத்துவ அணி சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடந்தது.

ஆர்ப்பாட்டத்துக்கு மருத்துவ அணி மாநில தலைவர் டாக்டர் பூங்கோதை ஆலடி அருணா தலைமை தாங்கினார். மாவட்ட செயலாளர் பி.கே.சேகர்பாபு முன்னிலை வகித்தார். மருத்துவ அணி செயலாளர் டாக்டர் கனிமொழி, தாயகம் கவி உட்பட பலர் கலந்து கொண்டனர்.

ஆர்ப்பாட்டத்தில் தமிழக அரசை கண்டித்து கோஷங்கள் எழுப்பப்பட்டன.

பெண்ணுக்கு எச்.ஐ.வி. ரத்தம் ஏற்றப்பட்டதற்கு பொறுப்பு ஏற்று சுகாதாரத் துறை அமைச்சர், சுகாதாரத் துறை செயலாளர் ராதாகிருஷ்ணன் ஆகியோர் ராஜினாமா செய்ய வலியுறுத்தி கண்டன கோசங்கள் எழுப்பப்பட்டன. (7)

# பிரேசில் வன்முறையைத் தடுக்க களத்தில் இறங்கிய 300 துருப்புகள்



(பிரேஸிலியா)

பிரேசிஸின் வடக்கு நகரான ஃபோர்டலிசாவில் இடம்பெற்று வரும் வன்முறையை தடுக்க, சுமார் 300 துருப்புகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

நகரின் வர்த்தக நிலையங்கள், வங்கிகள் மற்றும் பேருந்துகள் இலக்குவைக்கப்பட்டு தாக்குதல் நடத்தப்படும் நிலையில், சியெர்ரா மாநிலத்தில் இராணுவத்தினர் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

ஊழல் மோசடியை இல்லாதொழிப்பதாக ஆட்சிக்கு வந்துள்ள புதிய அரசாங்கத்திற்கு எதிராக, இரண்டு குழுவினர் இணைந்து இவ்வாறு மோசமான வன்முறையில் ஈடுபட்டு வருவதாக அந நாட்டு செய்திகள் தெரிவிக்கின்றன.

இவ்வாரம் முழுவதும் இடம்பெற்றுவரும் வன்முறையில் பலர் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளனர். இந்நிலையில், மேலதிக துருப்புக்களை பணியில் அமர்த்துமாறு நீதியமைச்சு வலியுறுத்தியுள்ளது.

அத்தோடு, சிறைச்சாலைகளுக்குள் தொலைபேசி இணைப்புகளுக்கான சமிக்ஞைகளை சிறைச்சாலை நிர்வாகம் இடைநிறுத்தியுள்ளது.

பிரேஸிலில் ஊழல் மோசடிகள் அதிகரித்து வருவதோடு, வன்முறைகளும் தலைவிரித்தாடுகின்றன. கடந்த காலங்களில் சிறைச்சாலைகளுக்குள்ளும் பல மோதல்சம்பங்கள் இடம்பெற்றன.

இவற்றைமுடிவுக்குகொண்டு வருவதாக புதிதாக ஆட்சிப் பொறுப்பை ஏற்றுள்ள ஜயிர் பொல்ஸொனாரோ வாக்குறுதி வழங்கியுள்ளார்.

அவர் ஆட்சிப்பொறுப்பை ஏற்றுள்ள சில தினங்களில் இவ்வாறு வன்முறை சம்பவங்கள் அதிகரித்துள்ள நிலையில், அவற்றை கட்டுப்படுத்த உரிய நடவடிக்கை எடுக்குமாறு நீதியமைச்சுக்கு ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார். அதன் பிரகாரம், மேலதிக துருப்புக்கள்களத்தில் உள்ளன. கடந்த ஒருவார காலத்தில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்கள் தொடர்பாக இதுவரை 50 பேர் கைது செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (7)

# ஸ்ரோபரியை தொடர்ந்து திராட்சைகளிலும் ஊசிகள்



(சிட்னி)

அவுஸ்திரலிய பேரங்காடியில் கொள்வனவு செய்யப்பட்ட திராட்சைப் பழங்களில் ஊசிகள்கண்டுபிடிக்கப்பட்டமை தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

கர்ப்பிணித் தாயான Shams Alsubaiy என பவர், கடையில் வாங்கி வந்த திராட்சையை வீட்டில் வைத்துச் சாப்பிட்டபோது அவருடைய கையில் முள் போன்று ஏதோ குத்தியுள்ளது.

இதனைத் தொடர்ந்து அவருடைய கணவருடன் திராட்சைகளை வெட்டிப் பார்த்தபோது அதில் இரண்டு ஊசிகள் கண்டுபிடிக்கப்பட்டன.

இந்தநிலையில் அடுத்த சில மாதங்களுக்குப் பழங்கள் சாப்பிடுவதைத் தவிர்க்கப்போவதாக பாதிக்கப்பட்ட கர்ப்பிணித் தாய் தெரிவித்துள்ளார். இதேவேளை, கடந்த செப்டெம்பர் மாதம் சுமார் 200 ஸ்ரோபரி பழங்களில் ஊசிகள் கண்டுபிடிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (7)

# பிலிப்பைன்ஸில் இ

# உயிரிழப்பு 130



(மணிலா)

பிலிப்பைன்ஸில் ஏற்பட்ட நிலச்சரிவு வெள்ளப் பெருக்கில் சிக்கி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 130 ஆக அதிகரித்துள்ளது.

அந்நாட்டு பேரிடர் மேலாண்மை துறை அதிகாரிகள் நேற்று ஞாயிற்றுக் கிழமை இந்த தகவலை வெளியிட்டுள்ளனர்.

பிலிப்பைன்ஸின் மத்திய பகுதியில் அமைந்துள்ள பிகோல் மற்றும் கிழக்கு விசயாஸ் பிராந்தியங்களில் கடந்த டிசெம்பர் மாதம் 29 ஆம் திகதி முதல் கனமழை பெய்து வருகின்றது. இதில் ,அங்குள்ள 300 இற்கும் மேற்பட்ட பகுதிகள் பலத்த சேதமடைந்துள்ளன.

அத்துடன், ஒரு இலட்சத்து 52 ஆயிரத்திற்கும் அதிகமானவர்கள் வெள்ளப்பெருக்கினால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அந்நாட்டு பேரிடர்

# ஹெலிகொப்டர்

# விமானி உட்பட 5



(லாகோஸ்)

நைஜீரியாவின் வடகிழக்கு பகுதியில் வானில் பறந்து கொண்டிருந்த ஹெலிகொப்டர் திடீரென தரையில் விழுந்து நொறுங்கிய விபத்தில் விமானி உட்பட 5 பேர் பலியாகினர். நைஜீரியாவின் வடகிழக்கு பகுதியில் உள்ள போர்னோ மாகாணத்தில் டமாஸ்க் என்கிற நகரில் போகோஹறாம் பயங்கரவாதி களுக்கு எதிரான நடவடிக்கையில் இராணு

# தாய்ல

# மூன்ற

## மேலும் 34



(பாங்கொங்)

பபுக் புயல் தாக்குதலால் தாய்லாந்து நாட்டில் 3 பேர் பலியாகினர். மேலும், 34 ஆயிரம் பேர் பாதுகாப்பாக வெளியேற்றப்பட்டு உள்ளனர்.

தாய்லாந்து வளைகுடாவில் புயல் உருவாகி உள்ளது. இதற்கு 'பபுக்' என பெயரிடப்பட்டுள்ளது. இந்த புயலானது அந்தமான் கடல் நோக்கி 10 கி.மீ. வேகத்தில் நகர்ந்து சென்றது. பல்வேறு இடங்களில் மின் கம்பங்கள் மற்றும் மரங்கள் சாய்ந்து விழுந்துள்ளன.

இந்நிலையில், பபுக் புயல் தாக்குதலால் தாய்லாந்து நாட்டின் பத்தானி மாநிலத்தில் மீன் பிடிக்க சென்ற மீனவர் ஒருவர் உயிரிழந்தார். மற்றொரு மீனவரை தேடி வருகின்றனர்.

இதேபோல், தம்மாரட்

# வெளிநாடு

## இயற்கை பேரழிவு ஆக அதிகரிப்பு!



மேலாண்மை துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கனமழையால் நீர் நிலைகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு, ஊர்களுக்குள் தண்ணீர் புகுந்து வெள்ளம் கரை புரண்டோடியதால் ஆயிரக்கணக்கான வீடுகள் வெள்ளத்தில் மூழ்கின.

மழை மற்றும் வெள்ளத்தை தொடர்ந்து அதிகளவான இடங்களில் மண்சரிவு ஏற்பட்டது. இதில் ஏராளமான வீடுகள் மண்ணோடு மண்ணாக புதைந்தன. அதிகளவான இடங்களில் மின் சாரம் துண்டிக்கப்பட்டதால் பல்வேறு நகரங்கள் இருளில் மூழ்கின. தகவல் சேவை தொடர்பு முடங்கியது.

இந்தநிலையில் குறித்த பகுதிகளில் தொடர்ச்சியாக மீட்புப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக அந்நாட்டு பேரிடர் மேலாண்மை துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.(7)

## ரோஹிஞ்யாக்களை மியன்மாருக்கு திருப்பியனுப்பியமை தொடர்பில் இந்தியாவிடம் விளக்கம் கோரும் ஐ.நா.



(நியூயோர்க்)

இந்தியாவில் இருந்து ரோஹிஞ்யா அகதிகளை மியன்மாருக்கு திருப்பி அனுப்பியது தொடர்பாக ஐ.நா. அகதிகள் முகமை விளக்கம் கேட்டுள்ளது.

மியன்மாரில் இருந்தும் பங்களாதேஷிலிருந்தும் ரோஹிஞ்யா முஸ்லிம்கள் ஏராளமானோர் இந்தியாவிற்கு அகதிகளாக வந்து தங்கியிருக்கின்றனர். இந்தியாவில் உள்ள ஐ.நா. அகதிகள் முகமையின் தரவுகளின்படி, இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் 18 ஆயிரம் ரோஹிஞ்யா முஸ்லிம்கள் இருப்பதாக தெரிய வந்துள்ளது.

இவர்கள் அனைவரும் ஐ.நா. அகதிகள் முகமையில் பதிவு செய்துள்ளனர். கைது நடவடிக்கைகள் மற்றும் நாடு கடத்தல்களில் இருந்து தங்களை தற்காத்து கொள்வதற்காக இவர்களுக்கு அடையாள அட்டைகள் மற்றும் ஆவணங்களும் வழங்கப்பட்டுள்ளதாக ஐ.நா. அகதிகள் முகமை தெரிவித்துள்ளது.

இந்த அகதிகள் அவர்களின் நாட்டிற்கு திருப்பி அனுப்பப்படுவார்கள் என இந்திய அரசு அறிவித்து அதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. சட்டவிரோதமாக நுழைந்ததாக தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்த ரோஹிஞ்யா முஸ்லிம்கள் 7 பேர் கடந்த ஆண்டு இறுதியில் திருப்பி அனுப்பப்பட்டனர். தற்போது மியன்மாரின் ரக்கினே மாநிலத்தைச் சேர்ந்த ஒரு குடும்பத்தினர் நேற்று முன்தினம் மியன்மாருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். இதற்கு ஐ.நா. கவலை தெரிவித்துள்ளது.

இதுபற்றி ஐ.நா. அகதிகள் முகமையின் துணை செய்தித் தொடர்பாளர் பர்ஹான் ஹக் கூறுகையில், "அடைக்கலம் கேட்டுள்ள ரோஹிஞ்யா முஸ்லிம்களில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர்களை மியன்மாருக்கு நாடு கடத்தியதற்கு ஐ.நா. அகதிகளுக்கான உயர் ஆணையர் அலுவலகம் தனது வருத்தத்தை தெரிவித்துள்ளது. கடந்த மூன்று மாதங்களில் இரண்டாவது முறையாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது" என்றார்.

சட்டவிரோதமாக இந்தியாவிற்குள் நுழைந்ததற்காக கைது செய்யப்பட்டு 2013ஆம் ஆண்டில் இருந்து சிறைவாசம் அனுபவித்து வந்தவர்கள் இப்போது நாடு கடத்தப்பட்டிருப்பதாக ஐ.நா. அகதிகள் முகமை கூறியுள்ளது.

"தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள ரோஹிஞ்யா அகதிகளை சந்தித்து, அவர்களின் சூழ்நிலைகளை அறிந்து கொள்ளவும், தாய் நாட்டிற்கு திரும்புவது தொடர்பான அவர்களின் விருப்பத்தை கேட்கவும் அனுமதிக்கும்படி தொடர்ந்து கோரிக்கை வைக்கப்பட்டு வருகிறது. ஆனால், இந்திய அதிகாரிகளிடம் இருந்து பதில் வரவில்லை. அகதிகளை சந்திக்க அனுமதிக்க வேண்டும்.

மேலும், எந்த சூழ்நிலைகளில் அவர்கள் திருப்பி அனுப்பப்பட்டனர் என்பது குறித்து இந்திய அரசு தெளிவுபடுத்த வேண்டும்" என ஐ.நா. அகதிகள் முகமை வலியுறுத்தி உள்ளது. (7)

## ...ர் விபத்து ...5பேர் பலி

ஹெலிகொப்டரில் விமானி உட்பட 5 பேர் இருந்தனர்.

அந்த ஹெலிகொப்டர் வானில் பறந்து கொண்டிருந்த போது திடீரென தரையில் விழுந்து நொறுங்கியது. இதில் ஹெலிகொப்டரில் இருந்த 5 பேரும் சம்பவ இடத்திலேயே பரிதா பமாக உயிரிழந்தனர். (7)



...வவீரர்கள் ஈடுபட்டிருந்தனர்.

இராணுவவீரர்களுக்கு உதவுவதற்காக நைஜீரிய விமானப்படைக்கு சொந்தமான 'எம்.ஐ-35எம்' ரக ஹெலிகொப்டர் அங்கு அனுப்பி வைக்கப்பட்டது.

## ஏமனில் அமெரிக்க படையினர் தாக்குதல் அல்கொய்தாவின் முக்கிய தளபதி பலி

(சனா)

ஏமன் நாட்டில் அமெரிக்க படையினர் ஆளில்லா விமானம் மூலம் நடத்தப்பட்ட தாக்குதலில் அல் கொய்தா பயங்கரவாத இயக்கத்தின் சிரேஷ்ட தளபதி கொல்லப்பட்டார்.

ஏமன் நாட்டின் அல் பய்டா மாகாணத்தில் சில பகுதிகளை அல் கொய்தா பயங்கரவாத இயக்கம் கைப்பற்றி உள்ளது. இந்த இயக்கத்தின் உள்ளூர் தளபதியாக இருந்து வருபவர் படாவி.

இவர் கடந்த 2000ஆம் ஆண்டு ஒக்டோபரில் எரிபொருள் நிரப்பி கொண்டிருந்த யூ.எஸ்.எஸ். கோல் என்ற அமெரிக்க போர் கப்பலின் மீது நடந்த ஆயுத தாக்குதலில் தொடர்புடையவர். இந்த தாக்குதலில் 17 அமெரிக்க கப்பற்படை சிப்பந்திகள் கொல்லப்பட்டனர்.

இந்த நிலையில், பயங்கரவாத இயக்க ஆதிக்கம் நிறைந்த அல் பய்டா பகுதி வழியே தனியாக வாகனம் ஒன்றில் படாவி சென்று கொண்டு இருந்துள்ளார். அவர் மீது திடீரென அமெரிக்க படைகள் வான்வழி தாக்குதலில் ஈடுபட்டன. ஆளில்லா விமானம் மூலம் நடத்தப்பட்ட இந்த தாக்குதலில் படாவி கொல்லப்பட்டதாக தகவல் வெளியாகி உள்ளது. (7)

## ...ாந்தில் பபுக் புயல் ...ு பேர் உயிரிழப்பு

### ...4 ஆயிரம் பேர் வெளியேற்றம்



மாநிலத்தில் 2 பேர் இறந்தனர். இதன்மூலம் பபுக் புயல் தாக்குதலால் தாய்லாந்து நாட்டில் 3 பேர் பலியாகி உள்ளனர்.

இந்த புயலால் தாய்லாந்தின் சம்ப்ஹார்ன், சோங்க்லா, பட்டாலங், பத்தானி, பெட்சாபுரி, பிரசாப் கிரிகரன், சூரட் தானி மற்றும் நாகோன் சி தம்மாரட் உள்ளிட்ட 8 மாநிலங்கள் கடுமையாக பாதிப்பு அடைந்துள்ளன.

புயல் தாக்கத்தை தொடர்ந்து மீட்புப் பணிகளில் பேரிடர் மீட்புக் குழுவினர் ஈடுபட்டு வருகின்றனர். தம்மாரட் பகுதியில் உள்ள பல்வேறு கிராமங்களில் தாழ்வான பகுதிகளில் வசிக்கும் சுமார் 34 ஆயிரம் மக்களை மீட்டு பாதுகாப்பான இடங்களில் தங்க வைத்துள்ளோம் என அதிகாரிகள் தெரிவித்தனர். (7)

## இராணுவத்தினரின் தாக்குதலில் 15 தலிபான்கள் உயிரிழப்பு



(காபூல்)

ஆப்கானிஸ்தானில் இராணுவத்தின் சிறப்பு அதிரடிப்படையினர் நிகழ்த்திய தாக்குதலில் தலிபான் பயங்கரவாதிகள் 15 பேர் கொல்லப்பட்டனர்.

ஆப்கானிஸ்தானில் தலிபான் பயங்கரவாதிகள் இராணுவத்துக்கு எதிராக அடிக்கடி தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

இதனால் அவர்களை ஒடுக்க இராணுவம் தீவிர நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

இந்த நிலையில் ஆப்கானிஸ்தானின் பர்யாப் மாகாணத்தில் உள்ள அல்மார் மாவட்டத்தில் சில பகுதிகளில் தலிபான் பயங்கரவாதிகள் பதுங்கியிருப்பதாக இராணுவத்துக்கு தகவல் கிடைத்தது.

இதையடுத்து அந்த பகுதிகளுக்கு விரைந்து சென்ற இராணுவத்தின் சிறப்பு அதிரடிப்படையினர் பயங்கரவாதிகள் மீது திடீர் தாக்குதல் நடத்தினர்.

இதில் சம்பவ இடத்திலேயே தலிபான் பயங்கரவாதிகள் 15 பேர் கொல்லப்பட்டனர். பயங்கர வாதிகளின் ஏராளமான பதுங்கு குழிகளும் அழிக்கப்பட்டன.

பதில் தாக்குதலின்போது பயங்கரவாதிகள் பயன்படுத்திய நவீன ஆயுதங்களையும் சிறப்பு அதிரடிப்படையினர் கைப்பற்றினர். (7)

# எம் நாட்டில் சகவாழ்வைக் கட்டியெழுப்ப வெளிநாட்டுத் தலையீடு அவசியமற்றது

## பேராயர் மல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை தெரிவிப்பு



(கொழும்பு)

நாட்டில் சகவாழ்வை கட்டியெழுப்புவதற்கு வெளிநாட்டு தலையீடு அவசியமற்றது என கொழும்பு பேராயர். மல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்துள்ளார்.

பானகலஉபதிஸ்ஸதேரின் 69 ஆவது பிறந்த தின நிகழ்வில் கலந்துகொண்டு கருத்துத். தெரிவிக்கையில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இந்த நாட்டில் பல மதத்தவர்களும் நிம்மதியாகவும் ஒற்றுமையாகவும் வாழ்ந்து வருகின்றனர். சிறு சிறு சம்பவங்களை சர்வதேசத்தில் பெரிதாகக் காட்டுவதற்கு எடுக்கும் முயற்சி தவிர்க்கப்படல் வேண்டும்.

இந்த நாட்டை ஒரு மரத்துக்கு ஒப்பிட்டால், மரத்தின் தண்டுப் பகுதி தான் பௌத்த மதம். ஏனைய கிளைகள் தான் ஏனைய சமயத்தினர். நாம் அழகிய மரமொன்றைப் போன்று இந்நாட்டில் ஒற்றுமையாக வாழ்ந்து வருகின்றோம். எமது விடயங்களை நாமே பேசித் தீர்த்துக் கொள்கின்றோம்.

சிலர் நாட்டிலுள்ளவர்களை மிலேச்சத்தனமானவர்களாக சர்வதேசத்தில் காட்டுவதற்கு முயற்சி எடுக்கின்றனர். அவர்கள் சர்வதேச மத்தியஸ்தத்தைக் கோருகின்றனர் எனவும் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை மேலும் தெரிவித்துள்ளார். (7)

# சந்திரிகாவின் பதவி குறித்து விரைவில் தீர்மானம் எடுக்கப்படும்

## மேல்மாகாண முதலமைச்சர் இசுறு கூறுகிறார்



ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் ஆலோசகர் பதவி குறித்து தீர்மானம் ஒன்றுக்கு வர வேண்டியுள்ளதாக மேல் மாகாண சபையின் முதலமைச்சர் இசுறு தேவப்பிரிய தெரிவித்தார்.

முழுமையாக சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் தலைமையில், ராஜித சேனாரட்னவின் ஆசீர்வாதத்துடன், ஐக்கிய தேசியக் கட்சியின் வழிகாட்டலில் ஒரு குழு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் செயற்படுகின்றது.

இவர்கள் தொடர்பில் தகவல்கள் கிடைக்கப் பெற்றுள்ளன.

இதுபோன்ற நிலைமையில், கட்சியின் ஆலோசகராக சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவை தொடர்ந்தும் வைத்திருப்பது பொருத்தமானது என்று நாம் நினைக்கவில்லை.

இவர் தொடர்பில் விரைவில் தீர்மானம் ஒன்றுக்கு வரவேண்டியுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் காலை செய்திச் சேவை ஒன்றிற்கு கருத்துத் தெரிவிக்கையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (7)

# பெருந்தோட்ட தொழிலாளர்களின் சம்பள உயர்வு தொடர்பில் நாளை முக்கிய கலந்துரையாடல்

(கொழும்பு)

பெருந்தோட்ட தொழிலாளர்களின் சம்பள உயர்வு தொடர்பில் முதலாளிமார் சம்மேளனத்திற்கும், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் கட்சிக்கும் இடையில் முக்கிய கலந்துரையாடல் ஒன்று இடம்பெறவுள்ளது.

இந்த கலந்துரையாடல் நாளை செவ்வாய்க்கிழமை இடம்பெறவுள்ளது. குறித்த கலந்துரையாடலின் போது தொழிலாளர்களின் சம்பள உயர்வு தொடர்பில் ஆராயப்படவுள்ளதாக கட்சி தகவல்கள் தெரிவித்துள்ளன.

பெருந்தோட்ட தொழிலாளர்களின் சம்பளத்தை 1000 ரூபாயாக அதிகரிக்குமாறு வலியுறுத்தி கடந்த காலங்களில் நாட்டின் பல இடங்களில் பல்வேறுபட்ட போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

பல தோட்டங்களிலுள்ள தோட்ட தொழிலாளர்கள் சம்பள உயர்வை வலியுறுத்தி பணிப்புறக்கணிப்பை மேற்கொண்டிருந்ததுடன், கொழும்பு-புறக்கோட்டை ரயில் நிலையத்தில் மலையக இளைஞர்கள் சிலர் உண்ணாவிரதப் போராட்டத்தையும் முன்னெடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (7)

# மட்டக்களப்பில் விபத்து ஒருவர் உயிரிழப்பு



மட்டக்களப்பு காத்தான்குடி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கிரான்குளத்தில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன், ஒருவர் படுகாயமடைந்துள்ளதாக காத்தான்குடி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த சம்பவம் நேற்று முன்தினம் சனிக்கிழமை மாலை இடம்பெற்றுள்ளது.

மோட்டார் சைக்கிள் வேகக் கட்டுப்பாட்டை இழந்து வீதியில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த வாகனங்களுடன் மோதியதிலேயே இந்த விபத்து சம்பவித்துள்ளது.

ஆரையம்பதியைச் சேர்ந்த இளம் குடும்பஸ்தரான இராசதுரை ஜீவநாதன் என்பவரே இந்த விபத்தில் உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (7)

# பாடசாலைகளில் அதிபர் வெற்றிடங்கள் இம்மாத இறுதிக்குள் நிரப்பப்படும்

## கல்வி அமைச்சு அறிவிப்பு

(கொழும்பு)

வடக்கு, கிழக்கு மாகாணங்கள் உட்பட நாடு பூராகவும் மாகாண மற்றும் தேசிய பாடசாலைகளில் நிலவும் அதிபர்களுக்கான வெற்றிடங்கள் இம் மாத இறுதிக்குள் நிரப்பப்படும் என கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

இதனடிப்படையில் கிழக்கு மாகாணத்தில் நிலவும் அதிபர்களுக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்கான நேர்முகப் பரீட்சைகள் தற்போது நடத்தப்பட்டு வருவதாகவும் தெரிவித்துள்ளது.

நாட்டிலுள்ள 302 தேசிய பாடசாலைகளில் பதில் அதிபர்களே கடமையாற்றுவதாக அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

இந் நிலையில் குறித்த பாடசாலைகளுக்கான அதிபர்களை நியமிப்பதற்கு, நேர்முகப் பரீட்சைகள் நிறைவடைந்துள்ளதாகவும் அதற்காக 800 க்கும் அதிகமான விண்ணப்பங்கள் கிடைத்ததாகவும் அவர் தெரிவித்தார்.

நேர்முகப் பரீட்சைகளில் தெரிவு செய்யப்பட்டவர்களின் பெயர்ப் பட்டியலை எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன்னர் அரசசேவை ஆணைக்குழுவிற்கு அனுப்பவுள்ளதாகவும் கல்வி அமைச்சின் செயலாளர் மேலும் தெரிவித்துள்ளார். (7)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## இதயமும் மூளையும்

1816ஆம் ஆண்டில் ஒருநாள் ஒரு பிரெஞ்சு டாக்டர் ரேனதியோ பிலிலேநக் என்று பெயர். வைத்திய சாலையில் இருந்து வீட்டுக்குப் போய்க் கொண்டிருந்தார்.

அப்படி போய்க்கொண்டிருந்த போது தெருவில் சில சின்னப் பிள்ளைகள் விளையாடிக்கொண்டிருந்தார்கள் எப்படித் தெரியுமா?

ஒரு மரத்துண்டு கிடந்தது. அதில் ஒரு முனையில் ஒரு பையன்தட்டிக்கொண்டிருந்தான். இன்னொரு முனையில் அந்த மரத்துண்டில் காதை வைத்து இன்னொரு பையன் கேட்டுக்கொண்டிருந்தான். மறுபடியும் இவன் இந்தப் பக்கத்திலிருந்து தட்ட வேண்டியது. இதை அவன் அந்தப் பக்கத்தில் இருந்து கேட்க வேண்டியது? இதைப் பார்த்தார் அந்த டாக்டர். வீட்டுக்குப் போய்க்கொண்டிருந்தவர் உடனே திரும்பி மறுபடியும் வைத்தியசாலைக்குப் போனார்.

ஒரு பெரிய காகிதத் துண்டை எடுத்து குழாய் மாதிரி சுருட்டினார். அதனுடைய ஒரு முனையை ஒரு நோயாளி நெஞ்சில் வைத்தார். இன்னொரு முனையில் தன்னுடைய காதை வைத்துக்கேட்டார். அந்த ஆளுடைய இதயத்துடிப்பு இவருக்குக் கேட்டது.

அன்றைக்கு அப்படி ஆரம்பித்தது தான் இன்றைக்கு "ஸ்ரெதஸ்கோப்" ஆக மாறி வந்திருக்கிறது. மனிதன் கருவில் உருவானதில் இருந்து கடைசி மூச்சு உள்ள வரைக்கும் அவன் உடம்பில் ஓய்வில்லா மல் வேலை செய்வது இரண்டு.

ஒன்று மூளை! இன்னொன்று இருதயம்! அப்பேற்பட்ட இருதயத்தையே கொஞ்ச நேரத்துக்கு வேலை செய்யாமல் நிறுத்தி வைத்து விட்டு ஒரு சத்திரசிகிச்சையை செய்திருக்கிறார்கள் சில டாக்டர்கள்!

செத்து பிழைக்கிறது என்று சொல்கிறார்களே! அது நிஜமாகவே போய்விட்டது இப்போது! ஒருத்தரை சாக வைத்து பின்னர் பிழைக்க வைத்திருக்கிறார்கள் ஒரு சௌகரியத்துக்காகத்தான்!

ஒரு பெண் நோயாளிக்கு இரத்த சேதம் இல்லாமல் சத்திரசிகிச்சை செய்ய வேண்டியிருந்தது! அரிசோனா என்னும் இடத்தில் தான் இது நடந்தது! டாக்டர்கள் என்ன செய்தார்கள் என்றால்...

அந்த நோயாளியை ஒரு 40 நிமிட நேரத்துக்கு செத்த நிலையில் வைத்திருந்தார்கள். பின்னர் பிழைக்க வைத்துவிட்டார்கள்! இந்த இடைவெளி நேரத்தில் "சத்திரசிகிச்சை" வெற்றிகரமாகச் செய்து முடித்து விட்டார்கள்!

முதலில் அந்தப் பெண்ணை "கோமா" என்னும் நிலைமைக்குக் கொண்டு வந்து அவள் இதய ஓட்டத்தை நிறுத்தி வைத்து விட்டார்கள்!

44 பாகை சென்டிகிரேட் வெப்ப நிலையில் அவள் உடம்பை குளிர வைத்துவிட்டார்கள்! அவர் உடம்பில் இருந்து இரத்தத்தை வடித்து எடுத்து விட்டு சத்திர சிகிச்சை செய்துவிட்டு பின்னர் பழைய படி உயிர்ப்பித்து விட்டார்கள்!

அந்த பெண்ணின் பெயர் "எதில் சென்ட்லாரன்ஸ்"! வயது–61. அந்த அம்மா ஒரு 10 வார காலத்துக்கு வைத்தியசாலையில் இருந்தார்களாம். பின்னர் வீட்டுக்கு வந்துவிட்டார்களாம். பழையபடி வேலையெல்லாம் பார்க்க ஆரம்பித்து விட்டார்களாம்.

இது ஒரு பெரிய சாதனை! ஏன் என்றால் இருதயத்தை நிறுத்தி வைப்பது அவ்வளவு சாமான்ய விடயமில்லை. சில பேர் "என்னுடைய இதயத்தையே அவளிடம் ஒப்படைத்துவிட்டேன்" என்று சொல்கிறார்களே எதற்காக?

"அவளுக்காக உயிரையே கொடுக்க சித்தமாயிருக்கிறேன் என்று" அர்த்தம்! அப்படிப்பட்டவர்களைக் கூப்பிடும்போது கூட "என் இதயமே" என்று அர்த்தம்!

என் "கட்டை விரலே" என்று கூப்பிடுவதில்லை. இன்னொரு விடயம்! இதயத்தைக் கொடுக்கிறேன் என்று சொல்கிறவர்கள் கூட மூளையைக் கொடுக்கிறேன் என்று சொல்வதில்லை!

மூளையைக் கொடுக்கிறேன் என்று சொன்னால் "புத்திகெட்டு போய் விட்டேன்" என்று அர்த்தம். ஆனால், என் நண்பர் ஒருத்தர், "நான் என்னுடைய இதயம், மூளை இரண்டுமே என் மனைவியிடம் கொடுத்துவிட்டேன்" என்றார்!

எப்படி என்றால்! "கல்யாணத்துக்கு முன்னாடி இருதயத்தைக் கொடுத்தேன்! கல்யாணத்துக்குப் பின் மூளையைக் கொடுத்துவிட்டேன்" என்றார்!

# புத்தாண்டுப் பலன்கள் -2019

## வியாழன் உங்கள் இராசியிலே, வெற்றி உங்கள் கையினிலே!



நம்பியவர்களுக்கு கைகொடுத்து உதவும் நல்ல உள்ளம் படைத்த விருச்சிக இராசி வாசகர்களே!

வந்துவிட்டது புத்தாண்டு. வருடத் தொடக்கத்திலேயே குரு பகவான் உங்கள் இராசியில் சஞ்சரிக்கின்றார். உங்கள் இராசிக்குத் தன பஞ்சமாதிபதியாக விளங்குபவர் குரு. அவர் உங்கள் இராசியில் அடியெடுத்து வைக்கும் பொழுது தனவரவு தாராளமாக வந்து சேரும். தக்கவிதத்தில் வாழ்க்கைப் பாதை அமையும். திட்டமிட்டகாரியங்கள் திட்டமிட்டபடியே நடைபெறும். ஏழரைச் சனியில் குடும்பச் சனியின் ஆதிக்கம் இப்பொழுது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. உங்கள் இராசிக்கு சகாய ஸ்தானம் மற்றும் சுக ஸ்தானத்திற்கு அதிபதியானவர் சனி பகவான். அவர் வாக்கு ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் பொழுது நீங்கள் சொல்லும் சொற்கள் வெல்லும் சொற்களாக மாறும். தைரியமும், தன்னம்பிக்கையும் தானாக வந்து சேரும்.

எதையும் ஒளிவு மறைவின்றிப் பேசுவீர்கள். உங்களுடைய யோசனைகள் வாழ்வில் வெற்றி பெற வைகும் என்பதால் உங்களோடு நட்பு வைத்துக்கொள்ள பலரும் பிரியப்படுவர். இயற்கையிலேயே இறை அருள் பெற்ற நீங்கள் குறிக்கோளோடு வாழ்க்கை நடத்த வேண்டும் என்று எடுத்துரைப்பீர்கள். உங்கள் இராசி நாதன் செவ்வாயாக இருப்பதால் தைரியத்தோடும், தன்னம்பிக்கையோடும் செயற்பட்டுச் சாதனையாளராகத் திகழும் வாய்ப்பு உருவாகும்.

புத்தாண்டின் தொடக்க நிலை

புத்தாண்டின் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் செவ்வாய் பஞ்சம ஸ்தானத்தில் குரு வீட்டில் சஞ்சரிக்கின்றார். அவரை உங்கள் இராசியில் இருக்கும் குரு பகவான் 5 ஆம் பார்வையாகப் பார்க்கின்றார். எனவே குருமங்கள யோகம் உண்டாகின்றது. அதே நேரத்தில் தன ஸ்தானத்தில் சூரியனோடு புதன் இணைந்து புத-ஆதித்ய யோகமும் ஏற்படுகின்றது. இந்த யோகங்களோடு புத்தாண்டு பிறப்பதால் முத்தான பலன்கள் உங்களுக்கு வந்து சேரும். முன்னேற்றம் கூடும். மொத்தத்தில் சந்தோஷங்களை நாளும் சந்திக்கும் ஆண்டாகவே இந்த ஆண்டு அமையப்போகின்றது.

வருடத் தொடக்கத்தில் 3 இல் கேது இருப்பதால் முன்னேற்றம் ஏற்பட உடன்பிறப்புகளும் உங்களுக்கு உறுதுணையாக இருப்பர். மனக்குழப்பங்கள் அகலும். நல்லவர்களின் நட்பால் நன்மைகளைக் காண்பீர்கள்.

9 ஆம் இடத்தில் இராகு சஞ்சரிப்பதால் பொன், பொருள் குவியும் வாய்ப்பு உண்டு. அதுமட்டுமல்லாமல் வெளிநாட்டுப் பயணங்களாலும் உங்களுக்கு அதிக நன்மைகள் கிடைக்கும். புதிய வாகனம் வாங்கும் யோகம் உருவாகும். தங்கம், வெள்ளி போன்றவற்றில் முதலீடு செய்யும் யோகம் உண்டு. தேக ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும்.

2 இல் சூரியன் சஞ்சரிப்பதால் உங்களுக்கு கொஞ்சம் அதிகமாகவே கோபம் வரலாம். நினைத்ததை நினைத்த உடன் செய்ய வேண்டும், நிகழ் காலத் தேவைகள் உடனுக்குடன் பூர்த்தியாக வேண்டும் என்ற எண்ணம் உங்களுக்கு அதிகரிக்கும். அதே நேரத்தில் சுக்கிரன் 12 ஆம் இடத்தில் இருக்கிறார். எனவே சுப விரயங்கள் அதிகரிக்கும். வீட்டிற்குத் தேவையான விலை உயர்ந்த பொருட்கள், மின்சாதனப் பொருட்கள் போன்றவற்றை வாங்குவதில் கவனம் செலுத்தலாம். பெண் பிள்ளைகளின் திருமணத்தை முன்னிட்டு சீர்வரிசைப் பொருட்கள் வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். வீடு கட்டும் யோகம், வீட்டை விரிவு செய்து கட்டுவதன் மூலமும், பராமரிப்புச் செய்வதன் மூலமும் வீண் விரயங்களிலிருந்து விடுபட இயலும் என்பதை அறிந்து கொள்ளுங்கள்.

ராகு-கேது பெயர்ச்சிக் காலம்

ஆண்டின் தொடக்கத்தில் கடகத்தில் சஞ்சரிக்கும் ராகு பெப்ரவரி 13 ஆம் திகதி மிதுனத்திற்கு செல்கின்றார். மகரத்தில் சஞ்சரிக்கும் கேது தனுசுக்கு வருகின்றார். இந்த மாற்றம் ஏற்றங்களையும், எதிர்பாராத நல்ல திருப்பங்களையும் கொடுக்கப் போகின்றது. சுய பலமற்ற கிரகம் என்றும், பின்னோக்கிச் செல்லும் கிரகம் என்றும், சொல்லப்படும் ராகு-கேதுக்கள் 2, 8 ஆகிய இடங்களில் வரும்பொழுது சுப விரயங்கள் அதிகரிக்கும். இடமாற்றம், வீடு மாற்றம் ஒருசிலருக்கு தொழில் மாற்றம், உத்தியோக மாற்றம் போன்றவைகள் ஏற்படலாம்.

அதே நேரத்தில் அதிசாரமாக குரு தனுசுக்கு வரும்பொழுதும் குருப்பெயர்ச்சிக்குப் பிறகும் குருவின் பார்வை ராகுவின் மீது பதியப்போகின்றது. எனவே குருபார்க்கக் கோடி நன்மை என்பதால் ராகுவால் உங்களுக்கு நன்மைகளே அதிகம் ஏற்படும். மறைந்த ராகுவால் நிறைந்த தனலாபம் கிடைக்கும். நீடித்த நோயிலிருந்து நிவாரணம் பெறுவீர்கள். தொழிலில் புதிய பங்குதாரர்களை சேர்த்துக் கொண்டு உற்சாகத்தோடு செயற்படும் சூழ்நிலை உருவாகும்.

2ஆம் இடத்தில் கேது சஞ்சரிப்பதால் வாக்கு ஸ்தானம் புனிதமடைகின்றது. எனவே சாமர்த்தியமாகப் பேசி எதையும் சமாளிக்கும் ஆற்றல் உங்களுக்கு உண்டு. அதுமட்டுமல்லாமல் அதிசாரத்தில் கேதுவோடு குருவும் இணைகின்றார். ஒக்டோபர் 28ஆம் திகதி குருப்பெயர்ச்சிக்குப் பிறகு தனுசு இராசியில் குரு சஞ்சரிக்கப் போவதால் கேது ஆதிக்கத்தால் உங்களுக்கு நற்பலன்களே வந்து சேரும்.

பொதுவாழ்வில் இருப்பவர்களுக்கு இக்காலம் ஒரு பொற்காலமாகும். உறவினர்கள் ஒத்துழைப்பு கிடைக்க ஒருசில சமயங்களில் நீங்கள் விட்டுக் கொடுக்க வேண்டிய சூழ்நிலை உருவாகும். பதவிகள் தானே தேடி வந்தாலும் கூட பொறுப்புகளை யோசித்து ஏற்றுக்கொள்வது நல்லது. மேலிடத்து நிர்ப்பந்தத்தின் காரணமாகத் திடீர், திடீரென பொறுப்புகள் மாற்றப்படலாம். குறிப்பாக 2இல் கேது சஞ்சரிக்கும் பொழுது துணிந்து எடுக்கும் முடிவுகளால் மட்டுமே தொல்லைகளை அகற்றிக்கொள்ள முடியும்.

குருப்பெயர்ச்சிக் காலம்

ஒக்டோபர் 28 ஆம் திகதி குருப்பெயர்ச்சி நிகழ இருக்கின்றது. இதுவரை உங்கள் இராசியிலேயே சஞ்சரித்து வந்த குரு பகவான் இப்பொழுது தன ஸ்தானத்தில் சஞ்சரித்து தனவரவை அதிகரிக்கச் செய்யப் போகின்றார். குரு தன் வீட்டில் காலடி எடுத்து வைக்கும் பொழுது நினைத்த காரியத்தை நினைத்த நேரத்தில் செய்து முடிப்பீர்கள். கல்யாண வாய்ப்புகள் கைகூடும். உற்சாகத்தோடு பணி புரிந்து உயர்நிலையை அடைவீர்கள்.




சமூகத்தில் மதிப்பும், மரியாதையும் உயரும் பிரபல்ய யோகம் வந்து சேரும்.

கலைஞர்களுக்கு விருதுகளும், வெற்றி வாய்ப்புகளும் வந்து சேரும். பண மழையிலும், பாசமழையிலும் நனையும் வாய்ப்பு கிட்டும். குருவின் பார்வை 6, 8, 10 ஆகிய இடங்களில் பதிவதால் எவ்வளவு கடன் சுமை இருந்தாலும் அவை அனைத்தும் நிவர்த்தியாகும். பணிபுரியும் இடத்தில் எதிர்பார்த்த சலுகைகள் அனைத்தும் கிடைக்கும். இழப்புகளை ஈடுசெய்ய புதிய வாய்ப்புகள் கைகூடிவரும். பூர்வீக சொத்துக்களால் இலாபம் உண்டு. பிறருக்கு பொறுப்பு சொல்லி வாங்கிக் கொடுத்த தொகையும் வந்து சேரும்.

குருவின் அதிசாரமும், வக்கிரமும்

ஆண்டின் தொடக்கத்தில் விருச்சிகத்தில் சஞ்சரிக்கும் குரு அதிசாரமாக மார்ச் 13ஆம் திகதி தனுசு இராசிக்கு செல்கின்றார். இடையில் வக்ரமாகவும் சஞ்சரிக்கின்றார். எனவே இக்காலத்தில் பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டியது அவசியமாகும். எதைச் செய்தாலும் குடும்ப பெரியவர்களை கலந்து ஆலோசித்துச் செய்வதன் மூலமே நன்மைகள் கிடைக்கும். குடும்பச்சுமை கூடினாலும் அதைச் சமாளிக்கும் ஆற்றல் உங்களுக்கு உண்டு. நண்பர்களையும், உறவினர்களையும் அனுசரித்துச் சென்றால் ஆதாயம் கூடுதலாகக் கிடைக்கும். குரு பீடங்களுக்கு யோகபலம் பெற்ற நாளில் சென்று வழிபட்டால் எதிர்பார்ப்புகள் நிறைவேறும்.

கவனமுடன் செயற்பட வேண்டிய காலம்

7.5.2019 முதல் 24.6.2019 வரை சனி, செவ்வாய் பார்வை காலமாகும். இக்காலத்தில் மிதுனச் செவ்வாயைத் தனுசு சனி பார்க்கின்றது. இக்காலத்தில் மிகமிக கவனமுடன் செயற்பட வேண்டிய காலமாகும். இருப்பினும் குரு வீட்டில் சனி இருந்து பார்ப்பதால் பெரியளவில் பாதிப்புகள் ஏற்படாது. எதிலும் ஏமாற்றங்களைச் சந்திக்காமல் இருக்க எச்சரிக்கையோடு செயல்படுவது நல்லது. புதிய நபர்களிடம் பொறுப்புகளை ஒப்படைக்க வேண்டாம். உடல்நலத்தில் கவனம் தேவை.

5.6.2019 முதல் 29.6.2019 வரை ரிஷப சுக்கிரனை விருச்சிக குரு பார்க்கின்றார். இக்காலத்தில் எதிர்பார்த்த காரியங்கள் எளிதில் முடிவடையும். பஞ்சமாதிபதி குருவின் பார்வை படுவதால் பூர்வீக சொத்துக்களால் இலாபம் உண்டு. தங்கம், வெள்ளி வாங்குவதில் தனிக்கவம் செலுத்துவீர்கள். மணவிழா, மணிவிழா, பூப்புனித நீராட்டு விழா, காதணி விழா, கிரகப்பிரவேசம் போன்ற விழாக்களும் நடைபெறும் வாய்ப்பு இந்த நேரத்தில் உண்டு. பொதுவாக மங்கல ஓசை மனையில் கேட்கும்.

வளர்ச்சி தரும் வழிபாடு

உங்கள் வயது எண்ணிக்கையின்அடிப்படையில் பஞ்சாச்சரம் எழுதுங்கள். பௌர்ணமி அன்று கிரிவல வழிபாடும், முருகப்பெருமான் வழிபாடும், சனிக்கிழமை அனுமன் வழிபாடும் செய்வதன் மூலம் சந்தோஷத்தை நாளும் சந்திக்க இயலும்.

சனியின் வக்கிர காலம்

8.5.2019 முதல் 3.9.2019 வரை தனுசு இராசியில் பூராட நட்சத்திரக் காலில் சனி வக்கிரம் பெறுகின்றார். இந்த வக்கிர காலத்தில் கொஞ்சம் யோசித்துச் செயற்படுவது நல்லது. உடன்பிறப்புகளை அனுசரித்துச் செல்வதன் மூலமும் குடும்ப உறுப்பினர்களின் ஆதங்கத்தை தீர்ப்பதன் மூலமும், மன அமைதி காண இயலும். ஆரோக்கியத்தில் கொஞ்சம் அக்கறை செலுத்துவது அவசியம். குச்சனூர், பெரிச்சிக் கோவில், திருநள்ளாறு, திருக்கொள்ளிக்காடு போன்ற ஸ்தலங்களுக்குச் சென்று வழிபட்டு வருவது நல்லது.

பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்

விருச்சிக இராசியில் பிறந்த பெண்களுக்கு இந்தப் புத்தாண்டு ஒரு பொன்னான ஆண்டாக அமையப் போகின்றது. மற்றவர்கள் பாராட்டும் அளவிற்கு வாழ்க்கைத் தரம் உயரும். எதிர்பார்ப்புகள் அனைத்தும் நிறைவேறும். மக்கள் செல்வங்களின் கல்யாண காரியங்கள் துரிதமாக நடைபெறும். கணவன்-மனைவிக்குள் பாசமும், நேசமும் அதிகரிக்கும். ஒருவரையொருவர் புரிந்து கொண்டு செயல்படுவர். உங்கள் பெயரிலேயே சொத்துக்கள் வாங்கும் யோகம் உண்டு. தொழில் நிலையங்களுக்குக் கூட உங்களை உரிமையாளராக்க குடும்பத்தினர் சம்மதிப்பர். தாய்வழி ஆதரவும், சகோதரவழி ஆதரவும் எதிர்பார்த்ததைக் காட்டிலும் கூடுதலாகக் கிடைக்கும். பணிபுரியும் பெண்களுக்கு ஊதிய உயர்வும், பதவி உயர்வும், வாகனம் வாங்கி மகிழும் யோகமும் உண்டு. நல்ல காரியங்கள் பலவும் நடைபெறும். இந்த வருடத்தில் ஆபரண சேர்க்கையும் அதிகரிக்கும். குலதெய்வ வழிபாடும், ஆதியந்தப் பிரபு வழிபாடும் குடும்ப முன்னேற்றத்திற்கு வித்திடும்.

ஜோதிடக் கலாமணி
- சிவல்புரி சிங்காரம் -

# இனங்களுக்கிடையில் வெறுப்பைத் தூண்டும் அரசமைப்பால் பிரச்சினையைத் தீர்க்க முடியாது

## மகிந்த ராஜபக்ஷ தெரிவிப்பு

(அம்பாறை)

, இனங்களுக்கிடையில் வெறுப்பைத் தூண்டும் வகையில் அரசமைப்பு ஒன்றை கொண்டு வருவதன் ஊடாக நாட்டில் நிலவும் பிரச்சினையைத் தீர்க்க முடியாதென எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அத்துடன் பலவந்தமாக புதிய அரசமைப்பைக்கொண்டு வருவதற்கும் வாய்ப்பில்லை யென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அம்பாறை பிரதேசத்தில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். (இ-7)



# 7 ஆயிரம் ரூபா இலஞ்சம் வாங்கிய பொலிஸாருக்கு விளக்கமறியல்

(ஏறாவூர்)

சாரதி அனுமதிப்பத்திரமின்றி மோட்டார் சைக்கிளை செலுத்தி சென்றவரிடம் இலஞ்சமாக 7 ஆயிரம் ரூபாவை பெற்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட இரு போக்குவரத்து பொலிஸாரை 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு மட்டக்களப்பு மாவட்ட நீதவான் நீதிமன்ற நீதிபதி உத்தரவிட்டார்.

மட்டக்களப்பு தலைமையக பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றி வரும் வீதி போக்குவரத்து பொலிஸ் கான்ஸ்டபிள்களான இரு பொலிஸார் சம்பவதினமான கடந்த வெள்ளிக்கிழமை மாலை 6 மணியளவில் கல்லடி பாலத்திற்கு அருகிலுள்ள வீதி போக்குவரத்து சோதனைச் சாவடியில் கடமையில் இருந்த போது மோட்டார் சைக்கிளில் சென்ற ஒருவரை நிறுத்தி சோதனையிட்டுள்ளனர்.

இதன் போது சாரதி அனுமதிப்பத்திரம் இல்லாது மோட்டார் சைக்கிளை செலுத்தி வந்துள்ளதை கண்டுபிடித்தனர்.

இதனை தொடர்ந்து வழக்கு பதியாது விடுவிக்க 7 ஆயிரம் ரூபாவை இலஞ்சமாக தருமாறு கேட்டதையடுத்து குறித்த நபர் பொலிஸ் புலனாய்வு பிரிவுக்கு கொடுத்த தகவலையடுத்து புலனாய்வு பிரிவு இலஞ்சமாக பணத்தைப் பெற்ற குற்றச்சாட்டில் இரு பொலிஸாரை கைது செய்தது.

இச் சம்பவத்தில் கைது செய்யப்பட்டவர்கள் நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்ட நிலையில் அவர்களை 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (இ-7)

# எங்களுக்கு பாடம் எடுக்காதீர்கள்

## அமெரிக்காவுக்கு ஈரான் எச்சரிக்கை



(டெஹ்ரான்)

ஏவுகணை சோதனைகள் மற்றும் உற்பத்தி தொடர்பாக அமெரிக்கா எங்களுக்கு பாடம் எடுக்க வேண்டாம் என்று ஈரான் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து ஈரான் வெளியுறவுத் துறை அமைச்சர் முகமத் ஜாவத் சாரிப் கூறும்போது, "அமெரிக்கா கூறுவது போல் ஈரானின் ஏவுகணை சோதனைகள் மற்றும் விண்வெளி தொடரான சோதனைகள் ஆபத்தானவை அல்ல. அமெரிக்கா விதிமீறல் நடவடிக்கையை மீறும் இடத்தில் இருந்து கொண்டு, எந்த ஒரு நாட்டுக்கும் பாடம் எடுக்க வேண்டாம்" என்று தெரிவித்தார்.

முன்னதாக அமெரிக்க வெளியுறவுத் துறை அமைச்சர் மைக் போம்பியோ கடந்த வியாழக்கிழமை ஈரானின் ஏவுகணை சோதனைகள் குறித்து கூறும்போது, "ஈரான் ஏவுகணை உற்பத்தியை நிறுத்த வேண்டும். பொருளாதாரம் மற்றும் அரசியல் ரீதியான தனிமைப்படுத்து தலை தவிர்கக ஈரான் ஏவுகணை உற்பத்தி மற்றும் சோதனைகளை நிறுத்த வேண்டும் என்று எச்சரிக்கை விடுத்திருந்தார்.

இந்த நிலையில் இதற்கு தற்போது ஈரான் வெளியுறவு அமைச்சர் முகமத் ஜாவத் பதில் அளித்துள்ளார்.

ஈரானுடன் அமெரிக்கா செய்து கொண்ட அணு ஆயுத ஒப்பந்தத்திலிருந்து விலகுவதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் கடந்த வருடம் தெரிவித்தார்.

ஆனால், ட்ரம்ப்பின் மிரட்டலைச் சிறிதும் பொருட்படுத்தாத அந்நாட்டு ஜனாதிபதி ஹசன் ரவுஹானி ஈரான் ஆக்கபூர்வமான செயல்களுக்கு அணு ஆயுத சோதனையைப் பயன்படுத்தும் என்றார்.

இதனைத் தொடர்ந்து ஈரான் மீது அமெரிக்கா தொடர்ந்து பொருளாதாரத் தடைகளை விதித்ததுடன் அந்நாட்டுடன் எந்த நாடும் கச்சா எண்ணெய் ஏற்றுமதி செய்யக்கூடாது என்றும் தெரிவித்தது குறிப்பிடத்தக்கது. (7)

## மார்ச் மாதம் முதல் கிழக்கில் 'சுவசெரிய'




(ஏறாவூர்)

எதிர்வரும் மார்ச் மாதம் முதல் "சுவசெரிய" இலவச அம்புலன்ஸ் சேவை கிழக்கு மாகாணத்தில் முன்னெடுக்கப்படவுள்ளது.

இந்த சேவை தற்போது எந்தவித கட்டண அறவீடுகளுமின்றி பொதுமக்களுக்கு விரிவான சேவையை வழங்கும் நோக்கில் எட்டு மாகாணங்களில் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற நிலையிலேயே மார்ச் மாதம் முதல் கிழக்கில் இச்சேவை ஆரம்பிக்கவுள்ளது.

இந்திய அரசாங்கத்தின் நிதியுதவியின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் இந்த அம்புலன்ஸ் சேவையின் மூலம் இதுவரையில் பெரும் எண்ணிக்கையிலான நோயாளர்களின் உயிர்கள் காப்பாற்றப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# கடலில் மிதந்து வந்த வலைகள் மீட்கப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைப்பு



(பனிக்கன்குளம்)

நாயாறு மீனவர்களால் கடலில் இருந்து கண்டெடுக்கப்பட்ட ஒருதொகுதி வலைகள் பொலிஸாரிடம் ஒப்படைப் படைக்கப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு மாவட்டத்தில் நாயாறு பகுதியில் கடற்றொழிலுக்கு சென்ற மீனவர்கள் கடலில் மிதந்துவந்த ஒருதொகுதி வலைகளை மீட்டு கரைக்கு கொண்டு வந்து சேர்த்துள்ளனர்.

இந்நிலையில் குறித்த வலைகளை முல்லைத்தீவு பொலிஸாரிடம் மீனவர்கள் கையளித்துள்ளனர்.

இவ் வலைகள் அண்மையில் வலைஞர்மடம் பகுதியில் கரையொதுங்கிய இந்திய படகில் இருந்த வலைகளை ஒத்த வலையாக காணப்படுவதாகவும் அந்த படகில் இருந்த வலையாக இருக்கலாம் எனவும் பொலிஸார் தெரிவித்தனர். (2-281)

# தேவன்பிட்டி மீனவர்களின் பிரச்சினை மனித உரிமை ஆணைக்குழு விசாரணை

(மன்னார்)

2006 ஆம் ஆண்டு வடக்கு- கிழக்கு காணி நிர்வாக திணைக்களத்தினால் அனுமதி வழங்கப்பட்டு 13 வருடங்கள் கடந்தும் தங்களுக்கு வழங்கப்பட வேண்டிய காணி வழங்கப்படவில்லை என்பதன் அடிப்படையில் மன்னார் தேவன்பிட்டி பிரதேசத்தை சேர்ந்த 53 பேர் தங்களுக்கு இன்னமும் விவசாய காணிகளை வழங்கவில்லை என கோரி பல்வேறு தடவைகள் மாந்தை பிரதேச செயலகத்தில் கோரிக்கைகளை முன்வைத்த போதிலும் உரிய பதில் வழங்கப்படாத பட்சத்தில் தேவன்பிட்டி பிரதேசத்தை சேர்ந்த விவசாய அமைப்பின் பிரதிநிதிகள் மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் உதவியுடன் மன்னார் மாவட்ட மனித உரிமைஆணைக்குழுவின் உப காரியாலயத்தில் 17.09.2018 அன்று முறைப்பாடு ஒன்றை பதிவு செய்திருந்தனர்.

இதன் பிரகாரம் 2006 ஆம் ஆண்டு 53 நபர்களுக்கு பாலி ஆறு மற்றும் வெள்ளாங்குளம் அருகே அமைந்துள்ள காணிகளை வழங்கக்கோரி வடகிழக்கு காணி நிர்வாக திணைக்களத்தினால் பெயர் விபரங்கள் அடங்கிய அனுமதி வழங்கப்பட்ட போதிலும் 13 வருடங்கள் கடந்தும் இதுவரை மாந்தை பிரதேச செயலகத்தினால் தங்களுக்கு எந்தவித காணிகளும் வழங்கப்படவில்லை எனவும் இதுவரை எழுத்து பூர்வமான பதில்களும் எதுவும் வழங்கப்படவில்லை.

தற்போது தாங்கள் வாழ்வாதாரத்திற்கு மிகவும் சிரமப்படுவதாகவும் எனவே தங்களுக்கு வழங்க தீர்மானித்திருந்த காணிகளை விரைவாக பெற்றுத்தர உதவி கோரியும் மன்னார் மனித உரிமை ஆணைக்குழுவின் உப காரியாலயத்தில் அளித்த புகார் மனுவின் விசாரணை கடந்த 5 ஆம் திகதி மன்னார்மனித உரிமை ஆணைக்குழுவின் உப காரியாலயத்தில் இடம்பெற்றது.

குறித்த தேவன்பிட்டி மக்களின் முறைப்பாட்டின் படி மாகாண காணி ஆணையாளர் திணைக்களம், சிரேஷ்ட நில அளவை அத்தியட்சகர், பணிப்பாளர், காணி உரித்து நிர்வாக திணைக்களம், மன்னார் மாவட்ட செயலகம் மாந்தை மேற்கு பிரதேச செயலகம், ஆகியவற்றின் பிரதிநிதிகள் அழைக்கப்பட்டிருந்தனர்.

இவ் விசாரணையின் பின்னர் குறித்த தேவன்பிட்டி மக்களின் பிரச்சினையை ஒரு மாத காலப் பகுதியில் முடிவுறுத்தி தரும்படி கோரப்பட்ட போதிலும் மாந்தை பிரதேச செயலக பிரிவில் அநேகமான பகுதிகள் நில அளவை செய்யப்படவில்லை என்பதனால் இவ்விடயம் தொடர்பாக நடவடிக்கை எடுப்பதற்காக மூன்று மாத கால பகுதியை பணிப்பாளர் காணி உரித்து நிர்ணய திணைக்களம் சார்பாக கோரியுள்ளனர்.

இருப்பினும் தற்போது குறித்த காணி உரித்து தொடர்பாக வெள்ளாங்குளத்தை சார்ந்த 14 நபர்கள் உரிமை கோரியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-285)

# வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட எமக்கு நிவாரணம் எதுவும் பெற்றுத்தரப்படவில்லை

## முள்ளியவளை வடக்கு கிராம மக்கள் முறைப்பாடு



(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் அண்மையில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தம் காரணமாக முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட முள்ளியவளை வடக்கு கிராமம் அதிகமாக பாதிக்கப்பட்டுள்ளதாகவும் வெள்ள நிவாரணம் எதுவுமின்றி தாம் வஞ்சிக்கப்பட்டுள்ளதாகவும் பாராளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறிஸ்கந்தராஜாவிடம் மக்கள் முறையிட்டுள்ளனர்.

முள்ளியவளை வடக்கு கிராமமக்கள் பாராளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறிஸ்கந்தராஜாவை நேற்று முன்தினம் தமது கிராமத்துக்கு அழைத்து இது தொடர்பில் முறையிட்டுள்ளனர்.

இதன்போது தமது பகுதிக்குள்ளும் வெள்ளம்புகுந்து பல்வேறு பாதிப்புக்களை சந்தித்துள்ளதாகவும் கிராம அலுவலர் தமது வீடுகளைப் பார்வையிட்டு வெள்ள பாதிப்புக்களுக்கு நிவாரணங்களை பெற்று தரவில்லை எனவும் இதனால் தாம் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் இதற்கான தீர்வினை பெற்றுத்தருமாறும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்நிலையில் பாராளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறிஸ்கந்தராஜா மாவட்ட அரசாங்க அதிபரிடம் விடயத்தை தெரியப்படுத்தி குறித்த மக்களுக்கு உடனடியாக தீர்வு பெற்றுத்தருமாறு பணித்துள்ளதோடு உரிய தீர்வை பெற்றுத்தருவேன் என மக்களுக்கு உறுதியளித்தார். இந்த சந்திப்பில் கரைதுறைப்பற்று பிரதேச சபை உறுப்பினர்களும் கலந்து கொண்டிருந்தனர். (2-281)

# மூவிராசாக்கள் திருவிழா

(மன்னார்)

மூவரசர் பட்டினம் எனும் புராதன நாமத்தோடு விளங்கும் பேசாலை புனித வெற்றி நாயகி ஆலயம்,மூவிரா சாக்கள் காணிக்கை, மன்னார் மறைமாவட்ட ஆயர்இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகையின் குருத்துவ வாழ்வில் 45 ஆவது நிறைவாண்டு மற்றும் இந்தியா டிவைன்ஸ் தியான இல்லத்தில் போதகர் அருட்தந்தை றப்பயலின் குருத்துவ வாழ்வின் 15 ஆவது ஆண்டு விழா முப்பெரும் விழாவாக புனித வெற்றி நாயகி ஆலயத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.


பேசாலை புனித வெற்றி நாயகி ஆலய பங்குத்தந்தை தேவராஜா கொடுத்தோர் அடிகளாரின் ஏற்பாட்டில் மன்னார் மறைமாவட்ட ஆயரின் தலைமையில் கூட்டுத்திருப்பலியாக ஒப்புக்கொடுக்கப்பட்டது.(2-285)

# இலங்கையில் தமிழர்

## ஒரு முழுமையான வரலாறு (கி.மு.300- கி.பி.2000)

கலாநிதி மு.குணசிங்கம்

138




## பிரித்தானியரின் ஆரம்ப ஆட்சிக்காலமும் தமிழரும் (கி.பி. 1796-கி.பி. 1850)

ஆயினும் இவர்கள் வெஸ்லியன் அமெரிக்கன் மிஷனரிமாரின் சேவையின் பின்னரே தமது பணியை ஆரம்பித்தனர். இருந்தபோதிலும் பிரித்தானியரின் ஆரம்ப ஆட்சிக் காலத்தில் யாழ்ப்பாணத் தீபகற்ப மக்கள் மத்தியில் கிறிஸ்தவத்தைப் பரப்புவதில் திருச்சபை மிஷனரி சங்கத்தினர் அதிக கரிசனையுடன் ஈடுபடவே செய்தனர்.

தமிழரைக் கிறிஸ்தவத்திற்கு மாற்றுவது திருச்சபையின் இடைவிடா கடமையாக இருந்தது. இச்செயல்கள் சம்பந்தமான திருச்சபை மிஷனரி சங்கத்தின் பின்வரும் அறிக்கை போதிய சான்றுகளைத் தருகின்றது.

நல்லூரில் வெவ்வேறு பாடசாலைப் பிள்ளைகள் உள்ளடங்கிய 250 பேரைக் கொண்ட சபையையும் காலையில் ஏறத்தாழ 150 பேரும் மாலையில் 50 அல்லது 60 பேரும் நல்லூரிலும் சுண்டுக்குளியிலும் மாறி மாறித் தமிழ் ஆராதனைகள் நடத்தவும் சுண்டுக்குளியில் ஒவ்வொரு ஞாயிறு மாலையும் ஆராதனை நடத்தவும் இரு இடங்களுக்கும் தேவையானவற்றை வழங்கவும் ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டன.

எல்லா இடங்களிலும் ஆராதிக்க வருபவர்களின் தொகை அதிகரித்துள்ளது. நித்திய வாழ்வைப் பற்றிய வார்த்தைகளில் போதுமான ஆர்வம் இருப்பதாய் தோன்றுகின்றது. ஆங்கில ஆராதனை, சுண்டுக்குளியில் மேற்கொள்ளப்படும் பணியில் மிக ஆர்வத்தை அளிக்கும் ஒரு பாகமாக உள்ளது. இவ் ஆராதனையில் கணிசமான தொகை சுதேசிகளும் பறங்கியரும் இங்கு வாழும் ஆங்கிலேயர் பலரும் பங்குபற்றினர்.

சபையிலுள்ள இரு பகுதியினரையும் உள்ளடக்கவும் ஆங்கிலம் பேசாத மக்களை எவ்வளவு அதிக எண்ணிக்கையில் மதம் மாற்ற முடியுமோ அவ்வளவுக்கு மாற்றுவதற்கும் ஆராதனைகள் தமிழ், ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளிலும் நடத்தப்பட்டன. ஆங்கிலத்தில் ஆராதனை நடத்தப்பட்டமை, யாழ்ப்பாணத்தில் பல ஆங்கிலேயர் வசித்தனர் என்பதையே இவ் அறிக்கை மேலும் காட்டுகின்றது.

உள்ளூர் வாசிகள் ஆங்கிலேயப் பாரம்பரியம் மதம் ஏன் பொதுவாக ஆங்கிலேயக் கலாசாரத்தையே பின்பற்றுவதற்கு இவை தூண்டுதலாக இருந்திருக்கக்கூடும். காலை, மாலை ஆராதனைகள் மூலம் கிறிஸ்தவம் யாவரையும் சென்றடைவதற்கு உதவியாக இருந்திருக்கும்.

மேலும் இந்த வழிவகைகள் உள்ளூர் மக்கள் மேலும் பலரை மிஷனரி ஆராதனைகளில் ஈடுபடுத்தி கிறிஸ்தவத்தைப் பின்பற்றச் செய்தன என்பதில் சந்தேகமேயில்லை. இன்னுமொரு அறிக்கை பின்வருமாறு கூறுகின்றது.

தமிழில் போதிப்பது அசட்டை செய்யப்படவில்லை. எல்லா வகுப்புக்களும் தெய்வீக அறிவைப் பெறுவதற்காகத் தினமும் வேதபாடங்களைப் படிப்பதனால் ஏற்படும் பழக்கங்கள், சிந்தனைகள், செயல்கள் என்பவற்றினால் ஆண்டவருடைய சத்தியத்தைப் பெற்றுப் பேணுவதற்கு வழியுள்ளது.

இவ்வருடத்தில் ஐந்து பெண்கள் ஞானஸ்தானம் மூலம் சபையில் சேர்க்கப்பட்டுள்ளனர். இவர்களில் நான்கு பேர் பன்னிரெண்டிலிருந்து பதினான்கு வயதினராவர்.

உள்ளூர்வாசிகள் போதனைகளைத் தெளிவாக விளங்கிக் கொள்வதற்காகக் கிறிஸ்தவக் கோட்பாடு தமிழில் போதிக்கப்பட்டதென இவ் அறிக்கை கூறுகின்றது.

மிஷனரிப் பாடசாலைகளில் வேதாகமப் பாடமும் மிக முக்கியமானதொன்றாக இருந்தது. மொத்தத்தில் தமிழ் இளைஞர்களைக் கிறிஸ்தவத்திற்கு மாற்றுவதே இந்தக் கல்வி முறையின் நோக்கமாக இருந்தது.

எம்மைச் சுற்றியுள்ள மக்களுக்கான எமது உழைப்பில் இளைஞர்களுக்குப் பயிற்சி அளிப்பது முக்கியமான இடத்தைப் பெறுகின்றது.

நல்லூரில் மக்கள் தொகை கிட்டத்தட்ட 6 ஆயிரம் ஆகும். கடந்த பல வருடங்களில் பாடசாலைகளில் கற்பிக்கப்பட்ட பிள்ளைகளின் எண்ணிக்கை ஆயிரத்திற்கும் அதிகமாகும்.

எனவே நல்லூர் மக்களில் ஆறிலொரு பங்கினர் கிறிஸ்தவ கற்பித்தலையும் பண்பாடுகளையும் பெற்றுள்ளனர். அநேகமான பிள்ளைகள் வேதாகமத்தை நன்கு அறிந்துள்ளனர். தேவனின் வார்த்தைகளின் உண்மைகள், கோட்பாடுகள் பற்றி எந்த வினாவுக்கும் அவர்கள் அநேகமாக விடையிறுப்பர்.

கிறிஸ்தவ சத்தியம் அந்தளவுக்கு அவர்களின் பலருடைய மனங்களில் பதிந்துள்ளது. இது ஏனையவர்களிலும் கணிசமான தாக்கத்தை விளைவித்தது என்பதில் சந்தேகமில்லை. 12 அல்லது 15 வருடங்களின் முன் இசைய மறுத்த புறமதத்தினரைவிட இப்போதுள்ள விக்கிரக ஆராதனையாளர் எவ்வளவோ வேறுபட்டவராய் உள்ளனர்.

உள்ளூர் மக்களையும் அவர்களது உளப்பாங்கு, சூழல் என்பவற்றையும் ஆராய்ந்து கிறிஸ்தவத்தைத் தழுவுவதற்கு அவர்களைத் தூண்டும் வகையில் தமது போதனைகளையும் நடைமுறையையும் வகுப்பதற்கு திருச்சபை மிஷனரி சங்கத்தினர் முயன்றனர் என்பதை இக்குறிப்புகள் காட்டுகின்றன.

இருந்தபோதிலும் மக்கள் தெளிவாகக் கிறிஸ்தவத்தைப் புரிந்துகொள்வார்கள் என்ற மிஷனரிமாரின் நம்பிக்கை அவசரப்பட்டு எடுக்கப்பட்ட முடிவு போலத் தோன்றுகின்றது. இதையிட்டு அடுத்து வரும் அத்தியாயத்தில் ஆராய்வோம்.

மிஷனரிமாரின் கிறிஸ்தவத்தைப் பரப்பும் முயற்சி நல்லூர், சுண்டுக்குளியுடன் நின்றுவிடவில்லை. யாழ்ப்பாணத்தைச் சுற்றியுள்ள இடங்களிலும் சிறைச்சாலைகள் உட்பட நாம் முன்னர் குறிப்பிட்டது போன்று மன்னார், முல்லைத்தீவிலும் இடம் பெற்றது.

தீபகற்பத்தைச் சுற்றியுள்ள வெளியூர்களிலும் வன்னியிலும் உள்ள மக்களுக்கு விசேடமான சந்தர்ப்பங்களில் ஆராதனைகள் நடத்துவதற்கு வெளியூர் நிலையங்கள் அமைக்கப்பட்டன. நாவற்குழி, கொழும்புத்துறை ஆகிய இடங்களில் இவை இருந்தன என்பதையும் அறிக்கை சொல்கின்றது.

(தொடரும்)

> **“ உள்ளூர் மக்களையும் அவர்களது உளப்பாங்கு, சூழல் என்பவற்றையும் ஆராய்ந்து கிறிஸ்தவத்தைத் தழுவுவதற்கு அவர்களைத் தூண்டும் வகையில் தமது போதனைகளையும் நடைமுறையையும் வகுப்பதற்கு திருச்சபை மிஷனரிசங்கத்தினர் முயன்றனர். இருந்த போதிலும் மக்கள் தெளிவாகக் கிறிஸ்தவத்தைப் புரிந்துகொள்வார்கள் என்ற மிஷனரிமாரின் நம்பிக்கை அவசரப்பட்டு எடுக்கப்பட்ட முடிவு போலத் தோன்றுகின்றது ”**

# குருபரகாவியம் நூல் அறிமுகம்

அண்மையில் வெளியீடு செய்யப்பட்டுள்ள ‘குருபரகாவியம்’என்ற நூல் மரபுவழிக் கவிதையால் ஆன செந்தமிழ்க் காவியமாகும். இந்நூலில் செந்தமிழில் இறைவனைப் பாடி அவனருளை பெற்ற பன்னிரண்டு அருளாளர்களின் வரலாறு கவிதை நடையில் பேசப்பட்டுள்ளது.

சைவ-வைணவ அடியார்களான தமிழ் இந்து சமயத்தில் புரட்சியையும் எழுச்சியையும் ஏற்படுத்திய பன்னிரண்டு அடியார்கள் இந்நூலில் பேசப்படுகின்றனர். திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகிய சைவ சமயகுரவர்கள் மற்றும் ஆண்டாள், திருமங்கையாழ்வார் ஆகிய இரு ஆழ்வார்கள், ஔவையார், மணவாள மாமுனிகள், அருணகிரிநாதர், அபிராமிப்பட்டர், குமரகுருபரர், யாழ்ப்பாணத்து சிவயோகர் சுவாமிகள் ஆகிய பன்னிருவர் வரலாறு நூலாசிரியரால் தேர்வு செய்யப்பட்டு கவிதை நடையில் எழுதப்பட்டுள்ளது.

வெறுமனே கதையாக இல்லாமல், இயல்பான காவியச்சுவையோடு காதல், வீரம், பக்தி, பிரிவு, பாசம் முதலிய உணர்ச்சிகள் பெருக்கமுறும் குருபரகாவியத்தில் இதற்கு அப்பால், வரலாற்றுச் சம்பவங்களையும், கலைத்து விடயங்களையும், ஆய்வுச் செய்திகளையும் கவிதைகளாகக் காண முடிகின்றது. இந்த ஒவ்வொரு அருளாளரின் வரலாறு பேசப்படும் போதும், புராண மரபில் வெறுமனே அற்புதத்தையும் கதையையும் பேசாமல், அக்காலச் சூழலையும் அதில், அந்த அருளாளரின் வருகையால் ஏற்பட்ட மறுமலர்ச்சியும் திறம்பட கவிநுட்பத்துடன் பேசப்படுவது வியக்கவைக்கின்றது.

இதற்கு ஏற்றவகையில் தேர்வு செய்யப்பட்டுள்ள பன்னிருவரும் வெவ்வேறு காலப்பகுதிகளில் தமிழ் வழங்கும் சோழ, சேர, பாண்டிய, தொண்டை, ஈழ எனவிரிந்த நாடுகளில் வாழ்ந்தவர்களாக நூலாசிரியரால் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இந்தப் பன்னிரண்டு அடியர் என்ற எண்ணக்கரு பன்னிரு ஆழ்வார்கள் அல்லது தொண்டர்பெருமைபேசும் பெரிய புராணம் பன்னிரண்டாம்திருமுறையாக கொள்ளப்படுவதிலிருந்து நூலாசிரியருக்கு ஏற்பட்டிருக்கும் என்பது நிச்சயமானது.

விருத்தம், அகவல், முதலிய பாவகைகள் மூலம் கடுமையான சொற்களை விடுத்து தெளிந்த நடையில் பயணிக்கும் இக்காவியத்தில் அருளாளர்களின் கதைகளுக்குள் பேசப்படும் உபகதைகளும் செய்திகளும் ஆச்சரியமூட்டுவன. முதலிலேயே குறித்த அடியார்களின் கதைகளை அறிந்தவர்களுக்கும் இச்செய்திகள் புதியனவாகவும், வித்தியாசமானதாகவும் தோன்றும்.

உதாரணமாக, முதலாவதாக திருஞானசம்பந்தர் கதை பேசும் போது ஆரம்பத்திலேயே அக்கால தமிழக அரசியல்,சமய, இலக்கியச் சூழல் மற்றும் சமண சமயம் குறித்த விபரம் அகவற்பாவில் பேசப்பட்ட பின்னரே குறித்த சூழலில் ஞானசம்பந்தர் தோன்றுவது பேசப்படுகின்றது. இவ்வாறே ஒவ்வொரு அடியார்களின் சிறப்பும் அவர்களால் ஏற்பட்ட சமய மறுமலர்ச்சி, இலக்கிய-கலை எழுச்சியும் இணைத்துப் பேசப்படுகின்றது. சுந்தரர் வரலாற்றில் பிற நாயன்மார்களின் பெருமையும் திருமங்கையாழ்வார் வரலாற்றில் பிற ஆழ்வார்களின் சிறப்பும், குறித்த கதாநாயகர் கதைக்கு சமாந்தரமாக பரக்கப் பேசப் படுகின்றது.




மாணிக்கவாசகர் காதையில், விஞ்ஞானச்செய்திகள், சிதம்பரச் சிறப்பு என்பவற்றுடன், மாணிக்கவாசகர் காலம் பற்றியும் ஆராயப்பட்டு அண்மைய திருவாசக அரண்மனை வரை குறிப்பிடப்படுகின்றமை கவனத்தை ஈர்க்கின்றது. இடையிடையே உவமைகளாகவும், உருவகமாகவும் இலங்கையின் போரியல் துன்பங்கள் கூட குறிப்பிடப்படுகின்றன. ஔவையார் காதை, அருணகிரிநாதர் காதை போன்றவற்றில் வழக்கமாகப் பேசப்படும் நம்பமுடியாத—புனைவுக்கதைகள் நிராகரிக்கப்படுவதையும் திருத்தமான வரலாற்றின் தேவை உறுதி பட உரைக்கப்படுவதையும் அவதானிக்கலாம்.

சைவசித்தாந்தம் தமிழகத்துள் குறுகிப்போன போது, அதனை காசி வரை கொண்டு சென்று இன்று வரை அங்கு நீடித்திருக்கும் காசிமடத்தை ஸ்தாபித்து சைவசித்தாந்தம் வாழும் நிலத்தின் எல்லையை விரிவுபடுத்தி, தமிழையும் சைவத்தையும் தென்னகத்தோடு குறுகவிடாமல் காசி வரை பரப்பியவர் குமரகுருபரர் என்பது குறிப்பிடத்தக்கது.

இவரது கதையில், இஸ்லாமியப் படையெடுப்புகள், சைவாதீனங்களின் எழுச்சி, சித்தாந்த எழுச்சி என்பனவும் பேசப்படுகின்றன். நிறைவாக, அமைந்த சிவயோகர் காதை இலங்கைச் சைவத்தின் வரலாற்றை கவிதை நடையில் தருகிறது. அதன்பின்னணியில் சிவயோக மாமுனிவரின் திருவரலாறு அழகாக எழுதப்பட்டுள்ளது.

இந்நூலின் ஆசிரியர் வயதினால் இன்னும் முப்பது அகவையை தொடாத இளைஞர். இன்றும் வெளியாகும் இந்து சாதனம் என்ற பழைமையான இதழின் ஆசிரியர். 2017இல் இவர் எழுதிய குமாரகாவியம் என்ற நூல் அந்த ஆண்டுக்கான வடக்கு மாகாணத்தின் மரபுக்கவிதைக்கான சிறந்த நூல் பரிசினை பெற்றது. இது தவிர இன்னும் பல நூல்களை எழுதி வெளியிட்டுள்ள இந்நூல் ஆசிரியரான நீர்வை. தி. மயூரகிரி ஒரு சிவாச்சார்யராகவும் திகழ்வது சிறப்புக்குரியது.

க. நிரஞ்சன்
ஆசிரியர்,
யாழ்ப்பாணம்
இந்துக் கல்லூரி

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1608

### நிவேதன்

நிச்சயம் உன் வாழ்வில் சந்தோசம் உள்ளது. அது எங்கே என்பது நீ தேடும் உறவுகளைப் பொறுத்துத்தான் அமைந்திருக்கும்



### ராகுலன்

பிடித்தவர்களிடம் நமக்கான இடம் எது என்பதை சில அவமானங்கள் புரிய வைக்கிறது



### கஜிந்

ஒரு சாமானிய மனிதனுக்கு மிகப்பெரிய வேதனை சம்பளம் வந்தவுடனேயே ஒன்றுமில்லாமல் காலியாவதுதான்




### நிரோஜன்

தடைகள் இருக்கும் சந்தேகப்படுவார்கள். தவறுகள் நிகழும், ஆனால் கடின உழைப்பு இருந்தால் வெற்றிக்கு எல்லை இல்லை



### கஜானனன்

இழுத்துப் பிடிச்சு கஷ்டப்படுவதைவிட விட்டுட்டுப் போறது எவ்வளவோ மேல்



### திவாகரன்

எதுவும் சரியில்லாத போதும் எல்லாம் சரியாகி விடும் என்று நம்புவதுதான் தன்னம்பிக்கை



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# மத்தள விமான நிலையத்தின் எதிர்காலம் தொடர்பில் இவ்வாரம் தீர்க்கமான முடிவு

## துறைசார் அமைச்சர் அர்ஜுன தெரிவிப்பு



(கொழும்பு)

மத்தள ராஜபக்ஷ விமான நிலையத்தின் எதிர்காலம் தொடர்பாக அரசாங்கம் இந்த வாரம் தீர்க்கமான முடிவு ஒன்றை எடுக்கும் எனத் தெரிய வருகிறது.

அதன் பிரகாரம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு இடையில் முக்கிய சந்திப்பு ஒன்று இடம்பெறும் என்று எதிர்பார்க்கப்படுவதாக, போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் அர்ஜுன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

விமான நிலையத்தை நிர்வகிக்க இந்தியாவுடன் ஒரு ஒப்பந்தத்தில் கையொப்பமிட முன்னர் எடுக்கப்பட்ட முடிவை அரசாங்கம் முன்னெடுத்துச் செல்லுமா என ஆங்கில ஊடகம் ஒன்று எழுப்பிய பிரத்தியேக கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதற்குப் பதிலளித்த அவர் "முன்னதாக, மத்தள விமான நிலையத்தை இந்தியாவுடன் இணைந்து முகாமைத்துவம் செய்வதற்கு அரசாங்கம் முடிவு செய்திருந்தது.

இது தொடர்பாக முன்வைக்கப்பட்ட திட்டம் குறித்து பரிசீலனை செய்து வருகின்றோம். ஜனாதிபதி மைத்திரி மற்றும் பிரதமருடன் இணைந்து. இது குறித்த ஒரு முடிவை எடுப்பார்கள்" என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

2013 மார்ச் மாதம் உத்தியோகபூர்வமாக திறக்கப்பட்ட குறித்த விமான நிலையம், பின்னர் ஏற்பட்ட நட்டத்தையடுத்து இந்தியாவுடன் இணைந்து அபிவிருத்தி செய்வது தொடர்பில் முடிவு செய்யப்பட்டது. இருந்தபோதும் அதன் பேச்சுவார்த்தைகள் பின்னர் இடைநிறுத்தப்பட்டன.

மேலும் மத்தள ராஜபக்ஷ விமான நிலையத்திற்கு இறுதியாக டுபாய் விமான நிறுவனம் வர்த்தக விமான பயணத்தை மேற்கொண்ட போதும் அது பின்னர் இடை நிறுத்தப்பட்டது. குறித்த விமான நிலையத்தின் மேம்பாட்டு பணிக்காக 210 மில்லியன் ரூபாய் மேலதிகமாக தேவை ஏற்பட்ட காரணத்தினாலேயே அங்கு விமான சேவைகள் நிறுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## 72 பேரின் இடமாற்றம் இரத்து

(கொழும்பு)

நாட்டிலுள்ள பொலிஸ் நிலையங்களில் கடமையாற்றும் பொலிஸ் பரிசோதகர்கள் 72 பேருக்கு உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் வழங்கப்பட்ட இடமாற்றம் மறு அறிவித்தல் வரும் வரை இடைநிறுத்தப்பட்டுள்ளது.

பொலிஸ்மா அதிபரின் சிபாரிசின்படி இந்த இடமாற்றங்கள் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

பாதுகாப்பு செயலாளரின் பரிந்துரையின்படி, தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் உத்தரவுக்கு அமைய தற்போது அது இடைநிறுத்தப்பட்டுள்ளது.

இடமாற்றம் பெற்றவர்களுள் 27 பிரதான பொலிஸ் பரிசோதகர்களும் 45 பொலிஸ் பரிசோதகர்களும் உள்ளடங்குவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (7)

## பிரான்ஸிலிருந்து நாடு கடத்தப்படவுள்ள இலங். மீனவர்கள்

(கொழும்பு)

சட்டவிரோதமாக பிரான்ஸ் நாட்டிலுள்ள தீவொன்றுக்குள் செல்ல முயன்ற இலங்கையைச் சேர்ந்த ஏழு மீனவர்களை அங்கிருந்து நாடு கடத்தத் தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரான்ஸ் நாட்டுக்குரிய ரீயூனியன் என்ற தீவுக்கு சட்டவிரோதமாகச் சென்ற குறித்த மீனவர்கள் ஏழு பேரும் கடந்த வாரம் அந்நாட்டின் பாதுகாப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டனர்.

நீர்கொழும்பு பிரதேசத்திலிருந்து டிசெம்பர் மாதம் 5ஆம் திகதி " ஒஸ்த புத்தா" என்ற மீனவப் படகு மூலம் குறித்த மீனவர்கள் பிரான்ஸ் நோக்கிச் சென்றுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்கள் சட்டவிரோதமாக அந்நாட்டுக்குள் நுழைந்துள்ளதால் அவர்களை அங்கிருந்து நாடு கடத்த பிரான்ஸ் அரசாங்கம் தெரிவித்துள்ளது. (7)

## இவ்வருடத்துக்குள் இலத்திரனியல் கடவுச்சீட்டு

(கொழும்பு)

வெளிநாட்டு கடவுச் சீட்டுக்களை தரமிக்கதாக மேம்படுத்தி இலத்திரனியல் கடவுச்சீட்டாக இவ்வருடத்தில் விநியோகிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக குடிவரவு-குடியகல்வு திணைக்கள கட்டுப்பாட்டாளர் நாயகம் எம்.என். ரணசிங்க தெரிவித்துள்ளார்.

இந்த கடவுச்சீட்டை தயாரிப்பதற்காக தற்போது கேள்விமனு கோரப்பட்டுள்ளது. இந்த வருடத்தின் நடுப்பகுதியில் இந்த இலத்திரனியல் கடவுச்சீட்டை விநியோகிக்க முடியுமாக இருக்கும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

குடிவரவு- குடியகல்வு திணைக்களம் கடந்த வருடத்தில் ஐந்து இலட்சம் கடவுச் சீட்டுகளை விநியோகித்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (7)

## ஹெரோயினுடன் மூவர் கைது

(பேருவளை)

பேருவளை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மாகல்கந்த பகுதியில் ஹெரோயினுடன் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர். பேருவளை பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்களிடம் இருந்து 73 கிராம் 600 மில்லி கிராம் ஹெரோயின் கைப்பற்றப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. நேற்று முன்தினம் மாலை 4.30 மணியளவில் குறித்த மூவரும் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த சந்தேகநபர்கள் மீன்பிடி தொழிலில் ஈடுபட்டு வருபவர்கள் என தெரிவிக்கப்படுகின்றது. சம்பவம் தொடர்பில் பேருவளை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (7)

## 12இலட்சம் ரூபா பெறுமதியான ஹெரோயினுடன் ஒருவர் கைது

(மக்கொன)

மக்கொன – கிதுல ஹென பிரதேசத்தைச் சேர்ந்த 39 வயதுடைய ஒருவர் சுமார் 12 இலட்சம் ரூபா பெறுமதியான ஹெரோயின் போதைப் பொருளுடன் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்று முன்தினம் களுத்துறை குற்றத்தடுப்பு பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சுற்றி வளைப்பின் போது குறித்த சந்தேகநபர் போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (7)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கொடிகாமம் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 180 | 90 | 160 | 150 | 160 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 70 | 70 | 80 |
| பச்சைமிளகாய் | 500 | 400 | 300 | 220 | 400 |
| தக்காளி | 100 | 150 | 120 | 80 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 80 | 50 | 50 | 40 | 50 |
| கோவா | 120 | 120 | 100 | 70 | 120 |
| கரட் | 140 | 180 | 130 | 110 | 120 |
| பூசணி | 30 | 50 | 30 | 40 | 60 |
| புடோல் | 100 | 120 | 70 | 70 | 100 |
| வாழைக்காய் | 80 | 80 | 60 | 50 | 100 |
| சின்ன வெங்காயம் | 100 | 100 | 120 | 120 | 160 |
| பெரிய வெங்காயம் | 100 | 90 | 70 | 75 | 90 |
| பாகற்காய் | 250 | 300 | 150 | 200 | 200 |
| வெண்டிக்காய் | 150 | 100 | 70 | 70 | 120 |
| கருணைக் கிழங்கு | 60 | 50 | 60 | 40 | 80 |
| பயற்றங்காய் | 240 | 300 | 120 | 200 | 200 |
| லீக்ஸ் | 200 | 180 | 140 | 140 | 140 |
| பீற்றூட் | 180 | 120 | 140 | 70 | 160 |
| கறிமிளகாய் | 200 | 250 | 160 | 200 | 300 |
| முருங்கைக்காய் | 1000 | – | – | – | 500 |
| போஞ்சி | 150 | 200 | 120 | 90 | 140 |
| கத்தரிதம்புள்ள | 150 | 80 | 140 | 140 | 150 |
| கீரை – 1பிடி | 50 | 30 | 60 | 30 | 50 |
| தேசிக்காய் | 200 | 100 | 150 | 150 | 160 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 40 | 25-30 | 30-35 | 20-40 |
| இராசவள்ளி | 180 | 180 | 140 | 160 | 150 |
| வெங்காயப்பூ | 250 | 400 | 280 | – | – |
| முள்ளங்கி | 50 | 80 | 60 | 30 | 120 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 40 | 20 | 50 |
| வல்லாரை | 20 | 40 | 20 | 20 | 30 |
| ஈரப்பலா | 60 | 70 | 40 | 120 | 60 |

# செய்தித்துளிகள்

## கைக்குண்டுடன் ஐவர் கைது

(நிட்டம்புவ)

நிட்டம்புவ - ருக்கஹவில பிரதேசத்தில் கைக்குண்டுடன் 5 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு ஒன்றுக்கமைய இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

கைது செய்யப்பட்டவர்கள் 26 மற்றும் 36 வயதுக்குட்பட்டவர்கள் என்பதுடன் உதுகொட ருக்கஹவில பிரதேசத்தினை சேர்ந்தவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர். (7)

## இ.தொ.கா.உப தலைவர் காலமானார்

(ஹற்றன்)

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உப தலைவரும், முன்னாள் மத்திய மாகாண தமிழ் கல்வி அமைச்சருமான சந்தனம் அருள்சாமி நேற்றுக் காலமானார். தொழிற்சங்கவாதியும், அரசியலில் நீண்ட நாள் அனுபவம் கொண்ட அவர் தனது 59 வயதில் இயற்கை எய்தினார். (7)

## நீர்த்தேக்க அணைக்கட்டு நாளை திறப்பு

( மொரஹகந்த )

மகாவலி பாரிய திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட இறுதி நீர்த்திட்டமான மொரஹகந்த களுகங்கை நீர்த்தேக்க திட்டத்தின் அணைக்கட்டு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நாளை செவ்வாய்க் கிழமை திறந்து வைக்கப்படவுள்ளது.

இதற்காக 450 கோடி ரூபா செலவிடப்பட்டுள்ளது. இந்த நீர்த்தேக்க திட்டத்தின் மூலம் மூவாயிரம் குடும்பங்களுக்கு நீர் வழங்கப்படுகிறது.

நாட்டில் அமைக்கப்பட்ட சுற்றாடலுக்கு பொருத்தமான திட்டமான மொரஹகந்த களுகங்கை திட்டத்தை அடையாளப்படுத்த முடியும் என்று திட்டத்தின் பணிப்பாளர் டீ.பி.விஜயரட்ன தெரிவித்துள்ளார். (7)

## மாணிக்கக்கல் அகழ்ந்த எழுவர் கைது



(பொகவந்தலாவ)

பொகவந்தலாவ, கொட்டியாகலை மத்திய பிரிவு தோட்ட பகுதியில் சட்டவிரோத மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்ட 07 பேர் நேற்று முன்தினம் இரவு 11.30 மணியளவில் கைது செய்யப்பட்டுள்ளதாக பொகவந்தலாவ பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பொகவந்தலாவ பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கே.சி.தர்மபிரிய தலைமையில் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போதே இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன் இந்த கைது நடவடிக்கையின்போது சந்தேக நபர்களிடமிருந்து மாணிக்கக்கல் அகழ்வுக்கு பயன்படுத்தப்பட்ட உபகரணங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைது செய்யபட்ட 07 பேரும் பொகவந்தலாவ கொட்டியாகலை பகுதியை சேர்ந்தவர்கள் எனவும், அவர்களை அட்டன் நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர். (7)

## நாய் எரிக்கப்பட்ட விவகாரம்; கைதானவர் பிணையில் விடுவிப்பு

(நீர்கொழும்பு)

நீர்கொழும்பு-கொப்பரவத்த சந்தியில் வீடொன்றில் கூண்டில் அடைக்கப்பட்டிருந்த சாலி என அழைக்கப்படும் நாய் ஒன்றின் மீது மண்ணெண்ணெய் ஊற்றி எரித்த சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட சந்தேக நபர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார். அவரை நேற்றைய தினம் நீர்கொழும்பு நீதவான் நீதிமன்றத்தில் பிரசன்னப்படுத்திய போது 50 ஆயிரம் ரூபாய் சரீரப் பிணையில் விடுவிக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

நீர்கொழும்பு-பெரியமுல்ல பகுதியை சேர்ந்த 38 வயதுடைய மரம் வெட்டும் தொழிலில் ஈடுபடும் ஒருவரே இந்த சம்பவம் தொடர்பில் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். சாலி என அழைக்கப்படுகின்ற நாய் கடந்த டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதி மண்ணெண்ணெய் ஊற்றி கூண்டோடு எரிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (7)




# வீண் பழியும் இலவம் பஞ்சும்



ஒரு ஊரில் வெட்டுபுலி என்ற ஒருவன் இருந்தான். அவன் ஒருமுறை தேவையில்லாமல் ஒரு கிராமவாசி மீது பழி சொல்லி பஞ்சாயத்தைக் கூட்டினான்.

பஞ்சாயத்திலும் கிராமவாசிக்குத் தண்டனை கிடைத்தது. பின், வீட்டிற்கு வந்த வெட்டுபுலியின் மனச்சாட்சி அவனை உறுத்தியது. கிராமவாசி மீது தான் பழி சொன்னதை எண்ணி வருந்தினான்.


எனவே, தன் பாவத்திற்கு ஏதாவது பிராயச்சித்தம் உண்டா என்று தேடினான். என்ன பிராயச்சித்தம் செய்வதென்று அவனுக்குப் புரியவில்லை. எனவே, அந்த ஊரிலிருந்த ஒரு துறவியிடம் சென்றான். "துறவியாரே! நான் இந்தக் கிராமத்தில் வசிக்கும் ஒருவர் மீது வீண் பழி சொல்லிவிட்டேன். அது என் மனத்தை உறுத்துகிறது. அந்தப் பழி சொன்ன பாவத்தில் இருந்து தப்பிக்க எனக்கு வழி கூறுங்கள்!" என்று கேட்டான். ... துறவி சிறிது யோசித்துவிட்டு,

"இன்று இரவு மூன்று கிலோ இலவம் பஞ்சை எடுத்துப் போய் அந்த கிராமவாசியின் வீட்டுக்கு முன்பு பரப்பிப் போட்டுவிட்டு வந்து விடு. நாளை வந்து என்னைப் பார்." என்று கூறினார். வெட்டுபுலியிடம் பஞ்சைக் கொண்டு சென்று கிராமவாசியின் வீட்டின் முன் பரப்பி விட்டான்.

பின் மறுநாள் சென்று துறவியைப் பார்த்தான். "துறவியாரே! என் பாவம் போய் இருக்குமா இந்நேரம்?" என்று கேட்டான். உடனே துறவி, "வெட்டுபுலி! நீ இப்போது அந்த கிராமவாசியின் வீட்டிற்குச் செல். அவன் வீட்டு முன் நீ நேற்றிரவு பரப்பி வைத்த பஞ்சை மீண்டும் பொறுக்கிக்கொண்டு வா," என்று கூறினார். வெட்டுபுலி மிகுந்த ஆவலுடன் ஓடினான்.

ஆனால், ஒரு விரல் அளவு பஞ்சு கூட அங்கு இல்லை. எல்லாம் காற்றில் பறந்துபோய் விட்டிருந்தது. அதனைக் கண்ட வெட்டுபுலி திடுக்கிட்டான். மீண்டும் துறவியிடம் ஓடி வந்தான். "துறவியாரே! நேற்றிரவு நான் கிராமவாசி வீட்டின் முன்னால் போட்டுவிட்டு வந்த பஞ்சில் ஒரு துளிப் பஞ்சாவது இப்போது அங்கு இல்லை. என்ன செய்வது?" என்று கேட்டான். துறவி சிரித்துவிட்டு, "வெட்டுபுலி! நீ விரித்துப் போட்டுவிட்டு வந்த பஞ்சை இப்போது மீண்டும் எப்படி அள்ள முடியாதோ, அதே போல, நீ ஒருவர் மீது கூறிய பழியையும் அதனால் உனக்கு ஏற்பட்ட பாவத்தையும் மாற்ற முடியாது. திருப்பி வாற முடியாத பஞ்சைப் போன்றது தான் உன் பழிச் சொற்களும். அவற்றையும் இனித் திருப்பி வாற முடியாது. இறைவனிடும் உன் தவறுக்காக மன்னிப்பு கேள்" என்று கூறினார். வெட்டு புலிக்கு உண்மை புரிந்தது. அன்று முதல் மற்றவர்கள் மீது பழி சொல்லும் குணத்தையே விட்டுவிட்டான். பிறர் மீது வீண் பழி சுமத்துவதால் பலன் ஏதும் கிடைக்கப்போவதில்லை என்பதை உணர்ந்தான் வெட்டுபுலி.

# மாமூத் யானை பற்றிய தகவல்கள்



மாமூத்துக்கள்(Mammoth) என்பன பூமியில் 4.8 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த எலபென்டியா என்ற உயிரியல் குடும்பத்தினை சேர்ந்த ஓர் உயிரினம் ஆகும். எலபென்டியா என்பது பிரோபாக்சிடியா என்ற உயிரியல் குடும்பத்தின் துணை குடும்பம் ஆகும். இந்த மாமூத்துகளுக்கும் தற்கால யானைகளுக்கும் நெருங்கிய படிவளர்ச்சித் தொடர்பு உள்ளது. மாமூத்துகளுக்கு தற்போதுள்ள பெரிய யானைகளைவிட பெரிய தந்தங்கள் உண்டு மேலும் இதன் உடல் அடர்ந்த மயிர்களால் மூடப்பட்டும் காணப்பட்டது. மாமூத் என்கிற வார்த்தையானது மன்சி என்ற ரஷ்ய மொழியில் இருந்த **MAMOHT mam ont** என்ற சொல்லிலிருந்து திரிந்து வந்ததாகும்.

மாமூத்துக்கள் தற்கால யானைகளை ஒப்பிடும் போது மிகவும் பேருரு உடையதாகும். ஆங்கிலச் சொல் "mammoth" என்பது "பெரிய" அல்லது "மிகப் பெரிய" என்கிற பொருள் தருவதாகும். சோங்குவா ஆற்றில் கண்டுபிடிக்கப்பட்ட படிமமே இதுவரை கண்டுபிடிக்கப்பட்ட படிமங் களிலேயே மிகப்பெரியது (Songhua River mammoth). அது ஏறத்தாழ ஐந்து மீற்றர் உயரம் இருந்திருக்கக்கூடும் என்று கணக்கிடப்பட்டுள்ளது. பொதுவாக மாமூத்துகள் ஆறு முதல் எட்டு டொன்கள் எடை இருந்திருக்க கூடும்.சில ஆண் மாமூத்துகள் பன்னிரண்டு டொன்கள் வரை இருந்திருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

சுமார் 6000 வருடங்களுக்கு முன்பு கூட அலாஸ்காவில் வாழ்ந்த இவை அதன் பிறகு மறைந்தன.உயிரின மறைவில் அண்மைக் காலத்தில் நடந்த சம்பவம் எனக் கொள்ளலாம்.

காணாமல் போன உயிரினங்கள் மீண்டும் உருவாக்கம் மிகப் பெரிய உயிரினமான டைனோசர்கள்.இப்போது பூமியில் உயிருடன் இல்லை. ஆனால் ஆய்வகத்தில் டைனோசர்களை உருவாக்க முடியும் என்று கற்பனையாகச் சொல்லி இருப்பார்கள்.

அது வெறும் கற்பனையல்ல. நிஜத்திலும் அதுபோன்று இறந்து போன உயிரினங்களை உருவாக்க முடியும் என்று விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

யானைகளின் முன்னோடி இனம் "ஊல்லி மாமூத்". தற்போதுள்ள யானைகளைவிட மிகப் பிரமாண்டமானவை மாமூத் யானைகள். பனிக் காலத்தில் வாழ்ந்த இவற்றுக்கு உடல் முழுவதும் 3 அடி நீள ரோமங்களும் மிகப்பெரிய தந்தங்களும் உண்டு. இந்த யானைகளும் டைனோசர்களைப் போல கால மாற்றத்தில் அழிந்து போய் விட்டன.

பழங்கால பொருட்கள், உயிரினங்கள் பற்றி நாம் பூமியில் புதைந்திருக்கும் படிமங்கள் மூலம் அறிந்து கொள்கிறோம். பனிப்பிரதேசத்தில் இறந்த உயிரினங்களின் படிமங்கள் நீண்ட காலத்துக்கு சிதைவுறாமலும், கெட்டுப்போகாமலும் கிடைக்கிறது. இப்படி கிடைத்த சில படிமங்களின் மூலம் ஒரு சில உயிரினங்களின் டி.என்.-ஏ.வை வரையறை செய்ய முடிந்துள்ளது. அந்த டி.என்.ஏ. மாதிரியை செயற்கையாக உருவாக்கி தற்போதுள்ள உயிரினங்களில் செலுத்தி புதிய மாற்றத்துடன் பழைய உயிரினங்களை திரும்பவும் உயிரூட்டிக் கொண்டு வரமுடியும் என்பது அறிவியல் கண்டுபிடிப்பு.

இந்த முறையில் மாமூத் வகை யானைகளுக்கு மீண்டும் உயிர் கொடுக்கலாம் என்று கனடாவில் உள்ள மானிடோபா பல்கலைக்கழக ஆய்வாளர் கெவின் கேம்பல் கூறுகிறார்.

25 ஆயிரம் ஆண்டுகளுக்கு முந்தைய மாமூத் யானை யின் தாடைப் பகுதியில் உள்ள இரத்தக் குழாய் படிமம் பனிக்கட்டிக்கு இடையில் கெடாத நிலையில் கிடைத்துள்ளது. அதேபோல் 43 ஆயிரம் ஆண்டுகளுக்கு முந்தைய கீரிப் பிள்ளையின் எலும்புக்கூடு படிமமும் ஏற்கனவே கிடைத்திருந்தது. இவற்றை ஆராய்ந்ததில் டி.என்.ஏ.வை வரையறை செய்ய முடிந்தது. இதன் மூலம் அதன் இரத்தத்தை மறு உற்பத்தி செய்ய முடியும் என்று தெளிவாகி உள்ளது. இந்த தொழில்நுட்பத்துக்கு 'ஜெனிடிக் அடாப்டேசன் டெக்னிக்' என்று பெயர்.இது தொடர்பான ஆய்வுகள் தொடர உள்ளன.

இதில் வெற்றி கிடைத்தால் நமது காலத் திலும் டைனோசர்கள், மாமூத் யானைகள் போன்ற பழங்கால உயிரினங்கள் நடமாடும்!

மக்கள் சேவையே மகேசன் சேவை.

– யாரோ

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## மருத்துவத் துறையில் கவனம் செலுத்துங்கள்

சிவனுக்கு வைத்தியநாதன் என்றொரு பெயர் உண்டு.

அதனாலன்றோ மருத்துவர்களையும் அந்தக் கடவுளுக்கு இணையாக மக்கள் சமூகம் போற்றுகின்றது.

உடல், உள பிணி நீக்கி உயிர்காக்க வல்ல தொழிலைச் செய்வதால், மருத்துவர்களைத் தெய்வமாகப் போற்றுகின்ற நம் தமிழ்ச் சமூகத்தின் உன்னதப் பண்புடமை போற்றுதற்குரியது.

எனினும் இன்றிருக்கக்கூடிய நம் தமிழர் தாயகத்து மருத்துவத்துறை தொடர்பில் பல்வேறு குறைபாடுகள் முன்வைக்கப்படுகின்றன என்பதையும் இங்கு கூறித்தானாக வேண்டும்.

கடவுளுக்கு ஒப்பான மருத்துவர்கள் நம் மண்ணில் இருந்து பணியாற்றுகின்ற போது, ஒரு சில மருத்துவர்கள் நடந்து கொள்கின்ற அநாகரிகத்தனங்கள் மருத்துவ சமூகத்துக்கே இழுக்கை ஏற்படுத்தி விடுகிறது.

இதை நாம் கூறும்போது உண்மையில் வேதனை அடைகின்றோம். ஏனெனில் எங்கள் கருத்துக்கள்; மருத்துவத் தொழிலைப் புனிதமாகப் போற்றிப்பணி செய்கின்றவர்களின் மனதை நோகடித்து விடுமோ என்ற ஏக்கமே அந்த வேதனைக்குக் காரணம்.

அதேநேரம் ஒரு சில மருத்துவர்களால் பாதிக்கப்பட்டவர்கள் தங்கள் கவலையை, வேதனையை, உறவுகளின் உயிரிழப்பைக் கண்ணீர் விட்டுக்கதறி அழுது கூறும்போது, ஒரு பொறுப்பு வாய்ந்த ஊடகம் என்ற வகையில் நாம் மௌனமாக இருப்பதென்பதும் தர்மத்துக்கு ஏற்புடையதன்று.

ஆகையால்தான் எங்கள் மருத்துவத் துறை தொடர்பில் – ஒரு சில மருத்துவர்களின் அணுகுமுறை தொடர்பில் அனைத்து மருத்துவர்களும் கவனம் செலுத்த வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைக்கின்றோம்.

அண்மையில் காரைநகரைச் சேர்ந்த சிலர் வலம்புரிக்கு வருகை தந்தனர். ஒரு இளம் தாயை இழந்த துன்பம் அவர்களை வாட்டி வதைத்திருந்தது.

விபத்தொன்றில் உயிரிழந்த இளம் தாய் ஒருவரின் மரணம் குறித்த மருத்துவச் சான்றிதழ் தொடர்பில் அவர்கள் கூறிய விடயங்கள், உயிரற்ற உடலை கொழும்புக்கு எடுத்துச் சென்று அங்கு பெற்றுக் கொண்ட மருத்துவச் சான்றிதழ்கள் மற்றும் அதனோடு தொடர்புடைய பத்திரங்களை ஆதாரப்படுத்தி, யாழ்ப்பாணத்தில் தமக்கு நேர்ந்த கதியை அவர்கள் கூறிய போது துன்பப்படாமல் இருக்க முடியவில்லை.

இதுதவிர, ஒரு சில தனியார் வைத்தியசாலைகளில் நடக்கின்ற இறை தர்மத்துக்கு விரோதமான செயல்கள், சில உள்ளூர் வைத்திய சாலைகளில் சில மருத்துவர்கள் நோயாளர்களைத் திட்டித் தீர்க்கின்ற அவலங்கள் என்பன பற்றியெல்லாம் மக்கள் தங்கள் ஆதங்கத்தை பட்டியல்படுத்தி அனுப்பி வைக்கின்றனர். இந்த நிலையில்தான் இங்கு இவ்விடயம் எழுதப்படுகிறது.

அன்புக்குரிய மருத்துவர்களே! வைத்திய சாலைகளின் பணிப்பாளர்களே! தனியார் வைத்திய சேவைகளை வழங்குகின்ற பெரியவர்களே! மருத்துவம் உயிர்காக்கும் பணி. இதனோடு எவரையும் விளையாட விட்டுவிடாதீர்கள். பணம் ஒன்றுதான் வாழ்வு என்று யாரும் நினைத்து விடாதீர்கள்.

இறைவன் உங்களைத் தன் பிரதிநிதிகளாக நியமித்து மானிடத்தின் உயிர்காக்கும் பொறுப்பைத் தந்துள்ளான். இஃது எல்லோருக்கும் கிடைக்கக்கூடியதன்று.

ஆகையால் கடவுளின் கருணைக்கு நிகராக உங்கள் சேவையை வழங்குங்கள்.

# கிளிநொச்சி வெள்ளம் குறித்த விசாரணைக்குழு ஏன் முடக்கப்பட்டது?

## கொழும்பு ஊடகம் கேள்வி

கிளிநொச்சியில் அண்மையில் ஏற்பட்ட வெள்ளத்துக்கு மாகாண நீர்ப்பாசன அதிகாரிகள் காரணமாக இருந்தனரா என்பது குறித்து விசாரிக்க வடக்கு மாகாண ஆளுநரால் நியமிக்கப்பட்ட ஆணைக்குழுவின் விசாரணைகள் இடைநிறுத்தப்பட்டமை குறித்து கேள்விகள் எழுந்துள்ளன என்று கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

வடக்கு மாகாண முன்னாள் ஆளுநர் ரெஜினோல்ட கூரே இந்த விசாரணைக் குழுவை நியமித்திருந்தார்.

யாழ். பல்கலைக்கழக பொறியியல் பீட பேராசிரியர் எஸ்.எஸ்.சிவகுமார் தலைமையில், அமைக்கப்பட்ட இந்தக் குழுவின் உறுப்பினர்களாக, வட மாகாண பொறியியல் சேவைகள் பிரதி பிரதான செயலர் எஸ்.சண்முகநாதன் மற்றும் மாகாண விவசாயப் பணிப்பாளர் எஸ். சிவகுமார் ஆகியோர் நியமிக்கப்பட்டிருந்தனர்.

இதுதொடர்பாக கருத்து வெளியிட்ட பேராசிரியர் சிவகுமார், "எமக்கான நியமனக கடிதத்தில், முழுமையான விசாரணையைமேற்கொண்டு ஒருவாரத்துக்குள் அறிக்கை சமர்ப்பிக்குமாறு ஆளுநரால் கேட்கப்பட்டிருந்தது.

கடந்தவாரம் நாங்கள் கிளிநொச்சியில் உள்ள பொறியியல் பீட வளாகத்தில் கூடிய குழுவின் செயற்பாடுகள் குறித்து ஆராய்ந்து உடனடியாக விசாரணைகளை ஆரம்பிக்க முடிவு செய்தோம். எனினும், கூட்டம் முடிந்து 30 நிமிடங்களில் ஆளுநரின் செயலாளரிடம் இருந்து எனக்கு தொலைபேசி அழைப்பு வந்தது.

மறு அறிவித்தல் வரை விசாரணைகளை முன்னெடுக்க வேண்டாம் என்று எனக்கு கூறப்பட்டது. அதன் பினனர், எனக்கு ஆளுநரின செயலகத்தில் இருந்து இது வரை எந்த அதிகாரபூர்வ அறிவிப்பும் அனுப்பப்படவில்லை.

எந்தக் காரணமும் குறிப்பிடாமல், விசாரணைகளை இடைநிறுத்திய ஆளுநர் செயலகத்தின் இந்த திடீர் முடிவு ஆச்சரியத்தை அளித்தது என்றும் பேராசிரியர் சிவகுமார் தெரிவித்தார்.

வெள்ளத்துக்கான காரணம் தொடர்பாக தீவிரமான பல குற்றச்சாட்டுகளின் அடிப்படையிலேயே இந்த விசாரணைக் குழு நியமிக்கப்பட்டது.

இரணைமடுக்குளத்தில் தேக்கக் கூடிய அதிகபட்ச நீரின் அளவை விட, 3.5 அடி அதிகமாக, 39.5 அடி உயரத்துக்கு நீரைத் தேக்க அனுமதிக்கப்பட்டது குறித்தும், இதனால், கட்டுமானங்களுக்கு மேலாக நீர் வழிந்தோடியது குறித்து குற்றச்சாட்டும் அதில் ஒன்றாகும்.

குளத்தின் அனைத்து வான்கதவுகளும் ஒரே நேரத்தில் திறந்து விடப்பட்டதால், வெள்ளச் சேதம் ஏற்பட்டதாகவும் ஒரு குற்றச்சாட்டு கூறப்படுகிறது.

மாகாண நீர்ப்பாசன திணைக்கள அதிகாரிகள் வெள்ள முகாமைத்துவத்தை மோசமாக கையாண்டனரா, நீர் வழிந்தோடும பகுதிகளில் வாழும் மக்களுக்கு முறையான எச்சரிக்கை செய்து அவர்களை வெளியேற்றாமல் வான்கதவுகளை திறந்தனரா என்பது குறித்து விசாரணை செய்யுமாறு இந்த விசாரணைக் குழு கோரப்பட்டிருந்தது.

தவறு நடந்திருந்தால், அதற்குப் பொறுப்பானவர்களை அடையாளம் காணுமாறும் குழுவிடம் கேட்கப்பட்டிருந்தது.

அதேவேளை, இந்தக் குழுவின் விசாரணை இடைநிறுத்தியதை உறுதி செய்த வட மாகாண ஆளுநரின் செயலர் இளங்கோவன், குழுவின் தலைவரான பேராசிரியர் சிவகுமார் வெளியிட்ட பகிரங்க கருத்துக்கள் காரணமாக, அது பாரபட்சமாக கருதப்படக் கூடும் என்பதாலேயே இந்த விசாரணை இடைநிறுத்தப்பட்டதாக கூறினார்.

வட மாகாணத்துக்கு ஜனாதிபதி புதிய ஆளுநரை நியமித்தபின்னர் உண்மையை கண்டறியும் புதிய குழு நியமிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (மு-3)

## தரவட்டம் இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ். கல்வி வலயத்திற்குட்பட்ட விஞ்ஞான பாட ஆசிரியர்களுக்கான தரவட்டம் இன்று பிற்பகல் 2.30 மணியளவில் யாழ். கல்வி வலய முகாமைத்துவ மன்றத்தில் இடம்பெறுமென யாழ். வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் எஸ். பால்ராஜ் தெரிவித்தார்.(இ-10-136)

## ஆயுளை அதிகரிக்க...

- ஆயுள் காலம் "அதிகரிக்க பிரச்சினைகளைச் சமாளிக்கும் திறமையை வளர்த்துக் கொள்ள வேண்டும். திட்டமிட்ட வாழ்க்கை முறைகளை அமைத்துக்கொண்டு வாழுங்கள். தீய பழக்கங்களை "கைவிட்டால்" ஆயுளை வளப்படுத்தி கொள்ளலாம். ஆயுளைக் குறைகின்ற விடயங்கள்.
    - மன அழுத்தம்
    - இரத்த அழுத்தம்
    - கொழுப்புச்சத்து
    - அதிக எடை
    - சர்க்கரை நோய்
    - புகைப்பழக்கம்
    - மதுப்பழக்கம்
    - தீயபழக்கம்
- இவைகளால் தான் ஆயுள் காலம் குறைகின் றது. எனவே இவைகளை தவிர்க்க தியானப்பயிற்சி, உடற்பயிற்சி நல்ல உணவுப்பொருட்கள் போன்றவைகளை மேற்கொண்டு ஆயுளை வளப்படுத்தி கொள்ளலாம்.

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை செவ்வாய்க்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணி வரை யாழ்.பிரதேசத்தில கல்லாரை பிரதேசத்திலும் வவுனியா பிரதேசத்தில லக்ஸபானா வீதி, தோணிக்கல், ஆண்டிய புளியங்குளம், புதுக்குளம் ஆகிய இடங்களிலும் மன்னார் பிரதேசத்தில முருங்கன் பிட்டியிலிருந்து செம்மண் தீவு வரை, செம்மண்தீவு Ware House, டொன் பொஸ்கோ, முருங்கனிலிருந்து சிலாவத்துறை வரை, முள்ளிக்குளம், அரிப்பு, சிலாவத்துறை கடற்படை முகாம், முள்ளிக் குளம கடற்படை முகாம், அச்சங்குளம், எருவிட்டான், அறுகு குன்று, அளவக்கை, மாவிலங்கேணி, வாழ்க்கை 'பட்டான் கண்டல், பல்லங் கோட்டை, பண்டாரிகுளம், நானாட்டான், உமணகிரி, நறுவிலிக்குளம், வங்காலை, தோமஸ்புரி, வங்காலை நீர்ப்பாசன சபை, வங்காலை கடற்படை முகாம் ஆகிய பிரதேசங்களிலும மின் தடைப்படும்.

# வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

## இயற்கைச் சக்திக்கு உதவுவோம்



உடலை நலத்தோடு வைத்துக் கொள்ள வேண்டுமாயின் உடலுக்கும், உயிர்ச்சக்திக்கும் இடையே உள்ள இரத்தம், வெப்பம், காற்று ஆகிய மூன்றுக்கும் ஊறுநேராதபடி பாதுகாத்துக் கொள்வது அவசியம் ஆகிறது. இயற்கைச் சக்திகளின் விளைவாலோ அல்லது ஐம்புலன்களின் விளைவாலோ இரத்தம், வெப்பம், காற்று ஆகிய மூன்றுக்கும் சீர்குலைவு ஏற்படுகின்றது. உணவு, உறக்கம், உழைப்பு, பால் உறவு இவற்றை மிகையாகப் பயன்படுத்துவதாலும், தவறாகப் பயன்படுத்துவதாலும், நமது செயல்களின் விளைவாகத் தொந்தரவுகள் நேரலாம்.

பருவ வேறுபாடு, பரம்பரை உணர்ச்சிப் பதிவு, வானில் கோள்களின் ஓட்டத்தில் ஏற்படும் நிலைமாற்றம் இவற்றால் உண்டாகும் காந்த அலை அதிர்வுகள், அவற்றின் சேர்க்கையின் விளைவுகள் இவை இயற்கைச் சக்தியால் நேரும் பாதிப்புகள் ஆகும். இந்த விளைவுகளிலிருந்து காக்க இயற்கை சில தடுப்பு வசதிகளைச் செய்து வைத்திருக்கிறது. இந்தத் தடுப்பு வசதிகளையும் கடந்து போகும் நிலை உண்டானால் உடல் கெடுகிறது. பாதிப்புகள் ஏற்படுவதைக் கூடுமான வரை நமது செயல்களால் நாம் தடுத்துக் கொள்ள முடியும். சில சமயங்களில் சந்தர்ப்பவசத்தால் நாம் செயல்படும் பொழுது, தடுப்பு நிலையை நாம் கடந்து விடுகிறே?ம். இயற்கைச் சக்திகளால் ஏற்படும் விளைவுகளைத் தடுத்துக் கொள்ள நாம் சில பயிற்சிகளைச் செய்ய வேண்டும். அப்படிச் செய்வதனால் நாம் அறிய முடியாத நிலையில் ஏற்படும் இயற்கைச் சக்திகளின் விளைவுகளையும் நாம் செய்த தவறுகளால் ஏற்படும் விளைவுகளையும் தடுப்பு நிலையை உயர்த்தி, உடல் நலக்கேடு ஏற்படாமல் பாதுகாத்துக் கொள்ளலாம் என்பதைப் பல நூற்றாண்டுக்கு முன்பே மனிதன் தெரிந்து கொண்டிருக்கிறான். தவிர்க்க முடியாத காரணங்களால், தான் நோய்வாய்ப்பட நேர்ந்தால் இயற்கைச் சக்திக்கு உதவுவதன் மூலம் நோயை விரைவிலும், வெற்றிகரமாகவும் குணப்படுத்திக் கொண்டு, உடல் நலத்தை விரைவில் பெற்றுவிடலாம்.

# விறுவிறுப்பானது சுப்பர்-8 போட்டி றேஞ்சஸ் அணி அபார வெற்றி




உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும்அணிக்கு 9 நபர்கொண்ட உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியின் SUPER 8 ஆட்டத்தில் றேஞ்சஸ் அணியும் மனோகரா அணியும்மோதியது.

ஆரம்பம் முதல் இரு அணிகளும் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியது. இரு அணிகளும் கோல் போடுவதற்கான முயற்சிகளை பின்கள வீரர்கள் சிறப்பான முறையில் தடுத்தனர். ஆட்டத்தின் 16 ஆவது நிமிடத்தில் வர்மன் தனக்கு கிடைத்த பந்தினை நேர்த்தியான முறையில் கோலாக மாற்ற 1:0 என்ற கோல் கணக்கில் முன்னிலை வகித்தது நேஞ்சஸ் அணி. ஆனாலும் சளைக்காது போராடிய மனோகரா அணியினருக்கு றேஞ்சஸ் பின்கள வீரரின் முறையற்ற ஆட்டத்தினால் வழங்கப்பட தண்டனை உதையினை மனோகரா அணியினர் கோலாக மாற்ற முதல் பாதியாட்டம் 1.1 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிவடைந்தது.

இரண்டாம் பாதியாட்ட ஆரம்பத்தில் மேலும் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி றேஞ்சஸ் அணியினர். இதன் பயனாக ஆட்டத்தின் 33 ஆவது நிமிடத்தில் வர்மன் மீண்டும் சிறப்பான் முறையில் 2 ஆவது கோலினை பெற்றுக் கொடுக்க 2:1 என்ற கோல் கணக்கில் முன்னிலை வகித்தது. ஆட்டம் முடிவடைய 5 நிமிடங்கள் இருக்கையில் கௌதமன் சிறப்பான முறையில் தனது அணிக்கான 3 ஆவது கோலினை போட மேலதிக கோல்கள் இன்றி ஆட்டம் 3:1 என்ற கோல் கணக்கில் றேஞ்சஸ் அணி வெற்றி பெற்றது. போட்டியின் ஆட்ட நாயகனாக றேஞ்சஸ் அணியின் வர்மன் தெரிவு செய்யப்பட்டார். (க)

# அவுஸ்திரேலிய அணியின் ஒற்றுமை எங்கே போய்விட்டது-பொண்டிங்



சிட்னி டெஸ்டில் நாதன் லயன் review செய்யாததும் ஸ்டார்க் பேசாமல் இருந்ததும் அவுஸ்திரேலிய அணியின் மனநிலையை பிரதிபலிப்பதாக முன்னாள் வீரர் ரிக்கி பொண்டிங் வேதனை தெரிவித்துள்ளார்.

சிட்னி டெஸ்டில் 4 ஆம் நாளான நேற்று அவுஸ்திரேலிய அணி முதல் இன்னிங்சில் 300 ஓட்டங்களுக்கு ஓல்-அவுட் ஆனது. அவுஸ்திரேலிய வீரர் நாதன் லயன் எல்.பி.டபிள்யூ முறையில் குல்தீப் பந்துவீச்சில் அவுட் ஆனார்.

ஆனால், லயன் அப்போது review கேட்காமல் நடுவர் அவுட் என்று கூறியதும் பெவிலியன் நோக்கி நடையைக் கட்டினார். எதிர்முனையில் இருந்த மிட்செல் ஸ்டார்க்கும் review செய்யுமாறு லயனுக்கு அறிவுறுத்தவில்லை.

இதனைக் கவனித்த வர்ணனையாளராக இருந்த முன்னாள் வீரர் ரிக்கி பொண்டிங், இதுதான் அவுஸ்திரேலிய வீரர்களின் தற்போதைய மனநிலை என்று கருத்து தெரிவித்தார். மேலும் இதுதொடர்பாக அவர் கூறுகையில்,

'லயன் அவுட் தற்போதைய அவுஸ்திரேலிய வீரர்களின் மனநிலை பற்றி நிறையச் செய்திகளை எனக்கு அறிவிக்கிறது. அவர்களுக்கு ஏன் விரக்தி ஏற்பட்டுள்ளது? ஏதாவது செய்து களத்தில் நிற்கும் எண்ணம் என்பது போய்விட்டது.

ஏன் அந்த அவுட்டை review செய்யவில்லை. 2 reviewவும் கைவசம் உள்ளது. நேரடியாக அவுட் கொடுக்கிறார். மிட்செல் ஸ்டார்க்கும் எனக்கு வந்தது உனக்கு வேண்டுமானால் நீ review கேட்டுக்கொள் என்பது போல்கைகழுவினார்.

ஆனால், இருவர் சேர்ந்து ஆடும்போது அது ஒரு கூட்டணி என்ற மனநிலை எங்கே போனது? சகவீரரைக் காப்பாற்றுவதற்கு எதிர்முனையில் நம்மால் முடிந்ததைச் செய்ய வேண்டும். ஆனால், அங்கு அவுஸ்திரேலிய வீரர்களிடம் எந்த ஒரு அவசரமுமில்லை.

மிட்செல் ஸ்டார்க் ரன்னர் முனையில் நிற்பதைப் பாருங்கள். அவ்வளவு தள்ளி அவர் நிற்க வேண்டிய அவசியமே இல்லை.

நாதன் லயன் பார்க்கிறார். அவரோ எனக்குத் தெரியாது என்று நிற்கிறார். நாம் ஏன் review செய்ய வேண்டும் என்று ஸ்டார்க் இருந்தார்' என ரிக்கி பொண்டிங் வேதனை தெரிவித்துள்ளார். (க)

# டோனியை முந்துவார் ரிஷப் பந்த்-பொண்டிங்



அவுஸ்திரேலியா - இந்தியா இடையிலான 4 ஆவது மற்றும் கடைசி டெஸ்ட் சிட்னியில் நடைபெற்று வருகிறது. டொஸ் வென்று முதலில் பட்டிங் செய்த இந்தியா 7 விக்கெட் இழப் பிற்கு 622 ஓட்டங்கள் குவித்து டிக்ளேர் செய்தது.

விக்கெட் கீப்பரான ரிஷப் பந்த் ஆட்டமிழக்காமல் 189 பந்தில் 15 பவுண்டரி, 1 சிக்சருடன் 159 ஓட்டங்கள் குவித்து ஆட்டமிழக்காமல் இருந்தார்.

மேற்கிந்திய தீவுக்குக் எதிராக இரண்டு முறை 92 ஓட்டத்தில் ஆட்டமிழந்த ரிஷப் பந்த், இந்த போட்டியில் அசத்தினார்.

இரண்டு சதங்கள் விளாசியுள்ள ரிஷப் பந்த் டெஸ்ட் போட்டியில் டோனியை விட அதிக சதங்கள் விளாசுவார் என்று ரிக்கி பொண்டிங் தெரிவித்துள்ளார்.

ரிஷப் பந்த் குறித்து ரிக்கி பொண்டிங் கூறுகையில், "ரிஷப் பந்த் உண்மையிலேயே திறமைசாலி. மேலும் நம்பமுடியாத வகையில் சிறந்த போல் ஸ்டிரைக்கர். சிறந்த கிரிக்கெட் அறிவை பெற்றுள்ளார்.

சில சமயங்களில் அவர் சுழற்பந்து வீச்சிற்கு எதிராக விளையாடுவதை உங்களால் நினைத்துக்கூட பார்க்க இயலாது. அவருக்கு நான் பயிற்சியாளராக இருந்தது அதிர்ஷ்டம். ரிஷப் பந்த் அபாயகரமான இருபது-20 வீரர்.

சிட்னி சதத்துடன் இரண்டு சதங்களும், இரண்டு முறை 90 ஓட்டங்கள் மேலும் விளாசியுள்ளார்.

தற்போது ரிஷப் பந்திற்கு 21 வயதே ஆவதால் மூன்று வகை கிரிக்கெட்டிலும் இந்தியாவிற்காக நீண்ட நாட்கள் விளையாட முடியும்.

தற்போது வரை விக்கெட் கீப்பர் பணியில் ஓரளவிற்குத் தேர்ச்சி பெற்றுள்ளார். இன்னும் நன்றாக தேர்ச்சி பெற வேண்டும். அவரால் சிறந்த விக்கெட் கீப்பராக முடியும். அதே போல் சிறந்த பட்ஸ்மனாகவும் ஆக முடியும். இந்திய கிரிக்கெட்டில் டோனி ஏற்படுத்திய தாக்கத்தை நாம் பேசிக் கொண்டிருக்கிறோம்.

டோனி ஏராளமான டெஸ்ட் போட்டியில் விளையாடியுள்ளார். ஆனால் 6 சதங்கள் மட்டுமே அடித்துள்ளார். டோனியை விட ரிஷப் பந்த் அதிக சதம் அடிப்பார்" என்றார். (க)

# பிங் கலரில் விராட் என்னை நெகிழ வைத்தது

## மக்ராத் உருக்கம்



சிட்னியில் நடைபெற்று வரும் மூன்றாவது டெஸ்ட் போட்டியில் ஹோலி பிங்க் நிறக்கிள்வுஸ் மற்றும் பட்டின் கிரிப் பிங்க் நிறத்தில் இருந்ததைக் கண்டு நான் அப்படியே நெகிழ்ந்து போய் விட்டேன் என்று அவுஸ்திரேலிய அணியின் முன்னாள் வேகப்பந்து வீச்சாளார் கிளான் மக்ராத் கூறியுள்ளார்.

அவுஸ்திரேலியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு விளையாடி வரும் இந்திய அணி, இருபது-20 தொடருக்கு பின் டெஸ்ட் போட்டிகளில் விளையாடி வருகிறது.

இதில் இரு அணிகளுக்கிடையேயான நான்காவது டெஸ்ட் போட்டி சிட்னியில் நடைபெற்று வருகிறது.

இப் போட்டியில் இந்திய அணியின் தலைவரான ஹோலி பிங்க் நிறக்கிளவுஸ் அணிந்து வந்து விளையாடினார்.

அவுஸ்திரேலிய அணியின் முன்னாள் வேகப் பந்து வீச்சாளர் கிளென் மக்ராத்தின் மனைவி ஜேன் மக்ராத் மார்பக புற்றுநோயால் கடந்த 2008 ஆம் ஆண்டு இறந்தார்.

இதனால் கிறிஸ்மஸ் பண்டிகைக்கு பிறகு மெல்பேர்னில் நடக்கும் டெஸ்ட் பாக்ஸிங் டே டெஸ்ட் போட்டி என்றும் ஜனவரி முதல் வாரத்தில் சிட்னியில் நடக்கும் டெஸ்ட் போட்டி பிங்க் டெஸ்ட் எனவும் அழைக்கப் படுவதால், ஹோலி அப்படி பிங்க் நிறக்கிளவுஸ் அணிந்து விளையாடினார்.

இந்நிலையில் இதைக் கண்ட அவுஸ்திரேலிய அணியின் முன்னாள் வீரர் மக்ராத் கூறுகையில்,

போட்டி தொடங்கும் முன் ஒரு நாள் இரவு விராட் என்னிடம் வந்து பேசினார். உங்களுக்கு ஒரு ஆச்சரியம் காத்திருக்கிறது என்று. இதனையடுத்து அவர் பட்டிங் செய்ய வரும்போது அவரது கையுறை, பட் என அனைத்திலும் பிங்க் நிறம் அறிந்திருந்தார்.

இது என்னை நெகிழ வைத்தது என்று கூறியுள்ளார். (க)

## ஒருநாள் தொடர்

# அவுஸ்திரேலிய அணி அறிவிப்பு



இந்தியாவுக்கு எதிரான ஒருநாள் தொடரில் மோதும் அவுஸ்திரேலிய அணி அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தியா-அவுஸ்திரேலியா அணிகளுக்கு இடை யேயான ஒருநாள் தொடர் எதிர்வரும் 15 ஆம் திகதி தொடங்கவுள்ளது.

இதற்காக 14 வீரர்கள் கொண்ட அவுஸ்திரேலிய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

8 ஆண்டுகளாக அணியில் இடம்பெறாமல் இருந்த பீட்டர் சிடில் தெரிவு செய்யப்பட்டுள்ளார். இதேபோன்று தென்னாபிரிக்காவுக்கு எதிரான ஒருநாள் தொடரில் தெரிவு செய்யப்படாமல் இருந்த லயன் திரும்ப அழைக்கப்பட்டுள்ளார்.

அணி விபரம்:

ஆரோன் பிஞ்ச் (தலைவர்), உஸ்மான் கவாஜா, ஷார் மார்ஷ், பீட்டர் ஹேண்ட்ஸ்கம்ப், கிளென் மக்ஸ்வெல், மார்கஸ் ஸ்டோய்னிஸ், மிட்ஷ் மார்ஷ், அலெக்ஸ் கேரே, ஹேய் ரிச்சார்ட்ஸன், பில்லி ஸ்டான்லேக், ஜேஸன் பெஹரன்டார்ப், பீட்டர் சிடில், நாதன் லயன், ஆடம் ஜம்பா. (க)


அன்பு வாசகர்களே!
உங்கள் பிரதேச விளையாட்டுச் செய்திகளை Valampurisp@gmail.com அல்லது 076 636 3378 என்னும் Viber இலக்கத்துக்கு அனுப்பி வையுங்கள்.
உங்களை உலகறியச் செய்ய நாம் தயார்

## ஆளுநர் நியமன...

யின் பாராளுமன்ற உறுப்பினருமான விஜித்த ஹேரத் தெரிவித்தார்

இது தொடர்பாக அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

ஐந்து மாகாணங்களுக்கான புதிய ஆளுநர்கள் கடந்த வெள்ளிக்கிழமை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் நியமிக்கப்பட்டனர்.

மாகாண ஆளுநர் நியமனமானது மிகவும் கௌரவமான பதவியாக மதிக்கப்பட வேண்டியது. அந்த நியமனங்கள் நாட்டில் இருக்கும் அரசியல் கட்சி சார்பற்ற கௌரவமான நிலையில் இருப்பவர்களுக்கே வழங்கப்படவேண்டும். ஆனால் தற்போது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, ஆளுநர் என்ற பதவியையும் அகௌரவப்படுத்தி, இவ்வாறானவர்களை நியமித்து அவரும் கீழ் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளார் என்றார் விஜித ஹேரத். (மு-3)

## குடும்ப உறவுக...

கைதி தனது குடும்ப உறுப்பினர்களை ஒவ்வொருவராக இழந்து வரும் நிலையில் மிகவும் மன அழுத்தத்துக்கு உள்ளாகியிருப்பதால் தன்னை உடனடியாக விடுவிக்கும்படி கோரி மேற்குறித்த போராட்டத்தை நேற்று முன்தினம் ஆரம்பித்திருந்தார்.

கிளிநொச்சி வட்டக்கச்சியை சேர்ந்த சிவப்பிரகாசம் சிவசீலன் (வயது 32) என்ற அரசியல் கைதியே இந்த போராட்டத்தில் ஈடுபட்டு வருகிறார்.

இவர் 2009 ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டுள்ளார். இவருக்கு எதிராக உயர் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இவருடைய தாய் மற்றும் சகோதரன் ஆகியோர் ஏற்கெனவே உயிரிழந்துள்ள நிலையில் தற்போது தந்தையும் கடந்த 16 ஆம் திகதி உயிரிழந்துள்ளார்

இதனால் மிகவும் மன அழுத்தத்துக்குள்ளாகியுள்ள குறித்த அரசியல் கைதி தன்னை உடனடியாக விடுதலை செய்யும்படி கோரி போராட்டத்தை தொடர்கிறார். (மு-9)

## வவுனியா புதூர்...

ஸாருக்கு இரகசியத் தகவல் கிடைத்துள்ளது.

இதனையடுத்து அப்பகுதிக்கு சிவில் உடையில் நான்கு பொலிஸார் மோட்டார் சைக்கிளில் சென்றுள்ளனர். இதன்போது அவ்வீதியில் சென்ற இனந்தெரியாத நபர் ஒருவர் தனது கையில் வைத்திருந்த மர்மப் பொதியை தூக்கி எறிந்துவிட்டு அங்கிருந்து தப்பி ஓடிச் சென்றுள்ளார். தாம் அவரைத் துரத்திச் சென்றபோதும் அவர் தலைமறைவாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்திருந்தனர்.

அன்று இரவிலிருந்து அடுத்த நாள் மதியம் வரை இராணுவம் பொலிஸார் இணைந்து அப்பகுதியில் சுற்றி வளைப்பை மேற்கொண்டு தேடுதல் நடத்திய போதும் எவரும் கைது செய்யப்படவில்லை.

இந்நிலையில் குறித்த பொதியை பொலிஸார் பார்வையிட்டபோது அதனுள் கைத்துப்பாக்கி அதற்குரிய ரவைகள், கைக்குண்டுகள் நான்கு, ஸ்மாட் கைத்தொலைபேசிகள் 2 அதற்குரிய மின்கலத்துடனான மின் வழங்கி என்பன கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இதனை அடிப்படையாகக் கொண்டு விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் வவுனியா சாளம்பைக்குளத்தினை சேர்ந்த நெய்முத்துராசா சுதாகரன் (குணா) என்பவரை கடந்த வெள்ளிக்கிழமை சந்தேகத்தின் பெயரில் கைது செய்து நேற்று முன்தினம் வவுனியா மாவட்ட நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்திய போது இன்று திங்கட்கிழமை வரை பொலிஸ் தடுப்பு காவலில் வைத்து விசாரணைகளை மேற்கொள்ளுமாறு நீதவான் உத்தரவு பிறப்பித்துள்ளார். (மு-281)

## வடக்கின் புதிய...

இந்த செயற்பாடு இனகுரோதத்தை வளர்க்கும் செயற்பாடாகவே பார்க்கப்படும். எனவே, ஐக்கியத்திற்கு வித்தான ஒருவரை ஆளுநராக நியமிப்பதே சிறந்தது. அதனை ஜனாதிபதி கருத்திற்கொண்டு ஒருவரை நியமிக்க வேண்டுமெனவும் அவர் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

கிழக்கு மாகாண ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ள ஹில்புல்லா வடகிழக்கு மாகாணங்கள் இணைக்கப்பட்டால், இரத்த ஆறு ஓடும் என கடந்த காலங்களில் கருத்து தெரிவித்திருந்தார். இவ்வாறு கருத்து தெரிவித்த ஒருவரை கிழக்கு மாகாண ஆளுநராக நியமித்திருப்பது தொடர்பில் நேற்று கேட்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

வடகிழக்கு மாகாணங்களில் கடந்த காலத்தில் சிங்கள மொழி பேசும் ஆளுநரே நியமிக்கப்பட்டுள்ளார். ஆனால், தற்போது, தமிழ் பேசும் முஸ்லிம் ஒருவர் ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ளார். அது வரவேற்கத்தக்கது.

கிழக்கில் ஏற்பட்ட மாற்றத்தின் அடிப்படையில் பார்த்தால், வடக்கிலும் ஒரு தமிழரை நியமிப்பதும் சிறந்தது. வடக்கிலும் தமிழர் ஒருவரை நியமிப்பது தொடர்பில் ஜனாதிபதி கருத்தில் கொள்ள வேண்டுமென்றும் வலியுறுத்தியுள்ளார்.

அதேவேளை, வடமாகாணத்திற்கென நியமிக்கும் ஆளுநரை, மாகாணத்தின் நிர்வாகம் தொடர்பாக தெரிந்துகொண்டவராகவும், தமிழ் மக்களோடும், தமிழ் தேசிய கூட்டமைப்புடனும் ஒத்துழைத்து செயற்படக்கூடியவராகவும் இருக்க வேண்டும். கூடுதலாக பாராளுமன்ற உறுப்பினர்களையோ, கடந்து சென்ற மாகாண சபை உறுப்பினர்களையோ கொண்டது தமிழ் தேசிய கூட்டமைப்பு ஆகவே தமிழ் தேசிய கூட்டமைப்புடன் ஒத்துப் போகக்கூடிய அறிவாற்றல் நிறைந்ததுடன், சட்டம் சம்பிரதாயம் மற்றும் நிர்வாகம் தெரிந்த ஒருவரை தேர்ந்தெடுப்பது பெரிய பிரச்சினை அல்ல.

விசேடமாக வடமாகாணத்திற்கு நியமிக்கப்படுபவர் தமிழ் மக்கள் அதிகாரப் பகிர்வை நோக்கிய அரசியல் நகர்விற்குள் கூட்டமைப்பு இருக்கின்றதென்பதை உணர்ந்துகொள்ளக் கூடியவராக இருக்க வேண்டும். அது சிங்களவராக இருந்தாலும் கூட அவ்வாறான ஒருவரை நியமிப்பதே சிறந்தது என்றார். (மு-101)

## வரலாற்றுச் சின்...

குணரத்னம் வலியுறுத்தியதாக யாழ். மாநகர முதல்வர் இம்மானுவேல் ஆர்னோல்ட் தெரிவித்தார்.

ஒஸ்லோ நகரத்தின் பிரதி முதல்வர் 3 நாள் விஜயம் மேற்கொண்டு யாழிற்கு வருகை தந்துள்ளார். வருகை தந்த இவர் யாழ்.நகர முதல்வர் இம்மானுவேல் ஆர்னோல்டை யாழ்.மாநகர சபையில் நேற்று சந்தித்து கலந்துரையாடினார். அந்த சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசியலில் பெண்களின் பங்கு எவ்வாறு காணப்படுகின்றது. பெண்கள் அரசியலிலும் சரி ஏனைய சமூக வாழ்க்கையிலும் சரி முன்னோடிகளாக செயற்படுகின்றார்களா? அவ்வாறு செயற்பட முடியாவிடின், என்னென்ன தடைகள் இருக்கின்றன என்ற விடயங்களில் அதிக கவனம் செலுத்தியிருந்தார்.

இங்குள்ள இளைஞர் யுவதிகளின் எதிர்காலம் எவ்வாறு அமைய வேண்டும். அவர்கள் எவ்வாறு தங்களை மாற்றிக்கொள்ள வேண்டும் என்ற அடிப்படையில் பல்வேறு விதமான கருத்துக்களை முன்வைத்திருந்தார்.

நாட்டில் யுத்தம் முடிவடைந்த பின்னர் தற்போது முன்வைத்துள்ள அரசியல் விடயங்கள் எவ்வாறு நீடிக்குமா, நடைபெறுமா என்ற சந்தேகங்கள் தமது நாட்டில் இருப்பவர்களுக்கு இருக்கின்றது. அதனை எவ்வாறு நாங்கள் வெற்றிகொள்ள முடியுமென்ற விடயமும் உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பான தனது எண்ணங்களைப் பகிர்ந்திருந்தார்.

தற்போது இலங்கையில் ஏற்பட்டுள்ள அரசியல் சூழ்நிலை காரணமாக பயணத்தை இடைநிறுத்த எண்ணிய போதும், மீண்டும் நாட்டில் ஒரு அரசியல் ஜனநாயக சூழல் உருவாகியதன் காரணமாக தனது தாயக மண்ணுக்கு வரக் கூடியதாக இருந்தது.

யாழ்ப்பாண நகரம் முன்னரை விட சில முன்னேற்றங்கள் காணப்படுவதாகவும் எதிர்காலத்தில் நடைமுறையில் இருக்கும் திட்டங்களையும், நடைமுறைப்படுத்த வேண்டிய திட்டங்களையும் பகிர்ந்திருந்தோம்.

இதனூடாக வரலாற்று சின்னமாக மாற வேண்டுமென்பது அவரின் விருப்பம். இது தொடர்பாக அறுதியாக கூற முடியாது. கலாசார பண்பாட்டு பரிமாறல்களுடன், தமிழர்களாக எமது மண்ணில் எமது இருப்பை நிலைநிறுத்த வேண்டும்

புலம்பெயர் தமிழர்கள் தமது அரசியல் உரிமையை நிலைநிறுத்த மீண்டும் தமது பிரஜாவுரிமையைப் பெற்று அரசியல் ரீதியாக வலுச்சேர்க்க வேண்டுமென்ற கருத்துக்கள் பகிரப்பட்டன. (மு-101)

## அமைச்சரவை...

தலைமையில் விசேட வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளதால், இன்று அமைச்சரவை கூட்டத்தை நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை நேற்று இரவு அலரிமாளிகையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் அமைச்சர்களுடனான விசேட கூட்டமொன்று இடம்பெற்றுள்ளதுவும் அமைச்சரவை கூட்டத்தில் முன்வைக்கப்பட வேண்டிய யோசனைகள் குறித்து கலந்துரையாடப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (மு-3)

## கேரள கஞ்சாவு...

சக்தி மிக்க ஒருவர் பொலிஸ் பொறுப்பதிகாரிக்கு தொலைபேசி அழைப்பு ஏற்படுத்தினார். நீங்கள் கைது செய்து வைத்திருப்பவர்கள் எமது ஆதரவாளர்கள். அவர்களை உடனே விடுதலை செய்யுங்கள் என கட்டளையிடும் பாணியில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பிரமுகர் தெரிவித்துள்ளார்.

இதையடுத்து, பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியும் மறுபேச்சின்றி கஞ்சா கடத்தல்காரர்களை விடுதலை செய்தார்.

பளையில் கஞ்சாவுடன் கைதான கடத்தல்காரர்களையே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரமுகர் அழுத்தம் கொடுத்து விடுவித்துள்ளார். இந்த விவகாரம் உயர்மட்டத்திற்கு சென்றதையடுத்து, பளை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி உயர்மட்ட விசாரணையை எதிர்நோக்கியுள்ளார் என சண்டே ரைம்ஸ் ஆங்கில இதழ் இந்த தகவலை வெளியிட்டிருந்தது.

இந்நிலையில் குறித்த விடயம் எனது கவனத்திற்கு கொண்டுவந்த நிலையிலேயே நான் பிரதிப் பொலிஸ்மா அதிபரைத் தொடர்பு கொண்டு விடயத்தை விளக்கினேன். இந்த இடத்தில் குறித்த சம்பவத்துடன் பலர் தொடர்புபட்ட நிலையில் எவ்வாறு பொய்யான ஓர் தகவல் கொடுக்கப்பட்டது என்று தெரியவில்லையென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

அவர் ஊடகங்களுக்கு அனுப்பிவைத்துள்ள ஊடக அறிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். குறித்த ஊடக அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

செம்பியன்பற்றுப் பகுதியில் சிவில் உடையில்துப்பாக்கியுடன் நின்றவர்களை அப்பகுதி இளைஞர்கள் இராணுவத்திடம் ஒப்படைத்தமையினால் ஒப்படைத்த இளைஞர்கள் கஞ்சா கடத்தியதாக சிவில் உடையில் வந்தோர் தகவல் வெளியிட்டிருக்கின்றனர்.

செம்பியன்பற்றுப் பகுதியில் கடந்த 4 ஆம் திகதி ஓர் நிகழ்விற்கு செல்வதற்கு என்னால் ஒழுங்கமைக்கப்பட்டிருந்தது. இதே நேரம் 3 ஆம் திகதி மாலை அப்பகுதியில் சிலர் சிவில் உடையில் சந்தேகத்திற்கு இடமாக நீண்ட நேரமாக நடமாடியுள்ளனர். அதனை அவதானித்த அப்பகுதியின் சில இளைஞர்கள் அவர்களை அணுகி விசாரித்தபோது தாங்கள் பொலிஸார் எனக் கூறியுள்ளனர்.

இதன்போது குறித்த இளைஞர்கள் பொலிஸார் எனக் கூறியவர்களிடம் அடையாள அட்டையை காண்பிக்குமாறு கோரியுள்ளனர். அதன்போது சிவில் உடையில் நின்றோர் கைத் துப்பாக்கிகளை காண்பித்துள்ளனர்.

இதன் காரணமாக அந்த இளைஞர்கள் துப்பாக்கியை காண்பிக்காது அடையாள அட்டையை காண்பிக்குமாறு கோரியுள்ளனர். இதனால் அங்கே சிவில் உடையில் நின்ற ஆயுததாரிகள் வாகனத்தில் அந்த இடத்தில் இருந்து நகர்ந்து சென்றதனால் சில இளைஞர்கள் அவர்களை மோட்டார் சைக்கிளில் பின்தொடர்ந்த அதேநேரம் அருகில் இருந்த இராணுவ முகாமிற்கும் தகவல் வழங்கியுள்ளனர். இதனையடுத்து இராணுவத்தினர் குறித்த வாகனத்தை விரட்டிப்பிடித்துள்ளனர்.

அவ்வாறு பிடித்தபோது சிவில் உடையில் ஆயுதங்களுடன் இருந்த அனைவரும் பொலிஸார் என இராணுவத்தினர் அடையாளம் கண்டுள்ளனர். இருப்பினும் பளைப் பொலிஸாருக்கு வழங்கிய தகவலின் பிரகாரம் பளைப் பொலிஸாரும் அந்த இடத்திற்கு வந்திருந்தனர்.

அங்கே சிவில் உடையில் ஆயுதங்களுடன் இருந்த பொலிஸார் சீருடைப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர். அவ்வாறு ஒப்படைக்கப்பட்ட சிவில் உடைப் பொலிஸார் பின்தொடர்ந்து வந்த கிராம இளைஞர்கள் தம்மை தாக்கியதாகவும் தாம் விசேட போதைப்பொருள் தடுப்பு பிரிவு பொலிஸார் எனப் பளை பொலிஸாரிடம் தெரிவித்தனர். இதனால் பின்தொடர்ந்து சென்றவர்களிலும் 4 இளைஞர்களைப் பொலிஸார் கைது செய்திருந்தனர்.

குறித்த விடயம் எனது கவனத்திற்கு கொண்டுவந்த நிலையிலேயே நான் பிரதிப் பொலிஸ்மா அதிபரைத் தொடர்பு கொண்டு விடயத்தை விளக்கினேன். இந்த இடத்தில் குறித்த சம்பவத்துடன் பலர் தொடர்புபட்ட நிலையில் எவ்வாறு பொய்யான ஓர் தகவல் கொடுக்கப்பட்டது என்று தெரியவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (மு-3)

## சு.கவுடன் மகிந்த...

புதிய கட்சி தோற்றம் பெற வழியேற்படுத்தியது எனவும் குறிப்பிட்டார். இது தொடர்பில் மேலும் கருத்து தெரிவித்த அவர்,

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் எதிர்கட்சி தலைவர் மகிந்த ராஜபக்ஷ கூட்டணியமைத்துக் கொள்வது மீண்டும் இரண்டாவது அரசியல் நெருக்கடியினை ஏற்படுத்தும்.

இரண்டு தரப்பினரும் புதிய கூட்டணி ஒன்று அமைக்கும் பொழுது கருத்து முரண்பாடுகள் தோற்றம் பெறுவது இயல்பு. பொதுஜன பெரமுன முன்னணியினர் ஒரு போதும் தங்களின் தலைமைத்துவத்தினையும், கட்சியின் சின்னத்தினையும் விட்டுக் கொடுக்கமாட்டார்கள்.

இதனால் வீண் முரண்பாடுகளே இடம்பெறும். ஆகவே தேர்தல்கள் இடம்பெறும் வரையில் முழுமையாக இரண்டு தரப்பினரும் மக்களுக்கு சேவையாற்றினால் மக்களே தமக்கான அரசாங்கத்தை தெரிவு செய்வார்கள் என்றார். (மு-3)

### மஹஜன சம்பத

திகதி 2019/01/06
சீட்டிழுப்பு இலக்கம் 3827
ஆங்கில எழுத்து: C
வெல்லப்பட்ட இலக்கங்கள்: 1 3 9 0 7 1
தேசிய லொத்தர் சபை

### நீரோகா

திகதி 2019/01/06
சீட்டிழுப்பு இலக்கம் 495
லக்கினம்: விருச்சிகம்
வெற்றி இலக்கங்கள்: 04 23 45 50 49
தேசிய லொத்தர் சபை

### கொவிசெத

திகதி 2019.01.06
சீட்டிழுப்பு இலக்கம் 1996
ஆங்கில எழுத்து: C
வெல்லப்பட்ட இலக்கங்கள்: 01 29 49 73
தேசிய லொத்தர் சபை

### தன நிதானய

திகதி 2019-01-06
சீட்டிழுப்பு இலக்கம் 98
ஆங்கில எழுத்து: P
வெற்றி இலக்கங்கள்: 13 36 46 71
தேசிய லொத்தர் சபை

# பொருளியல்
**S.Jeyakumar**
(B.A (Hons) Econ Spl, MA (Econ) PGDE)

**A/L 2019 Day Class**
இன்று (திங்கள்) மாலை 5.00
ஆரம்பமாகின்றது.
**கோண்டாவில்**
(ஐயப்பன் கோவில் அருகாமை)
தொடர்பு: 0777238597
(6813)

# Personal Classes
கோண்டாவில் (ஐயப்பன் கோவில் அருகாமை)
**A/L 2021**
**வர்த்தகப்பிரிவு**
ஆரம்பம்
08.01.2019
செவ்வாய் 3.00 pm
பொருளியல் : S. ஜெயக்குமார்
வணிகக்கல்வி : V.K. ரவீகரன்
கணக்கீடு : A.T. சுரேன்
தொடர்புகளுக்கு: 0777238597
(6812)

# குவைத் வேலைவாய்ப்பு
மோட்டார் சைக்கிள் டிலிவரி றைடர், மோ. சைக்கிள் மெக்கானிக், கார் சாரதி
சம்பளம் ரூ. 71,640/-
ஆரம்பக் கட்டணம் இல்லை
பதிவுக் கட்டணம் ரூ.200 மட்டுமே
Emerald Isle
Manpower & Travel Services
The Sri Lankan Recruitment Specialists
License No. 2268
221-1/1 மின்சார நிலைய வீதி 2ம் ஒழுங்கை, யாழ்ப்பாணம்
077 00 38 215 ☎ 021 2219 221
www.emeraldisle.lk jaffna@emeraldisle.lk
வடக்கின் 1வது & ஒரேயொரு வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம்

# ஆவரங்கால் சென்றல் மெடி கெயர்
இங்கு வேலை செய்வதற்கு பெண் தொழிலாளர் தேவை.
முன்அனுபவம் தேவையில்லை.
தொடர்புகளுக்கு:
077 694 4543
(6964)

# விரைவு பொதிகள் சேவை
**விசேட விலை குறைப்பு**

DELIVERY IN 3-5 DAYS
UK - 550 */=Kg
கனடா-900 */=Kg
ஜேர்மனி- 700 */=Kg
நெதர்லாந்து-700 */=Kg
(நிபந்தனைகளுக்குட்பட்டது)
0768226240
• மானிப்பாய் • யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • சாவகச்சேரி • நெல்லியடி • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை
V2 TRAVELS
(C-4943)

சுன்னாகத்தில்
# DMI
JAFFNA
CHUNNAKAM BRANCH
(Commerce Unit)
ஜனவரி- 12 மாலை - 4

| A/L | நீங்கள் ஏன்? காத்திருக்க வேண்டும் |
|---|---|
| 2021 | உங்களின் மிகச்சிறந்த அத்திபாரத்திற்கு |
| 2020 | உங்களின் மிகச்சிறந்த மேம்படுத்தலுக்கு |
| 2019 | உங்களின் இறுதிப்பரீட்சையை இலகுவாக எதிர்கொள்வதற்கு |

ஆசிரியர்கள்
கணக்கீடு - D.Sam
பொருளியல் - S.S. சிறி
வணிகக்கல்வி - T.S. றிஷி
DMI Computer Education இக்கு முன்பாக - சுன்னாகம்
NSB இக்கு அருகில் - சுன்னாகம்
(சீ-5035)

# அவுஸ்ரேலிய வேலைவாய்ப்பு
**பஸ் & டீசல் மெக்கானிக்**
சம்பளம் ரூ. 547,902/-
ஆரம்பக் கட்டணம் இல்லை
பதிவுக் கட்டணம் ரூ.200 மட்டுமே
Emerald Isle
Manpower & Travel Services
The Sri Lankan Recruitment Specialists
License No. 2268
221-1/1 மின்சார நிலைய வீதி 2ம் ஒழுங்கை, யாழ்ப்பாணம்
077 00 38 215 ☎ 021 2219 221
www.emeraldisle.lk jaffna@emeraldisle.lk
வடக்கின் 1வது & ஒரேயொரு வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம்

# A/L - Day Class
**கணக்கீடு**
**திரு.S.R.வின்சன்**
R.D.S மல்லாகம்: 09.01.2019
NAC மானிப்பாய் : 08.01.2019
தொடர்புகளுக்கு: 0776947162
(6968)

# வேலைவாய்ப்பு
O/L, A/L முடித்த உங்களுக்கு சகல பிரதேசத்திலும்
**வேலைவாய்ப்பு - 150**
பயிற்சியின் போது உணவு, தங்குமிட வசதியுடன் 14,500/= - 25,000/= வரையிலான சம்பளம், பயிற்சியின் பின் 45,000க்கு மேல் சம்பளம் பெற்றுக்கொள்ளலாம். எமது யாழ்ப்பாண கிளை மூலம் உங்கள் பதிவினை மேற்கொள்ளலாம். 30வயதுக்குட்பட்டவர்கள் தொடர்பு கொள்ளவும்.
தொடர்புகளுக்கு: 0775528534, 0215679002


## புதிய..

ப்பினர் வடக்கு கிழக்கு உட்பட நாட்டில் வாழும் தமிழ் மக்களின் அடிப்படை பிரச்சினைகளுக்கு தீர்வு காண இதுரையில் தமது எதிர்கட்சி பதவியை பயன்படுத்தவில்லை. வடக்கு மக்களும் புதிய அரசியலமைப்பை கோரவில்லை எனவும் அவர் தெரிவித்தார். (இ-7)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

# உடனடி வேலைவாய்ப்பு
**(Management Trainees) 2019**
Granton
STUDY & WORK IN NORTH PROVINCIAL
யாழ்ப்பாணத்தில் இயங்கும் நிறுவனத்துக்கு முகாமைத்துவ பயிற்சிக்கு யாழ்ப்பாணம்/ கிளிநொச்சி/ முல்லைத்தீவு/ வவுனியா ஆகிய பிரதேசங்களில் பயிற்சி பெற விரும்புபவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

- பயிற்சி இலவசமாக வழங்கப்படும்.
- பயிற்சியின் போது கொடுப்பனவுகள் வழங்கப்படும். (Fixed income Package - 12,000/=)
- பயிற்சியின் பின்னர் அடிப்படை சம்பளம் EPF/ETF அடங்கலாக ரூபாய் 40,000/= மேல் பெறலாம்
- தொழில் நிரந்தரமாக்கப்படும்.
- பயிற்சிக் காலம் 03 - 06 மாதங்கள்.

GRANTON INTERNATIONAL (PVT) Ltd
423, Stanley, Road, Jaffna. Tel: 0767707759
(6959)

யாழ்ப்பாணத்தில் முதன்முறையாக150 ஸ்டோல்கள் ஒரே நேரத்தில்
**வீரசிங்கம் மண்டபம் - யாழ்ப்பாணம்**
# 4 நாட்களுக்கு மட்டும்
**2019 ஜனவரி 7ம், 8ம், 9ம், 10ம் திகதிகளில்**
**(திங்கள், செவ்வாய், புதன், வியாழன்)**
நேரம்: மு.ப. 10.00 - பி.ப. 8.00 வரை (பகலுணவு நேர இடைவெளி இல்லை)
இறக்குமதி செய்யப்பட்ட எக்ஸ்குலுசிவ் டிசைனர்
# ஜுவல்லரி விற்பனைத் திருவிழா - 2019
கோல்ட் கவரிங், ஹைதராபாத் பேர்ல்ஸ், ஜெய்பூர் குண்டன், கிறிஸ்டல், அமெரிக்கன் டயமன்ட், கொரியன் ஸ்டோன் ஜுவல்லரிகளை இலங்கை பெண்களும் வாங்கலாம்.
**ரூபாய் 200/- மற்றும் 400/- மட்டுமே**
உண்மையான ஏற்றுமதி பெறுமதி 1500/- முதல் 3000/- ஐ கொண்ட ஜுவல்லரிகளை நாம் உங்களுக்கு தருவது
**ரூபாய் 200/- மற்றும் 400/- மட்டுமே**
(சீ-5036)

இந்த விளம்பரத்தில் அனைத்து டிசைன்களின் பெயர்களையும் குறிப்பிட முடியாத படியால் சிலவற்றை மட்டுமே குறிப்பிட்டுள்ளோம்.

| | | | |
|---|---|---|---|
| கொரியன் ஸ்டோன் ஸ்டட்ஸ் ....... | ரூ.200/- மட்டுமே | கோல்ட் கவரிங் செயின் ....... | ரூ.400/- மட்டுமே |
| கோல்ட் கவரிங் செயின் பென்டட் ....... | ரூ.200/- மட்டுமே | அவுஸ்திரேலியன் டயமன்ட் நெக்லஸ் செட்... | ரூ.400/- மட்டுமே |
| அவுஸ்திரேலியன் டயமன்ட் பிங்கரிங் ....... | ரூ.200/- மட்டுமே | கோல்ட் பிளேட் வலயல் செட் ....... | ரூ.400/- மட்டுமே |
| வெஸ்டன் ஸ்டைல் இயரிங் ....... | ரூ.200/- மட்டுமே | கோல்ட் பிளேட் செயின் ....... | ரூ.400/- மட்டுமே |
| அமெரிக்கன் டயமன்ட் இயரிங் ....... | ரூ.200/- மட்டுமே | சில்வர் பிளேட் கொலுசு ....... | ரூ.400/- மட்டுமே |
| கோல்ட் கவரிங் ஆண்கள் மோதிரம் ....... | ரூ.200/- மட்டுமே | அவுஸ்திரேலியன் டயமன்ட் பிரேஸ்லட்.... | ரூ.400/- மட்டுமே |
| கொரியன் ஸ்டோன் சாரி பின் ....... | ரூ.200/- மட்டுமே | கோல்ட் கவரிங் பெண்கள் & ஆண்களுக்குரிய பிரேஸ்லட்... | ரூ.400/- மட்டுமே |

**விசேட சலுகை : திருமணம் மற்றும் பார்டிகளுக்கான விசேட ஜுவல்லரிகள் ரூ. 600/- முதல் ரூ. 8,000/- வரையான விலைகளில் உள்ளன.**
இடம் : **வீரசிங்கம் மண்டபம்**, 10/1, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
அனுமதி இலவசம் மொபைல் : 076 5886866

# வேலைவாய்ப்பு
Computer Technician
தொழில்சார் நிபுணத்துவத்துடன் கூடிய ஆற்றல்மிக்க கணினி திருத்துநர்கள் CCTV பொருத்துநர்கள் தேவை.
ஒப்பந்த அடிப்படையிலான மாதாந்த கொடுப்பனவு 45,000/=
**GUNA BEST PC 0779086737**
திருத்தம் விற்றல் வாங்குதல் பொருத்துதல்
யாழ்ப்பாணம் கிளிநொச்சி முல்லைத்தீவு வவுனியா மன்னார்
522 மானிப்பாய் வீதி ஓட்டுமடம் யாழ்ப்பாணம்.
43 பாங்சால்வீதி சந்தைமேல்மாடி சின்னக்கடை யாழ்ப்பாணம்.

Since 1994
# ICOF - VALARPIRAI COUNSELLING CENTRE
Reg.No J/DS/SS/NGO/31
**இணை உளவளத்துணையாளர்களை உருவாக்கும் பயிற்சி**
Co- Counsellor's Training Programme
வளர்பிறை உளவள நிலையத்தின் புலமை வாய்ந்த வளவாளர்களினால் இணை உளவளத்துணையாளர்களினை உருவாக்கும் பயிற்சிகள் 12.01.2019 அன்று எமது நிறுவனத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளதால் தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
- பயிற்சிக்காலம் :- 3 மாதங்கள் (100 மணித்தியாலங்கள்), பிரதி சனி, ஞாயிறு
- பயிற்சியின் பின்னர் அரச அங்கீகாரம் பெற்ற எமது நிறுவனத்தின் பெறுமதியான கற்கைநெறிச் சான்றிதழ் வழங்கப்படும்.
- கல்வித்தகமை :- க.பொ.த சாதாரணதர சித்தி
- விண்ணப்ப முடிவு :- 11.01.2019
- தகுதியானவர்கள் நேரடியாக தமது பதிவுகளினை உறுதிப்படுத்திக்கொள்ளவும்.

அனுமதி இலவசம்
**வளர்பிறை உளவளத்துணை நிலையம் (ICOF)**
இல.05, பிளச்சஸ் லேன், சுண்டிக்குழி, யாழ்ப்பாணம்.
தொடர்புகளுக்கு: 0772660209, 0212228238
(6936)

# வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை
- ஆகாய மற்றும் கடல் மார்க்கமாக, அதி விரைவு, விரைவு, சிக்கன பொதிகள் சேவை.
- கடலுணவு, இறைச்சி, எண்ணை வகை, மருந்துப் பொருட்கள், பழ வகைகள்,
- பால் மா வகைகள் என்பனவற்றையும் அனுப்பிக் கொள்ள முடியும்.
- நியாயமான கட்டணத்தில் நிறைந்த சேவை.

**20 வருட கால அசைக்க முடியாத நம்பிக்கை வென்ற நாம்**
# அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்
10, மாநகர சபை புதிய கட்டடத் தொகுதி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 3536
நெல்லியடியில் - இல.01, பெற்றோல் செற் லேன், நெல்லியடி. 076 443 1576
சாவகச்சேரியில் - இல.01, NDB வங்கிக் கட்டடம், தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி. 076 443 1576
(சீ-5034)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 07.01.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.